
வசந்தமே
அருகில் வா
சத்யா இராஜ்குமார்

# வசந்தமே, அருகில் வா!

## 1

''என்னமா, கிளம்பலாமா?''

''இதோ ஆச்சுங்க,'' என்று கணவனுக்குப் பதில் சொன்ன கோகிலா, மகள்கள் இருவரும் இன்னும் கிளம்பாமல் என்ன செய்கிறார்களென்று பார்ப்பதற்காக உள்ளே வந்தார்.

''வசு.''

.......

''வாசவி.''

''வந்துட்டோம்மா,'' என்று இளைய பெண் வாசவி முதலில் வெளியே வர, அடுத்ததாக வந்தாள் மூத்தவள் வசுமதி.

''என்னமா இது!''

''என்னமா, இதுக்கு இவ்வளவு ஆச்சரியம்?'' என்று தனது தாயைப் பார்த்துக் கேட்டாள் அந்த வசுமதி.

''பின்ன இருக்காதா? இப்படித் தரைய உரசற அள வுக்கு அதிசயமா சேலையக் கட்டிட்டு வந்து நிக்கற,'' என்ற தாயிடம்,

''ஏம்மா நல்லா இல்லையா?'' என்று கேட்டாள்.

''வயசுப் பொண்ணுக்கு சேலை நல்லா இல்லாம இருக்குமாம்மா? நம்பத்தான் முடியல,'' என்றார் கோகிலா.

''இப்ப பாருங்க,'' என்று தனது தாயின் அருகில் வந்திருந்த வசுமதி, அவரை நறுக்கென்று கிள்ளினாள்.

''ஷ்! என்னமா...'' என்று கோகிலா தனது பெரிய மகளைக் கோபமாகப் பார்க்க, ''நீங்க தான நம்ப முடிய லன்னு சொன்னீங்க. அதான். நடப்புதான். நம்புங்க,'' என்றாள்.

''சரிதான் வாங்க, இனியும் லேட் பண்ணினா அப் புறம் உங்கப்பா டென்ஷனாயிடுவார்.''

''சரிதான்மா, வாங்க,'' என்று மகள்கள் இருவரும் முன்னே நடக்க அவர்களைப் பின் தொடர்ந்தார் கோகிலா.

கோகிலாவைப் போலவே சோமநாதனும் தனது பெரிய மகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டுத்தான் போனார்.

''அட!''

''என்ன டாடி?''

''என்ன காஸ்ட்யூம்?''



''சேலை.''

''அதான் எப்படி?''

''வேண்டாம் டாடி, அப்புறம் அம்மாவக் கிள்ளின மாதிரி உங்களையும் கிள்ளிடப் போறா,'' என்று வாசவி சொல்ல, ''என்னது, இது வேறயா?'' என்று கேட்டார் சோமநாதன்.

''பின்ன இது நடப்புதான்னு நான் எப்படி உங் களுக்குப் புரிய வைக்கறதாம்?'' என்று கேட்டாள் வசுமதி.

''நானொன்னும் நம்ப முடியலைன்னு சொல்லலியே. இது எப்படி சாத்தியமாச்சுன்னு தான் கேக்கறேன்.''

''ஆசையா இருந்தது டாடி. அதோட அம்மா வேற எப்பப் பார்த்தாலும் பொண்ணா லட்சணமா நடந்துக் கோன்னு சொல்லிச் சொல்லியே எனக்குமே நாம பொண்ணு தானாங்கற சந்தேகம் வந்துடுச்சுன்னாப் பாத்துக் கோங்களேன்.''

''ஏன் எதுக்கு அப்படிச் சொல்றது, மாடர்னா டிரஸ் பண்றது தான யங் ஜெனரேஷனோட ஸ்டைல், அது லயும் வசுவோட டிரஸ்ஸிங் சென்ஸ் ரொம்ப டீஸண்டா பிரமாதமா இருக்குமே,'' என்று சோமநாதன் தனது மனை வியைப் பார்க்க, ''நல்லாக் கேளுங்க டாடி,'' என்றாள் வசுமதி.

''நீங்க வேற அவளுக்கு இன்னும் சொல்லிக் குடுக் காதீங்க,'' என்று கணவனைப் பார்த்துச் சொன்ன கோகிலா, ''அதுக்காக சேலை கட்டவும் தெரிய வேண்டாமா? அது நம்ம பண்பாடு இல்லையா?'' என்று அனைவரையும் பார்த்துப் பொதுவாகக் கேட்டார்.

''என்ன பண்பாடோ, கடவுளே! நான் இன்னைக்கு எங்கயும் புதையல் எடுக்காம வீடு வந்து சேரணும்,'' என்று வசுமதி விளையாட்டாகக் கடவுளை வேண்டிக் கொள்ள, ''நீதான, சான்சே இல்லக்கா,'' என்றாள் வாசவி.

''வசந்த் எங்க மம்மி?''

''அவன் நேரத்துலயே கிளம்பிப் போய்ட்டான்,'' என்ற தாயிடம், ''அடடா தெரிஞ்சிருந்தா நானும் கூடப் போயி ருப்பேனே,'' என்றாள் வசுமதி.

''உங்கிட்ட இருந்து தப்பிக்கத் தானக்கா அவன் நேரத்துலயே போனான்...''

''சரிசரி. வேகமா வாங்க,'' என்று சோமநாதன் முன்னே செல்ல, பெண்கள் மூவரும் அவரைப் பின் தொடர்ந் தனர்.

''வசந்த் எதுக்கு அப்பிடித் தெரியாமப் போனானாம்?'' என்று தனது தாயைப் பார்த்துக் கேட்டாள் வசுமதி. அதே நேரம் தனது மொபைலுக்குத் தம்பியிடமிருந்து அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசப் போனாள் வாசவி.

''பின்ன உங்க ரெண்டு பேரையும் கூட்டிட்டுப் போற பொறுப்பு அவந் தலைல விழுந்துடுமோன்னு தான் பயந்துட்டு நேரத்துலயே போய்ட்டான்,'' என்றார் கோகிலா.

''ஏன் எங்களுக்கெல்லாம் டிரைவிங் தெரியாதாமா?'' என்று வசுமதி கேட்க, ''அதான? அவனாவது டிரைவர் கூடத் தான் போயிருக்கான். ஆனா நாங்க நினைச்சிருந்தா நாங்களே காரை டிரைவ் பண்ணிட்டு அவனுக்கு முன் னாடியே போயிருப்போம்,'' என்று போனை வைத்துக் கொண்டே சொன்னாள் வாசவி.



''சரிதான்மா. சீக்கிரம் வந்து கார்ல ஏறுங்க,'' என்ற கோகிலா, ''உன்னைச் சேலைல பாத்து உங்கப்பா ஸ்டன் ஆயிட்டார் போலிருக்கு. அதான் இன்னும் கூலாவே இருக்கார்,'' என்று மகள்களுக்கு மட்டும் கேட்கும் விதமாக மெதுவாகச் சொல்லிச் சிரித்தார்.

''அட அப்பிடின்னா சொல்றீங்க?'' என்று கேட்டுக் கொண்டே வசுமதி பின் ஸீட்டில் ஏறி அமர அவளைத் தொடர்ந்து தானும் ஏறிக் கொண்டாள் வாசவி.

அதே நேரம் கோகிலாவும் முன் பக்கமாகக் கணவ னுக்கு அருகில் ஏறி அமர்ந்திருக்க, காரை ஸ்டார்ட் செய்திருந்தார் சோமநாதன்.

''அப்பாவே கூலாயிட்டார்னா ஓ.கே. ஓ.கே.!'' என்று சிரித்துக் கொண்டாள் வசுமதி.

''என்னக்கா?''

''இல்ல, இன்னைக்கு நான் நினைச்சதெல்லாம் நடக்கும்.''

''அப்படியென்ன நினைச்ச?'' என்று கேட்ட தங்கை யிடம், ''சும்மாவே மேடம் அழகு, இப்ப இன்னும் கொஞ் சம் கூட ஜொலிக்கறேனே, அதத்தான் சொல்றேன்,'' என்றாள் வசுமதி.

''ஜஸ்ட் சேலை கட்டியிருக்க, வேறென்ன?''

''என்ன வாசவி இவ்வளவு சிம்பிளா சொல்லிட்ட?''

''இருக்கறத சொல்றேன், இதுலென்ன இருக்கு?'' என்ற வாசவி, ''என்னக்கா, இன்னைக்கு நீ ஏதோ ரொம்ப வித்தியாசமா நடந்துக்கற மாதிரியிருக்கு,'' என்று கேட் டாள்.

தங்கையின் காதருகே குனிந்து ரகசியக் குரலில் வசுமதி ஏதோ சொல்ல வர, ஆவலுடன் தனது அக்கா விற்குக் காதைக் கொடுத்தாள் வாசவி.

"இல்ல, யாரோ ஒரு கிராமத்தான் இன்னைக்கு நம்ம டாடிகிட்ட வேலைக்கு வரப் போறானாம், அவங்கூட சேர்ந்து நானும் நம்ம பிஸினஸப் பாத்துக்கணுமாம். அப்பதான் டாடி நிம்மதியா ஃபாரின் போய்ட்டு வர முடியு மாம். அப்படின்னு நேத்து நைட் என்னைக் கூப்புட்டுச் சொன்னார். அதான் இந்த கெட்டப்."

"வாவ்! இதெல்லாம் எனக்குத் தெரியவே தெரி யாதே."

"ம், நீதான் சின்னப் பொண்ணாச்சே."

"ரெண்டு பேருக்கும் நாலு வயசு தான் வித்தியாசம்."

"என்னவோ நாலு மாசம் மாதிரி சொல்ற?" என்ற தனது அக்கா வசுமதியிடம், "அப்ப எங்கிட்ட எதுவுமே சொல்ல மாட்டீங்களாக்கும்?" என்று கேட்டாள் வாசவி.

"என்ன அக்காவும், தங்கையும் ஏதோ ரகசியம் பேசிட்டு வர்றீங்க?"

சோமநாதன் கேட்க, "பந்தா விட்றா டாடி. நீங்க நிஜமா இவள பிசினஸப் பாத்துக்கச் சொன்னீங்களா?" என்று நம்ப மாட்டாமல் கேட்டாள் அவருடைய சிறிய மகள் வாசவி.

"ஆமாம்மா, இன்னைக்கு நிலைல அவதான் எல்லாத் தையும் பாத்தாகணும்."

தந்தையின் பதிலில் பார்த்தாயா என்பதைப் போல இல்லாத சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டாள் வசுமதி.



"இவளால என்னத்த டாடி பாக்க முடியும்?"

"ஏம்மா, அவ்வளவு பெரிய காலேஜ்ல பிஸினஸ் அட்மினிஸ்ட்ரேஷன் அதுவும் ஃபர்ஸ்ட் க்ளாஸ்ல பாஸ் பண்ணியிருக்காளே! முடியாம என்ன?" என்று கேட்டார் சோமநாதன்.

"அதுக்காக வேணும்னாப் பாக்கச் சொல்லலாம்," என்ற தங்கையை, "எம்மேல நீ வெச்சிருக்கற நம்பிக் கையே இவ்வளவு தானா?" என்று கேட்டாள் வசுமதி.

"சரிதான் விடுக்கா," என்ற தங்கையின் விட்டேற்றி யான பதிலில் மனதிற்குள் ஒரு மாதிரியாகி விட்டிருந் தாள் வசுமதி.

"எது எப்படியோம்மா, இனிமேல் நீ விளையாட்டுத் தனத்தை யெல்லாம் கொஞ்சம் தள்ளி வெச்சுட்டு பிஸினஸப் பாத்தாகணும். அப்பதான் குடும்பத்தக் கூட தொடர்ந்து இதே மாதிரி லீட் பண்ணிட்டுப் போக முடியும்."

சோமநாதன் சொல்வதைப் பெண்கள் மூவராலுமே சீரியஸாக எடுத்துக் கொள்ள முடியவில்லை.

சரிதான் ஏதோ சொல்கிறார் என்றிருந்தது.

"அது மட்டுமில்லாம அந்தத் தம்பி ஹரிவரதன் ரொம்ப வேண்டிக் கேட்டுக்கிட்டதால மட்டும் தான் இங்க வர்றார்..."

"அப்படி எதுக்கு டாடி கெஞ்சிக் கூட்டிட்டு வரணும்?"

"அது அப்படியில்லமா," என்று சாலையில் கவன மாகக் காரைச் செலுத்திய சோமநாதன், "இப்ப நம்ம தொழில் இருக்கற நிலைமைக்கு நம்பிக்கையான அதே

சமயம் தொழிலையும் நல்ல விதமா வழி நடத்திக் கொண்டு போற ஒரு திறமையான படைத் தளபதி வேணும். அதான்,'' என்றார்.

''அதோட அந்தத் தம்பியும் படிச்சு முடிச்சுட்டு வெளிய வேல தான் தேடிட்டிருக்கார்...''

''ஓ அப்ப ஃப்ரஷ் கேன்டிடேட்டா?''

''இல்லமா, அவரும் நம்ம வசு மாதிரி பிசினஸ் சம்பந்தமா தான் படிச்சிருக்கார். படிப்ப முடிச்சுக் கூட நாலு வருஷமாச்சு. ஏன் வசுவ விடக் கூட அதிகமாவே படிச்சிருக்கார்.''

''ஓ.''

''இத்தன நாளும் அவரோட அப்பாகூட விவசாயத்தப் பாத்துட்டிருந்தார். பெரிய குடும்பம். அந்தத் தம்பிக்குக் கீழ ஒரு தம்பி, ரெண்டு தங்கச்சி. அவருதான குடும் பத்துல மூத்த ஆண்பிள்ளை...''

''எப்படியோ பட்டிக்காடுன்னு சொல்...''

வசுமதி சொல்லிக்கூட முடித்திருக்கவில்லை, மிகுந்த கோபம் வந்து விட்டிருந்தது சோமநாதனுக்கு.

''உன்னப் பெரிசா நம்பிக்கிட்டு பொறுப்புகளையெல் லாம் நான் உங்கைல ஒப்படைச்சுட்டுப் போகலாம்னு பாத்தா ஏம்மா இந்த மாதிரி பேசிட்டிருக்க?''

''ஸாரி டாடி, இனிமேல் இப்படியெல்லாம் பேச மாட் டேன்,'' என்று உணர்ந்து சொன்ன பெரிய மகளிடம், ''பேசறதுல தப்பில்லமா. ஆனா அதுக்கும் ஒரு வரை முறை இருக்கு,'' என்றார்.

''அப்புறம் இந்தத் தம்பிய ஒன்னும் சாதாரணமா நினைச்சுட வேண்டாம்மா. ஊர்ல நம்ம அத்தையோட



மில்ஸ் ரெண்டையும் இந்தத் தம்பி தான் ஒரு வருஷம் நிர்வாகம் பண்ணிட்டிருந்தாராம். லாஸ்ல போன தொழில தூக்கி நிறுத்தினதோட இல்லாம இப்ப தொழில் ரொம்ப நல்லாவும் போயிட்டிருக்காம்.''

தந்தை சொல்வதையெல்லாம் கேட்டு அதையும் பார்க்கத்தானே போகிறோமென்று பெண்கள் இருவரும் தங்களுக்குள் கமுக்கமாகச் சிரித்துக் கொண்டனர்.

தந்தை அவர் பாட்டுக்குச் சொல்லிக்கொண்டே வர, வேறு வழியில்லாது கேட்டுக் கொண்டும் வந்தனர்.

ஆனால் அதெல்லாம் அவர்களுடைய காதுகள் வரை கூடச் சென்றிருந்தால் அல்லவா?

சோமநாதன் கோகிலா தம்பதிக்கு மூன்று பிள்ளைகள். பெரியவள் வசுமதி. அடுத்ததாகவும் பெண் பிள்ளை வாசவி. கடைசியாக ஆண் பிள்ளை வசந்த்.

வசுமதி அந்த வருடம்தான் ஒரு பெரிய புகழ்பெற்ற கல்லூரியில் எம்.பி.ஏ. முடித்திருந்தாள்.

அடுத்ததாக வாசவி பன்னிரண்டாவது வகுப்பிலும், வசந்த் பத்தாவது வகுப்பிலும் படித்துக் கொண்டிருந் தார்கள்.

சோமநாதனுடையது இன்டஸ்ட்ரியல் டூல்ஸ்களை டீல் செய்யும் கடைகள். சிட்டியில் மொத்தம் மூன்று இடங்களில் அவருடைய கடைகள் இயங்கி வந்தன.

கடைதானே என்று சாதாரணமாக எடுத்துக் கொண்டு விட முடியாத அளவிற்கு ஒவ்வொன்றிலும் வியாபாரம் சூடு பறந்தது.

அவர்களுடைய தொழில் இன்டஸ்ட்ரியல் சம்பந்தப் பட்ட அனைத்து விதமான கட்டிங், ஹேன்ட் டூல்ஸ்

களையும் உள்ளடக்கியதாக இருந்தது, அதாவது அவை அனைத்தையுமே டீலர்ஷிப் எடுத்து வைத்திருந்தார்கள்.

அவற்றின் ஆத்தரைஸ்டு ஸ்டாக்கிஸ்ட்டுகளாகவும் இருந்தார்கள்.

தமிழ்நாடு முழுவதிலும் அவர்களுடைய தொழில் பரந்திருந்தது.

பெரிய பெரிய லிமிடெட் நிறுவனங்கள் முதல் சிறிய முதலீட்டு நிறுவனங்கள் வரை, பல நூற்றுக்கணக்கான தொழிலகங்களுக்கும் ஒட்டு மொத்த வினியோகஸ் தர்களாகவும் இருந்தனர்.

ஒவ்வொரு கடையிலும் நாளொன்றுக்குப் பல லட்சங்கள் வரை வியாபாரம் நடந்தது. கடன் மற்றும் உடனடிப் பணம் என இரண்டு விதங்களிலுமே அந்த வியாபாரம் இருந்தது.

ஒரு நாளுக்கே அப்படியென்னும் போது வருடத்தின் ஒட்டு மொத்த விற்பனை பல கோடிகளைத் தாண்டுவ தாக இருந்தது, அதாவது ஒவ்வொரு கடையிலும்.

தொடக்கத்தில் சிறிய அளவில் தொடங்கியிருந் தாலும் கூடப் போகப்போகச் சோமநாதன் தனது கடும் உழைப்பால் அந்த அளவிற்குக் கொண்டு வந்திருந்தார்.

ஆறு மாதங்களுக்கு முன்பு வரையும் கூட மூன்று கடைகளுமே நன்றாகத் தான் போய்க் கொண்டிருந்தன.

சரிதான், இப்பொழுது புதிதாக என்ன பிரச்சனை என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

கடந்த வருட பேலன்ஸ் ஷீட்டில் காண்பித்த நஷ்டக் கணக்கு தான் அவருடைய பயத்திற்குக் காரணம்.



அப்படியே அதைத் தொடர்ந்து மாதா மாதம் ரிட்டன்ஸ் சப்மிட் செய்யும்போது தெரியும் முரண்பாடுகளும்.

என்னதான் மூன்று கடைகளுக்கும் தினமும் சென்று விடுவதோடு அனைத்துக் கணக்குகளையும் சோமநாதன் தானும் பார்த்து விடுவார்தான் என்றாலும், அதிலெல் லாம் பெரிதாகப் பலனொன்றும் இருப்பது போலத் தெரியவில்லை.

முக்கியமாகக் கடந்த சில மாதங்களாக.

அதாவது நாளுக்கு நாள் ஒவ்வொரு கடைக்குள்ளும் அதிகரித்துக் கொண்டே போகும் கையாடல்களும், திருட்டுகளும் தொழிலைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பலவீனமாக்கிக் கொண்டே வருவது வெளிப்படை யாகவே தெரிந்தது.

சோமநாதன் மட்டும் முழு மூச்சுடன் தொழிலில் இறங்கினால் அவற்றைக் களைந்து தொழிலை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவது ஒன்னும் முடி யாத காரியமல்ல என்றாலும், அதற்கான கால அவகாசம் இப்பொழுது அவருக்கு இருக்கவில்லை.

அது மட்டுமல்லாமல் தொடர்ந்து தொழில் இப்படியே போய்க் கொண்டிருந்தால் அது முதலுக்கே மோசமாகி விடும் என்பதையும் அவர் அறிந்தே இருந்தார்.

அதாவது அந்தச் சமயமாகப் பார்த்து அவர் வெளிநாடு சென்று வர வேண்டிய கட்டாயம் ஒன்று வந்திருந்தது, தொழில் சம்பந்தமாகத்தான்.

சரிதான், வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு வந்து பிறகு தொழிலைப் பார்த்தால் போயிற்று என்ப தற்கும் வழியில்லை.

தொழிலை அந்த நிலையில் விட்டு விட்டு ஒரு சில நாட்கள் செல்வதே பிரச்சனையென்னும்போது, இரண்டு முழு மாதங்கள் - ஏன், அதற்கு மேலேயே - ஆனாலும் ஆகலாம் என்கிற நிலையில் கடைகளை அப்படியே விட்டுச் செல்வதைப் பற்றி சோமநாதனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

வெளிநாடு செல்வதையும் தவிர்க்கவோ தள்ளிப் போடவோ முடியாத நிலை. அந்த அளவிற்குப் புது டீலர்ஷிப் விஷயமாகவும், ஏற்கெனவே இருப்பதற்கான ஆத்தரைஸ்டு ஸ்டாக்கிஸ்ட்டுகளுக்கான மீட்டிங்கில் கலந்து கொள்வதற்காகவும் அவர் இரண்டு மாதங்கள் வெளிநாட்டிலேயே தங்கியாக வேண்டிய நிலை.

இப்படியொரு இக்கட்டான நேரத்தில் ஆபத்பாந்த வனாக சோமநாதனுக்கு நினைவிற்கு வந்தவன் தான் அந்த ஹரிவரதன்.

அவருடைய தங்கையும் சொந்தக் கிராமத்தில் இரண்டு காட்டன் மில்களை வைத்து நடத்தி வருபவரே.

தொழிலே சரியில்லை. என்னதான் உழைப்பையும் பணத்தையும் பெருமளவு முதலீடாகப் போடத் தயாராக இருந்தாலும் தொழில் ஒன்றும் அவ்வளவு திருப்திகர மாக இல்லை. பெரு நஷ்டம் வருவதற்கு முன்பே சம்பாதித்து வைத்திருக்கும் நல்ல பெயரோடு மில்கள் இரண்டையும் வேறு யாருக்காவது விற்று விடலா மென்று இருக்கிறோம் என்று இரண்டு வருடங்களுக்கு முன்பு வரை ஓயாது புலம்பிக் கொண்டிருந்த அவ ருடைய தங்கையைப் பற்றித்தான் அவருக்கு அப் பொழுது நினைவிற்கு வந்தது.



அப்படியிருந்த எனது தொழிலையே ஒரு ஆறு மாதங்கள் அவகாசம் கொடுங்களென்று கேட்டு அந்த ஹரிவரதன் பிரமாதமாக நிர்வகித்து இப்பொழுது நாளுக்கு நாள் நல்ல லாபத்தில் செல்லுமளவிற்கும் செய்து கொடுத்து விட்டிருக்கிறான் என்று பெருமையுடன் தனது தங்கை இப்பொழுது சொல்லிக் கொள்வதையும்.

தனது தங்கையே ஒருவரைப் பற்றிப் புகழுகிறார் என்றால் நிச்சயம் அவர்களிடம் விஷயமும் இருந்தாக வேண்டுமென்ற அசைக்க முடியாத நம்பிக்கை சோம நாதனுக்கு.

உடனே அவருடைய தங்கைக்கு போனில் அழைத்துப் பேசினார்.

இங்கு நாளுக்கு நாள் சென்று கொண்டிருக்கும் கடைகளின் தற்போதைய நிலையை எடுத்துச் சொன்ன தோடு, தவிர்க்க முடியாத அவருடைய உடனடி வெளி நாட்டுப் பயணத்தையும்.

அப்படி நடப்பது நடக்கட்டுமென்று எதையும் பொருட்படுத்தாமல் கிளம்பி விட்டால் திரும்பி வந்து, தான் சந்தித்தாக வேண்டிய பிரச்சனைகளையும் தனது தங்கை புரிந்து கொள்ளும் விதமாக எடுத்துச் சொன்னார்.

இங்கு புதிதாக ஒருவரை எடுத்து வேலையில் அமர்த்தி விட்டுப் போவதற்கான அவகாசம் இப்பொழுது எனக்கு இல்லை யென்பதோடு யோசனையாகவும் இருக்கிறது.

அவர்களும் கூட்டுக் கொள்ளையில் சேர்ந்து கொள்வ தற்கான வாய்ப்புகள் ஏராளம் இருக்கிறது என்பதோடு,

அவர்களால் தொழில் உடனே முன்னேற்றப் பாதையில் செல்லத் தொடங்கிவிடும் என்று நம்பிக்கை வைப்ப தற்கும் வழியில்லை.

அதனால் நீ ஏன் இங்குள்ள நிலையை எடுத்துச் சொல்லி மிகவும் திறமைசாலியான அந்தத் தம்பியை என்னிடம் வேலைக்கு அனுப்பி வைக்கக் கூடாது என்று கேட்டிருந்தார்.

அது மட்டுமல்லாமல் உனது நம்பிக்கைக்குப் பாத் திரமான அந்தத் தம்பியோடு எனது மகள் வசுமதியையும் உடனிருந்து அனைத்தையும் பார்த்துக் கொள்ளச் சொல்கிறேனென்றும். சொன்னது போலவே பேசிவிட்டு ஒரே நாளில் அழைத்து நல்ல பதிலைச் சொன்னதோடு, அங்குள்ள உனது நிலையை எடுத்துச் சொல்லி உடனே சென்று வேலையில் சேர்ந்து கொள்ள முடியுமா என்றும் அந்தத் தம்பியிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். எதற்கும் வேறு ஒரு வேலையாக இன்றைக்குக் காலை யில் அங்கு வரும் அந்தத் தம்பியை முடிந்தால் உன்னை நேரிலேயே வந்து பார்க்கச் சொல்லுகிறேன். அதற்கு மேல் நீயே பேசிக்கொள் என்று முடித்து விட்டிருந்த தனது தங்கையின் திறமையை என்ன முயன்றும் சோமநாதனால் மனதிற்குள் பாராட்டாமல் இருக்க முடிய வில்லை.

கடந்த ஒன்றரை மாதங்களாக மகளுக்கும் தொழிலின் நுணுக்கங்களைப் பற்றிக் கற்றுக் கொடுத்தது எந்த அளவிற்கு நல்லதாகிப் போயிற்றென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டார்.

அவர் வெளிநாடு கிளம்புவதற்கும் இன்னும் ஒரு வாரமே அவகாசம் இருந்தது.



இந்த ஒரு வாரத்திற்குள் முடிந்த அளவு தொழில் நுணுக்கங்கள் அனைத்தையும் அந்தத் தம்பிக்கும் சொல்லிக் கொடுத்து விட்டால் அதற்குப் பிறகு தனது மகளும் அந்தத் தம்பியுமாகத் தொழிலைத் தூக்கி நிறுத்தா விட்டாலும் கூட நிச்சயம் இனியும் கீழே போய் விடாமல் பார்த்துக் கொள்வார்களென்ற நம்பிக்கை இப் பொழுது சோமநாதனுக்கு நிறையவே வந்து விட் டிருந்தது.

ஆனால் அந்த ஹரிவரதனை நேரில் பார்த்துப் பேசிய பிறகோ தொழிலைத் தூக்கி நிறுத்துவது மட்டுமல்ல, பிரமாதமாகக் கொண்டு செல்லவும் அவனால் முடியு மென்பதைப் புரிந்து கொண்டார்.

அதோடு வசுமதியின் பங்கும் சேர்ந்து கொண்டால், இப்பொழுது சுத்தமாகப் பயம் தெளிந்துவிட வெளி நாட்டுப் பயணத்தைக் கூட ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கி விட்டிருந்தார் சோமநாதன்.

## 2



எப்பொழுதும் பார்க் செய்யுமிடத்தில் சோமநாதன் காரைப் பார்க் செய்திருக்க, அனைவரும் இறங்கிக் கொண்டனர்.

அனைவரும் குடும்பத்தோடு கிளம்பி வருவதற்கு வேறொரு முக்கியமான காரணமும் இருந்தது.

அதாவது அன்றைய நாள் ஏப்ரல் மாதத்தில் முதல் தேதி.

கடையில் புது வருடக் கணக்கு துவங்கப்படும் நாள்.

அதற்காக ஒவ்வொரு வருடமும் இந்த நாளில் இப் படித்தான் குடும்ப சகிதமாக வந்து செல்வது வழக்கமா என்று பார்த்தால் அதுவும் அப்படியில்லை.

தந்தையும் தாயும் தங்களுக்குள் பேசிக் கொண்டே முதலில் கடைக்குள் சென்றிருக்க, தனது அக்காவின் காதருகில் சென்று, ''என்னக்கா, அந்தப் பட்டிக்காட்டான் வந்தாச்சா?'' என்று கேட்டாள் வாசவி.

''வேண்டாம்பா, அப்பா சொன்னதுக்காகவாவது இனிமேல் அப்படிப் பேச வேண்டாமே,'' என்றாள் வசுமதி.

''ஏன், நாம இருக்கறதத் தான் சொல்றோம்.''

''இருந்தாலும்...''

''அப்பா எதுவுமே சொல்லாம விட்டிருந்தா நமக்கும் ஏன் இப்படியெல்லாம் தோணியிருக்கப் போகுது. அவரு அந்த ஆளப்பத்தி ஓவர் பில்டப் கொடுக்கப் போய்தான நமக்கும் இப்படியெல்லாம் பேசத் தோணுது.''

''வேண்டாம் வாசவி.''

''சரிதான் விடு, ஆமா அந்த ஹரிவரதன் ஆள் பார்க்க எப்படியிருப்பார்?'' என்ற தங்கையிடம், ''கிராமத்துல இருந்து வர்றவங்க தான, குண்டா குள்ளமா முக்கியமா ஒரு குட்டிப் பானையளவு தொப்பையோட...''

''அது சரிதான், தொழிலும் வேற விவசாயமாச்சே!'' என்ற வாசவி, ''ஆமாக்கா, நீ எப்படி அவருகூட சேர்ந்து



பிசினஸ் பாக்கப் போற. அதுவும் ரெண்டு மாசத்துக்கு?'' என்று கேட்டாள்.

''தெரியல வாசவி. படிச்சு முடிச்சாச்சு. இனி ஜாலியா என் இஷ்டத்துக்கு இருக்கலாம்னு இருந்தேன். அதுக்கு வழியில்லாமப் போயிடுச்சு.''

''அக்கா! ஒரு ஐடியா.''

''என்ன?''

''பேசாம ஏதோ ஒரு காரணத்தச் சொல்லி இந்த டாடிகிட்டிருந்து தப்பிச்சுடு.''

''அது சரி. நீ சின்னப் பொண்ணுங்கறத எப்படியெல் லாம் ப்ரூப் பண்றேன்னு பாத்தியா? அந்த ஹரிவரத னுக்கு நம்ம யாரோ! ஆனாலும் அத்தை கேட்டுக்கிட் டாங்களேங்கறதுக்காக இங்க வர்றதுக்கு சம்மதிச் சிருக்கார். அப்படியிருக்கும்போது இந்தத் தொழில் தான் நமக்கு எல்லாமே, அப்ப நாம எந்த அளவுக்கு ரெஸ் பான்ஸிபிளா நடந்துக்கணும்! யோசிச்சுப் பாரு.''

''அதுக்காக சும்மாவா வேல செஞ்சு குடுக்கப் போறார், அதுக்கான சம்பளத்தையும் வாங்கிக்கத் தான போறார்.''

''போதும் வாசவி. சம்பளம் தான் முக்கியம்னா உல கத்துல ஆயிரம் வேலையிருக்கு. அதுலயும் திறமையிருக் கறவங்களுக்கு சொல்லவா வேணும். எதுக்காக நம்ம அத்தையோட வார்த்தைகளுக்கும் கொஞ்சம் மதிப்புக் கொடுத்து இங்கு வரப் போறார், அவரு மனசுக்குப் பிடிச்ச வேற ஏதாவது வேலையப் பாத்துட்டுப் போகாம.''

''அப்ப மனசுக்குப் பிடிக்காம தான் அந்த ஹரிவரதன் இந்த வேலையப் பாக்கவே வர்றார்னு சொல்றியா?''

''தெரியல. அத இங்க வந்து பாத்துட்டு அவருதான் சொல்லணும்.''

''என்ன இருந்தாலும், நீ பாவம்...''

''போதுமே வாசவி, முதல்ல மத்தவங்களோட திறமையக் குறைச்சு மதிப்பிட்றது ரொம்பப் பெரிய முட்டாள்தனம். தெரிஞ்சுக்கோ.''

''ஸாரிக்கா, நானும் மனசார ஃபீல் பண்ணியெல்லாம் எதையும் சொல்லல. சும்மா ஒரு பேச்சுக்குத்தான்,'' என்ற தங்கையிடம், ''சரிதான். இனிமேல் அது கூடச் சொல்லாத,'' என்றாள் வசுமதி.

என்னதான் தங்கையுடன் சேர்ந்து விளையாட்டாக ஏதேதோ பேசினாலும் கடந்த ஒன்றரை மாதங்களாகத் தந்தையுடன் சேர்ந்து தொழிலைப் பார்த்துக் கொண்டிருந்த வசுமதிக்கு நடப்பின் தீவிரம் நன்றாகவே உறைத்தது.

இப்பொழுதும் தொழில் மிகவும் நன்றாகவே போய்க் கொண்டிருந்தாலும் கூட, உள்ளிருக்கும் சில பெருச்சாளிகள் முதலுக்கே மோசம் செய்யக் காத்துக் கொண்டிருப்பதை முதலில் தடுத்தாக வேண்டியிருந்தது.

தந்தையும் அதற்காகத்தான் பார்க்கிறார் என்பதும் புரிந்தது.

''வசுமதி!''

தந்தை தன்னை அழைப்பது கேட்க, வேகமாக உள்ளே சென்றாள்.

கடை ஊழியர்கள் நட்புடன் சிரித்ததையும், விஷ் செய்ததையும் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டாள்.



அதற்குப் பிறகு தான் அங்கே புதிதாக நின்று கொண்டிருந்த அந்த இளைஞனைப் பார்த்தாள்.

ஆறடிக்கும் அதிகமான உயரத்துடனும், எங்கேயும் ஒரு பிடி சதைகூட அதிகமென்று சொல்லிவிட முடியாத அளவிற்குக் கட்டான உடலமைப்புடனும் பார்க்க கனகச்சிதமாக இருந்தான் அந்த இளைஞன்.

''வசு!''

''சொல்லுங்க டாடி.''

''இவர்தாம்மா ஊர்ல இருந்து நம்ம அத்தை அனுப்பியிருக்கற அந்த ஹரிவரதன் தம்பி.''

அப்படியா என்று அந்த ஹரிவரதனைப் பார்த்துச் சம்பிரதாயத்திற்கு ஒரு புன்னகையை உதிர்க்கக் கூட வசுமதியால் முடிந்திருக்கவில்லை.

அந்த அளவிற்குத் தங்களுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் உண்மையான ஹரிவரதனுக்கும், அவளுடைய கற்பனையில் இருந்தவனுக்கும் இடையேயான தோற்ற வித்தியாசம் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசத்தை ஒத்திருந்தது.

''என்னமா?''

வேகமாக நடப்பிற்கு வந்திருந்தவள், ''ஸாரி டாடி, நான் வேறொரு யோசனைல இருந்தேன்,'' என்று ஒருவழியாகச் சமாளித்து அந்த ஹரிவரதனிடமும் முயன்று இரண்டு வார்த்தைகள் இயல்பாகப் பேசி வைத்தாள்.

தனக்கு அடுத்தபடியாக உள்ளே வந்த தனது தங்கையையும் எனது சிறிய மகள், பெயர் வாசவி என்று தந்தை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைப்பதைக் கண்டாள்.

தன்னுடைய நிலை தான் தங்கைக்கும் என்பதும் வசுமதிக்கு நன்றாகவே புரிந்தது. ஏன், தங்கையால் தன் அளவிற்குக்கூட முகத்தை இயல்பாக வைத்துக் கொண் டிருக்க முடியவில்லை என்பதும்.

தயக்கமோ, அலட்டலோ எதுவும் இல்லாமல் அனை வரிடமும் வெகு இயல்பாகப் பேசிய அந்த ஹரிவர தனின் யதார்த்தமான அணுகுமுறை சோமநாதனுக்கும் மிகவும் பிடித்துப் போனது.

அவசியத்திற்கு மட்டும் பதில் சொல்லிக் கொண்டு தான் சொல்ல வருவதை யெல்லாம் அப்படியே கிரகித்துக் கொள்ள முயன்ற அந்த ஹரிவரதனுடைய ஈடுபாட்டையும், அக்கறையையும் பார்த்தவருக்கு நிச்சயம் இந்தத் தம்பியால் அனைத்தும் முடியும் என்ற நம்பிக் கையும் முழுமையாக வந்து விட்டிருந்தது.

அது சரிதான். எப்பொழுது தனது தங்கையே சிபாரிசு செய்கிறாரோ, பிறகு நாமும் இதை எதிர்பார்த்திருக்கத் தானே வேண்டுமென்று நினைத்துக் கொண்டார்.

பிரமாதமான அணுகுமுறையும், திறமையும் மட்டுமா, தோற்றமும் அல்லவா அனைவரையும் மறு வார்த்தை பேசாமல் கட்டிப் போட்டுவிடும் அளவிற்கு நன்றாக அமைந்திருக்கிறது என்றும்.

வழக்கமான விதத்தில் புதுக் கணக்கு துவங்கப்பட் டதும், தொடர்ந்து வந்த சிறிது நேரத்தில் பெண்கள் மூவரும் வீட்டிற்குக் கிளம்பத் தயாராயினர்.

''வசு!''

''டாடி!''



''நீ இருமா. வீட்ல போய் என்ன பண்ணப் போற?''

''சரி டாடி, இருக்கறேன்.''

''அப்ப நாங்க ரெண்டு பேரும் கிளம்பறோம்,'' என்று வந்த கோகிலா, ''தம்பிய லஞ்ச்சுக்கு நீங்க வரும்போது வீட்டுக்கு அழைச்சுட்டு வாங்க,'' என்றவர், ''அவசியம் வாங்க தம்பி,'' என்று ஹரிவரதனிடமும் சொன்னார்.

''வர்றேன் ஆன்ட்டி.''

''ஆமா, வசந்த் எங்க?''

சோமநாதன் கேட்க, ''டிரைவர் கூட ஏதோ மெட் டீரியல் டெலிவரி குடுக்கணும்னு நீங்க வர்றதுக்குப் பத்து நிமிஷம் முன்னாடி தான் கிளம்பினார் சார்,'' என்று சற்று முன்னே வந்து பதில் சொன்னான் கடை ஊழியன்.

''ஓ, பெரிய மனுஷன் பிஸினஸப் பாக்க ஆரம்பிச் சுட்டானாக்கும்.''

...........

''என்னமா, ஏன் சிரிக்கற?''

''ஒண்ணுமில்ல டாடி,'' என்றவள் தந்தை அதை நம் பாதது அவருடைய முகத்தில் தெரிய, ''இல்ல, அவன் ப்ரண்ட்ஸ் கூட எங்கயோ பிக்னிக் போகணுமாம். அதான்...'' என்றாள்.

''ஓ! அப்பக் காரோட டிரைவரையும் சேத்துக் கூட் டிட்டுப் போய்ட்டான்னு சொல்லு,'' என்றவர், அதற்குப் பிறகு ஹரிவரதனுடன் மும்முரமாகப் பேச ஆரம்பித்து விட்டிருந்தார்.

அதாவது தொழில் பற்றிய விவரங்கள், தொழில் அப்பொழுது போய்க் கொண்டிருக்கும் நிலை

தொடர்ந்து இப்படியே போனால் தாங்கள் சந்திக்க விருக்கும் பிரச்சனை, அதைத் தடுக்க அதுவும் உடனே செய்ய வேண்டியவை என அனைத்தையும் எடுத்துச் சொன்னார்.

சோமநாதனின் ஏ.சி. அறையில் வைத்துத் தான் அவர்கள் அனைத்தையும் பேசினார்கள்.

வசுமதியும் உடன் இருந்தாள்.

இடையில் டீ வர, தானே இருவருக்கும் ஊற்றிக் கொடுத்து விட்டுத் தானும் எடுத்துக் கொண்டாள்.

இதில் மிகவும் சந்தோஷப்படக் கூடிய விஷயம் ஒன்றும் இருந்தது.

ஹரிவரதனுக்கு அந்தத் தொழிலைப் பற்றிய அனைத்து நுணுக்கங்களும் ஏற்கெனவே நன்கு தெரிந்திருந்தன.

படிப்பை முடித்துவிட்டு அது சம்பந்தமான வேலையில் தான் அவன் இரண்டு வருடங்கள் இருந்தான் என்பதுதான் அது.

அப்பொழுது தான் திடீரென்று தந்தைக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டு அவன் விவசாயத்திற்கு வர நேர்ந்தது என்பதும்.

''இப்ப அப்பாவுக்கு...''

''இப்ப நலமா இருக்கார், ஸார். அவர் முடியாமப் படுத்துட்டிருந்தது ஒரு மூணு வருஷத்துக்கு முன்னாடி. ஒரு மூணு மாசத்துலயே ஓரளவு குணமானவர் அதுக்கப்புறம் கொஞ்ச நாள்ல முழுமையாவே குணமாயிட்டார்,'' என்றான்.



''ரொம்ப சந்தோஷம். நான் இங்க இருக்கற நிலைமைய சொல்லிட்டேன். இனி நீங்க என்ன பதில் சொல்லப் போறீங்கன்றதுல தான் மேல நடக்க வேண்டியதப் பத்தி யோசிக்கணும்.''

அந்த ஹரிவரதனிடம் தனது தந்தையே தயக்கம் கலந்த மரியாதையுடன் பேசுவதை மனதிற்குள் ஒருவித ஆச்சரியத்துடன் உணர்ந்தாள் வசுமதி.

இதுதான் உண்மையான திறமைக்குக் கிடைக்கும் மதிப்பு போலும் என்றும்.

சில வினாடிகள் தயக்கத்திற்குப் பிறகு, ''நீங்க நிம்மதியா வெளிநாடு போய்ட்டு வாங்க. நான் இருந்து நல்ல விதமாப் பாத்துக்கறேன்,'' என்றான் ஹரிவரதன்.

''ஆனா...''

''சொல்லுங்க தம்பி.''

''என்னப் பொறுத்தவரைக்கும் எனக்குன்னு சில குறிக்கோள்கள் இருக்கு. அதன்படி பாத்தா இப்ப வரப்போற சில மாசங்கள் எனக்கு அவசியமில்லாத நேர விரயம்னு கூட சொல்லலாம். ஆனா ஒரேயடியா அப்படித்தான்னும் சொல்லிட முடியாது, சுசீலா ஆன்ட்டிக்கு எங்க குடும்பம் பட்டிருக்கற நன்றிக் கடனத் தீர்த்துக்கறதுக்கான ஒரு வாய்ப்பா நான் இத எடுத்துக்கறேன்.''

............

''இதக்கூட நான் ஏன் குறிப்பிட்டுச் சொல்றேன்னா நான் தொடர்ந்து இங்கயே இருந்துடுவேன்னு நீங்க நினைச்சுடக் கூடாதுங்கறதுக்காகத் தான். அதோட என்ன நம்பிப் பொறுப்புகள் ஒப்படைச்சுட்டதால நீங்க

இனிமேல் எந்தக் கவலையுமில்லாமப் போய் உங்க வேலைகளைப் பாக்கலாம்,'' என்று முடித்திருந்தான் ஹரி வரதன்.

''அதே மாதிரி உங்க தொழிலும் பழையபடி, ஏன் அதவிடக் கூடப் - பிரமாதமாப் போற அளவுக்கு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்துல செஞ்சு குடுக்கப் பாக்கறேன் ஸார்.''

''ரொம்ப நன்றி தம்பி. இப்ப நீங்க எனக்குச் செய்யப் போறது எவ்வளவு பெரிய உதவிங்கறத என் இடத்துல இருந்தாதான் உங்களால முழுமையாப் புரிஞ்சுக்க முடியும்,'' என்று உணர்ந்து சொன்னார் சோமநாதன்.

அதற்குப் பிறகும் கூட வெகுநேரம் வரை தொழிலைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பிறகு மற்ற இரண்டு கடைகளையும் கூடச் சென்று பார்த்துவிட்டு, அதற்குப் பிறகே மதிய உணவிற்கு வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

தந்தையும் ஹரிவரதனும் முதலில் அமர்ந்து கொள்ள, உணவு பரிமாறுவதற்குத் தனது தாய்க்குத் தானும் உதவி செய்தாள் வசுமதி.

''நீயும் வந்து உக்காந்துக்கோம்மா,'' என்று தனது தந்தை அழைத்ததில் தானும் உடனமர்ந்து கொண்டாள்.

மதிய உணவை முடித்துக்கொண்டு, ''சரி ஸார், அப்ப நாளைக்குக் காலைல இன்னைக்கு வந்த மாதிரியே வந்துட்றேன்,'' என்று எழுந்து விட்டிருந்தான் ஹரி வரதன்.

''அப்ப உங்க திங்ஸோடவே...''



''ஆமா ஸார், நாளைலிருந்து இங்கயே இருக்கற மாதிரி தயாரா வந்துட்றேன்.''

''ரொம்ப சந்தோஷம் தம்பி. நம்ம கெஸ்ட் ஹவுஸ் லயே தங்கிக்கலாம். மத்த சவுகரியங்களைப் பத்தியும் நாளைக்குப் பேசிக்கலாம்,'' என்று சோமநாதனும் எழுந்திருக்க, அங்கிருந்தவர்களிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டு விட்டிருந்தான் ஹரிவரதன்.

வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்துவிட்டு, அதற்குப் பிறகே உள்ளே வந்தார் சோமநாதன்.

''என்னமா?''

''இல்ல, எப்படிப் போனார் டாடி? அவரோட பைக் தான் கடைல இருக்கே.''

''இங்கிருந்து நம்ம காரை எடுத்துட்டுப் போறார், அங்க நம்ம கடைல கொண்டு போய்ப் போட்டுட்டு அங்கிருந்து அவரோட பைக்க எடுத்துட்டுப் போய்டு வார்மா.''

''ஓ.''

அப்படியென்றால் காரும் ஓட்டத் தெரியும்.

''என்னமா யோசனை...''

''இல்ல டாடி, இங்கிருந்தே எப்படி ஊருக்கு பைக்ல போக முடியும், தூரமாச்சேன்னு யோசிச்சேன்.''

''என்ன கார்ல போக ரெண்டு மணி நேரம் ஆகும்னா டூ வீலருக்கு இன்னும் கொஞ்சம் நேரம் அதிகமாப் புடிக்கும். அவ்வளவுதான்.''

''அது சரிதான் டாடி,'' என்றவள், ''இதுக்கு மேல சுத்தமா முடியாது. நான் உடனே போய் என் காஸ்ட்யூம

மாத்தியாகணும்,'' என்று சிரித்துக் கொண்டே சென் றாள்.

தன்னறைக்கு வந்து விட்டிருந்த வசுமதியால் என்ன முயன்றும் ஹரிவரதனைப் பற்றி எண்ணாது இருக்க முடியவில்லை.

சத்தியம் செய்தாலும் கூட அவனைக் கிராமத் திலிருந்து வந்தவனென்று யாரும் நம்ப மாட்டார்களே என்று ஆச்சரியத்துடன் நினைக்கத் தோன்றியது.

அதற்காக வசுமதியும் ஒன்றும் பட்டிக்காட்டிலிருந்து வந்தாலே அசட்டுத்தனமான பழக்க வழக்கங்களுடனும் கிராமத்துத் தோற்றத்துடனும் தான் இருப்பார்களென்று நினைத்து விடவில்லை.

பக்கா கிராமம், தொழிலும் விவசாயம் என்பதையெல் லாம் கூட்டிக் கழித்துப் பார்த்து வருபவன் இப்படித்தான் இருப்பான் என்று மனதிற்குள் ஒரு தோற்றத்தை உரு வகப்படுத்தி வைத்திருந்தவளுக்கு, தனது தந்தையைப் போல - ஏன், தந்தைக்கும் கூட லேசான தொப்பை இருக்கிறதே, அவரை விடவும் நாகரிகமான - தோற்றத் துடன் ஒரு இளைஞன் வந்து நின்றதை அவ்வளவு இயல்பாக எடுத்துக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஆனால் அந்த மாதிரியான எண்ணமும் கூட அப் பொழுது சிறிது நேரம் வரை மட்டுமே இருந்தது. போகப் போக அதுவும் கூடச் சரியாகி விட்டிருந்தது.

அதற்குப் பிறகு அவளது தந்தையை விடவும் கூட அந்த ஹரிவரதனின் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள் வசுமதி.



ஏன், இன்னும் இரண்டு முழு மாதங்கள் அவனுடன் தானும் வேலை செய்ய வேண்டியிருக்கிறதே என்பதை நினைக்கும் போது சற்றுப் பயமாகக் கூட இருந்தது.

## 3



ஒரு முக்கியமான வேலை விஷயமாக அன்று இரவு பாம்பே கிளம்பிச் சென்று விட்டிருந்த சோமநாதன், மறுநாள் மதியம் தான் திரும்புவதாக இருந்தது.

அதனால் அடுத்த நாள் காலையில் தான் மட்டும் தனியாகத்தான் சென்று ஹரிவரதனை வரவேற்றாள் வசுமதி.

சோமநாதன் ஏற்கெனவே அவனுக்கு போன் செய்து சொல்லி விட்டிருந்தார் போலும். வசுமதி கெஸ்ட் ஹவு சுக்குச் சென்று சேரவும் ஹரிவரதன் அங்கு வரவும் சரி யாக இருந்தது.

''குட்மார்னிங்!'' என்று லேசான புன்னகையுடன் முத லில் பேசியது வசுமதி.

அவனும் அதை லேசான புன்னகை கலந்த தலை யசைவுடன் ஏற்றுக் கொண்டதோடு, பதிலுக்கு வாழ்த் தவும் செய்தான்.

ஏற்கெனவே வீட்டின் கதவைத் திறந்து வைத்திருந்த வசுமதி அவனை வீட்டிற்குள் வரவேற்றாள்.

''என்ன?''

தன்னுடைய பார்வையைப் பார்த்துவிட்டு ஹரிவரதன் விசாரிக்க, ''இல்ல, ஒரே ஒரு பேக் மட்டும்தான் கொண்டு வந்திருக்கீங்க போலிருக்கு!'' என்று தயக்கத்துடன் கேட்டாள்.

''அது சரிதான். இதுலயே ஒரு வாரத்துக்கான டிரஸ், அதுக்கப்புறமும் தேவையான எல்லாமே இருக்கு. என்ன பாக்கறீங்க?'' என்றவனுக்கும் அவளைப் பன்மையில் அழைத்துப் பேசுவது என்னவோ மாதிரி, ஏதோ ஒட்டாத மாதிரி தான் இருந்தது.

அதைப் புரிந்து கொண்ட வசுமதியும் உடனே, ''நான் சின்னப் பொண்ணு தான். பரவாயில்ல. என்ன வா போன்னே கூப்புடுங்க,'' என்று சொல்லி விட்டிருந்தாள்.

''ஓ, அப்ப ஒருமைல கூப்புட்றதுக்கு வயசு வித்தி யாசம் மட்டும் போதுமா?'' என்று கேட்டவனின் குரலில் என்ன இருந்தது என்று வசுமதியால் சரியாகக் கணிக்க முடிந்திருக்கவில்லை.

ஏதோ வித்தியாசமாக.

ஏளனம்.

ஆமாம். அதேதான்.

அதே நேரம் ஹரிவரதனின் கவனம் வீட்டைப் பார்ப் பதில் இருக்க, தானே முன் வந்து அனைத்து விவரங் களையும் சொன்னாள் வசுமதி.

''என் ஒருத்தனுக்கு இந்த வீடு ரொம்பப் பெரிசு,'' என்றவனுக்கு என்ன பதில் சொல்வதென்று அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை.



''சரிதான். அவசியமான ரூம்ஸ மட்டும் யூஸ் பண் ணிக்கறேன்,'' என்று அதற்கான தீர்வையும் அவனே சொல்லிவிட, சரிதான் என்பதைப் போலப் பார்த்தாள் வசுமதி.

''நீங்க சாப்டாச்சா?''

''ஆச்சு. ஏன் நீ சாப்புட்லயா?''

''நானும் ஆச்சு. இல்ல, உங்களுக்கு ஃபுட்...''

வசுமதி முடித்துக் கூட இருக்கவில்லை. ''வெளிய பாத்துக்கறேன்,'' என்று விட்டிருந்தான் ஹரிவரதன்.

''உடம்புக்கு ஒத்துக்குமா?''

''சரி, என்ன பண்ணலாம்?''

''அங்க நம்ம வீட்ல இருந்தே கொடுத்து அனுப்பிட் றோம், எங்களுக்காகத்தான் நீங்களும் வந்து சிர...''

''யோசிச்சுச் சொல்றேன்,'' என்று பேச்சை முடித்துக் கொண்டவனிடம், அதற்கு மேல் முடிந்திருக்கவில்லை.

ஏன் இவனிடம் எதைப் பேசவும் இப்படித் தயக்கமாக இருக்கிறதென்று நினைக்கத் தோன்றியது.

''என்ன?''

''இல்ல, டாடி தான் அப்படின்னு சொல்லிக்கிட்டார். அதான்...'' என்று மென்று விழுங்கியவளிடம், ''சரிதான். கொஞ்சம் பந்தா பண்ணிட்டு அப்புறமா ஒத்துக்கலாம்னு பாத்தேன்,'' என்று இலகுவாகப் பேசினான் ஹரிவரதன்.

''அதுக்கு மேல என்னதான் கிராமத்தானா இருந் தாலும் சிட்டி கல்சர்ல நீங்கெல்லாம் வயித்துக்கு

எவ்வளவு சாப்பிடுவீங்களோ அவ்வளவு தான் நாங்களும் சாப்புடுவோம். அதனால சாப்பாட்டுக்கு ஒன்னும் அவ்வளவு முக்கியத்துவம் குடுக்க வேண்டிய அவசியமும் இல்ல.''

ஏன் இப்படியெல்லாம் சொல்கிறான்?

''அதுக்கும் மேல என்னதான் தொழில் விவசாயமாவே இருந்தாலும் நான் ஒன்னும் குண்டா குள்ளமா முக்கியமாக் குட்டிப் பான வயிறோட இல்ல பாரு.''

எதற்காக இதையெல்லாம் சொல்கிறான்?

கடவுளே! அப்படியானால்...

ஏனோ மனதிற்குள் ஒரு மாதிரியாகி விட, ''நீங்க...?'' என்று பயத்துடன் அவனைப் பார்த்தாள் வசுமதி.

''என்ன?''

''இல்ல, நாங்க பேசிக்கிட்டத நீங்க கேட்டுட்டிங்க போலிருக்கு...''

''அப்ப பேசினத ஒத்துக்கற?''

''ஸாரி, ரொம்ப ஸா...''

''அதெப்படி என்ன வேணும்னாலும் சொல்லிடுவீங்க. ஆனா ஒரு ஸாரி மட்டும் கேட்டுட்டா, அப்படியே விட்டுட முடியுமா?''

கடவுளே! அப்படியானால் இதைப் பெரிதுபடுத்திப் பிரச்சனையாக்குவானோ?

இப்பொழுதிருக்கும் சூழ்நிலையில் இது மட்டும் தந்தையின் காதுகளுக்குச் சென்றால்...



ஏனோ அதற்கு மேல் நினைத்துப் பார்க்கக் கூட வசுமதியால் முடிந்திருக்கவில்லை. பயத்தில் கைகால்கள் உதறலெடுத்து நெஞ்சு பதறிப் போய் விட்டிருந்தது.

தந்தையும் அதற்கு முதலே எச்சரிக்க வேறு செய்தாரே என்று தனக்குள் நினைத்துக் கொண்டவள், ''நாங்க அப்படிப் பேசினது தப்புதான். தயவு செஞ்சு மன்னிச்....''

''அதெப்படி அவ்வளவு சுலபமா விட்டுட முடியும்?'' என்று ஹரிவரதன் சொல்லிக்கூட முடித்திருக்கவில்லை, ஒருவிதப் பயத்தில் கண்கள் கலங்கிப் போய் விட்டிருந்தன வசுமதிக்கு.

ஹரிவரதனும் அதைச் சற்றும் எதிர்பார்த்தான் இல்லை.

உடனே, 'கூல் பேபி கூல்!' என்றான்.

சில வினாடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் வசுமதி. ''அப்படின்னா மன்னிச்சுட்டிங்களா...''

''எதுக்கு மன்னிக்கணும், நாந்தான் தப்பாவே எடுத்துக்கலையே.''

அப்படிச் சொன்னவனின் முகத்தைப் பார்த்தவளால் அதற்குப் பிறகு தான் இயல்பாக மூச்சு விடக்கூட முடிந்தது.

''ரொம்ப தேங்க்ஸ்,'' என்று உணர்ந்து சொன்னவளிடம், ''பின்ன நீதான் எனக்காக உன் தங்கச்சி கிட்ட வரிஞ்சு கட்டிக்கிட்டுப் பேசினயே,'' என்றான்.

என்ன பேசினோம் என்று யோசிக்க முயன்றவள் உடனே அதை விட்டுவிட்டு, ''அப்ப என் தங்கச்சி மேல கோபமா?'' என்று கேட்டாள்.

உடனே, ''அதான் உன் தங்கையாச்சே, பின்ன எப்படிக் கோபப்பட முடியும்?'' என்று கேட்டவனின் முகத்தில் என்ன இருந்தது என்று ஆராய முயன்றாள் வசுமதி.

அவனுடைய முகத்திலிருந்த லேசான புன்னகை அவன் நடப்பை இலகுவாக்குவது புரிய, ''ரொம்ப தேங்க்ஸ்,'' என்று தானும் கூடச் சிரிக்க முயன்றாள்.

அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசினாள்.

சில வினாடிகள் பேசியவள், பிறகு ஓ.கே. டாடி என்று போனை வைத்தாள்.

''அப்பா நான் இங்க வந்துட்டேனான்னு கேட்டார். அவரும் இன்னும் ஒன் அவர்ல வந்துடுவாராம்.''

''சரி. கிளம்பலாமா?''

ஹரிவரதன் வர, ''சரி'' என்று அவனிடம் சாவியைக் கொடுத்தாள் வசுமதி.

இருவரும் வெளியே வந்திருக்க, தானே வீட்டைப் பூட்டிக் கொண்ட ஹரிவரதன் ''என்ன?'' என்று கேட்டான்.

''இல்ல, இந்தக் கார் அஃபீஸியல் யூஸ்க்குதான், நீங்க எடுத்துக்கோங்க.''

''நோ தேங்க்ஸ்.''

''இல்ல, அப்பா..''

''ஓ! அப்பாவே சொல்லிட்டாரா?'' என்ற ஹரிவரதனின் கேள்வியில் சிரித்தவள், ''அப்படின்னு இல்ல, இனி வெளிய கம்பெனிகளுக்குப் போக வேண்டிய அவசியம்



நிறைய வரும். அந்தச் சமயத்துல உங்களுக்கும் சவுகர்யமா இருக்கறதோட நானும் கூட வரலாம். அதான்,'' என்றாள்.

சரிதான் என்ற ஹரிவரதன், தனது டூ வீலரை எடுத்து கேட் காம்பவுண்டுக்குள் போட்டுவிட்டு வந்து வசுமதியிடம் கார் சாவியை வாங்கிக் கொண்டான்.

காரின் டிரைவிங் சீட்டில் ஏறி அமர்ந்திருந்தவன், வசுமதிக்குத் தனக்குப் பக்கவாட்டிலிருந்த முன் பக்கக் கதவைத் திறந்து விட்டான்.

அதற்குப் பிறகு இருவருமே தொழிலைப் பற்றித் தான் பேசினார்கள்.

துளியும் பந்தா பார்க்காமல் ஒவ்வொன்றையும் எந்தெந்த மாதிரி என்று ஹரிவரதன் கேட்டுத் தெரிந்து கொள்ள முயன்றதில் தயக்கம் நீங்கித் தானும் சுவாரஸ்யமாகப் பதில் சொல்லிக் கொண்டே வந்தாள் வசுமதி.

முக்கியமாக முன்பு ஒருமுறை கடைக்குப் புதிதாக வந்திருந்த டிரைவர் ஒருவனை நம்பிக் காரில் அமர்ந்து சென்ற பாவத்திற்கு அவன் காரைக் கொண்டு போய் மரத்தில் மோதி விட்டதிலிருந்து வசுமதிக்குப் புது ஆட்களை நம்பிக் கொண்டு காரில் செல்லவே மிகவும் பயமாக இருக்கும்.

ஆனால் ஹரிவரதனின் டிரைவிங்கில் தானே ஓட்டுவதை விடவும் கூடத் தைரியமாக, உடன் அமர்ந்து சென்றாள்.

அந்த அளவிற்கு சடன் பிரேக் போடாமல், அதி வேகமாகவும் ஓட்டாமல், நிறுத்த வேண்டியது வருமென்று

தெரிந்தால் சற்றுத் தொலைவிலிருந்தே வேகத்தைக் குறைத்துக் கொண்டு வந்து நிறுத்துவது என இன்னும் அனைத்து விதங்களிலுமே அவனுடைய டிரைவிங் பிரமாதமாக இருப்பதைக் கண்டாள்.

அதே போல எதற்கும் அலட்டிக் கொள்ளாமல், எனக்கே அனைத்தும் தெரியும், அது என்ன மற்றவர்கள் எனக்குச் சொல்வது என்றெல்லாம் இல்லாமல் நடைமுறைக்கு யதார்த்தமாக இருந்த ஹரிவரதனின் அணுகுமுறை அவனிடம் பேசுவதற்கான இனிமையான சூழலையும் உருவாக்கித் தந்தது.

ஆனாலும் அது ஒரு எல்லை வரை மட்டுமே. அதற்கு மேல் அவன் யாரையும் அருகில் நெருங்க விட்டிருக்கவில்லை என்பதையும் அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

ஒரு விதத்தில் அதுவே மிகவும் வசதியாகவும் போயிற்று வசுமதிக்கு. தேவையற்ற பயமென்று எதுவுமின்றி ஒரு பெண்ணாக இயல்பாகப் பழக முடிந்ததென்று கூடச் சொல்லலாம்.

சோமநாதன் இருந்த ஐந்து நாட்களும் நாளொன்றுக்கு ஒவ்வொரு கடையாக மூன்று கடைகளுக்கும் ஹரிவரதனை அழைத்துக் கொண்டு போய்க் கடை ஊழியர்கள் முதல் அனைத்து நடைமுறைகளையும் அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

வசுமதியும் எப்பொழுதும் உடன் இருந்தாள்.

கடைசி இரண்டு நாட்களில் பெரும்பாலும் தன்னுடைய வேலைகளையும் பார்த்துக் கொண்டும், மீதி நேரங்களில் மட்டும் கடைக்கு வந்து போய்க் கொண்டும் இருந்தார் சோமநாதன்.



ஐந்தாவது நாள் அவர் கிளம்பியும் இருக்க, அவரை வழியனுப்புவதற்காக ஹரிவரதனும், வசுமதியும் விமான நிலையத்திற்குச் சென்று வந்தார்கள்.

''நீங்க தொழிலப் பாத்துக்கறது நானே இருந்து பாக்கறத விடவும் கூட திருப்தியாவும், நிம்மதியாவும் இருக்கு.

''என்னதான் வசுமதியும் உங்களுக்கு ரொம்ப உதவிகரமா இருப்பான்னாலும், அவ சின்னப்பொண்ணு, அதோட தொழிலுக்கும் புதுசு. அதனால நீங்க நடைமுறைல ஒரு சில அசவுகர்யங்கள சந்திக்க வேண்டியிருக்கலாம் ஹரிவரதன்...''

''நீங்க கவலைப்படாம தைரியமா போய்ட்டு வாங்க ஸார். எதுவா இருந்தாலும் சந்தேகம்னா உங்களயே கான்டேக்ட் பண்ணிக்கறோம். அதோட உங்க பொண்ணு வசுமதியையும் ஒன்னும் அவ்வளவு சாதாரணமா நினைச்சுட முடியாது. ரொம்ப பிரில்லியண்ட்,'' என்றான்.

''எல்லாத்துக்கும் மேல எங்க ரெண்டு பேரோட உழைப்பும் சேரும்போது ஓரளவுக்கு உங்க அளவுக்குக் கூட எங்களாலயும் செயல்பட முடியுன்ற நம்பிக்கையிருக்கு,'' என்று ஹரிவரதன் சொல்ல, ''அது சரி தான்பா,'' என்று தானும் தனது தந்தைக்கு நம்பிக்கை ஊட்டினாள் வசுமதி.

''சரிடாம்மா. எல்லாத்தையும் நல்ல விதமாப் பாத்துக் கோங்க.''

''ஓ.கே. டாடி. நீங்களும் உங்க ஹெல்த்தப் பாத்துக் கோங்க. நிம்மதியாப் போற வேலைய முடிச்சுட்டு வாங்க,'' என்று தனது தந்தைக்கு விடை கொடுத்தாள்.

மீண்டுமொரு முறை ஹரிவரதனிடமும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பியே விட்டிருந்தார் சோம நாதன்.

# 4



இருவரும் விமான நிலையத்தை விட்டு வெளியே வரும்போது நேரம் மதியம் இரண்டைக் கடந்திருந்தது.

ஹரிவரதன் காரை ஸ்டார்ட் செய்திருக்க, ஏறி அமர்ந் திருந்தாள் வசுமதி.

மதிய உணவை முடித்துக் கொள்வதற்காக ஒரு ஹோட்டலுக்கு வந்திருந்தவர்கள் இருவருக்கும் பிடித்த விதமாக ஆர்டர் கொடுத்துவிட்டு உணவிற்காகக் காத்திருக்கலாயினர்.

''ரொம்பப் பசி போல?'' என்று ஹரிவரதன் கேட்க, ''ஆமாம்,'' என்று உடனே ஒத்துக் கொண்டாள் வசுமதி.

''எனக்கு ரொம்ப நேரமாவே பசிதான். காலைல அம்மா செஞ்சிருந்த ரெண்டு டிபனுமே எனக்குப் பிடிக் காதது. அதனால வீம்புக்குன்னே சாப்பிடாமக் கிளம்பி வந்துட்டேன். அதான்,'' என்றாள்.

''நானும் சாப்புட்டேனே. ரொம்ப நல்லா இருந்தது...''

''பிடிக்கலேன்னாலும் சாப்புட்டிருக்கலாம் தான்,'' என்றவள், ''இனிமேல் நிச்சயம் இப்படிப் பண்ணவே மாட்டேன்,'' என்றாள்.



இன்னும் அவள் பாட்டுக்கு வசுமதிதான் பேசிக் கொண்டே போனாள். ஹரிவரதன் அதைச் சிறு புன்னகை யுடன் கேட்டுக் கொண்டதோடு சரி.

மற்றப்படி அவன் மறந்தும்கூட அவனைப் பற்றியோ அல்லது அவனுடைய குடும்பத்தைப் பற்றியோ எதை யும் சொன்னான் இல்லை.

அதோடு வசுமதியிடமே கூட அவன் அளவுக்கு அதிக மாக - ஏன், அவசியத்திற்கு மேல் - ஒரு வார்த்தை கூடப் பேச்சு வைத்துக் கொண்டிருக்கவில்லை.

அது மட்டுமல்லாமல், நீ சிறு பெண் என்னும் பாவ னையில் ஹரிவரதன் தன்னைத் தூர நிறுத்தியதில், இனிமேல் நாமும் கொஞ்சம் யோசித்துத் தான் வார்த்தை களை விட வேண்டுமென்று தனக்குள் நினைத்துக் கொண்டாள் வசுமதி.

நினைத்ததோடு மட்டுமல்லாமல், பின்வந்த நாட் களில் அதைச் செயல்படுத்தவும் தொடங்கி விட்டிருந் தாள்.

மறுநாளில் இருந்து ஹரிவரதன், வசுமதி இருவரும் வெகு மும்முரமாக வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தனர்.

முதலில் நிலுவையிலிருக்கும் வேலைகளை முடித்து விட எண்ணிக் கடை ஊழியர்களின் உதவி கொண்டு அதற்கான விவரங்களைச் சேகரிக்கத் தொடங்கினார்கள்.

ஒரு சில நாட்களுக்குள் அவர்கள் எதிர்பார்த்த அனைத் தையும் சேகரித்து முடித்திருந்தவர்கள், தொடர்ந்து அதன்படி வேலை செய்யவும் தொடங்கி விட்டிருந்தனர்.

அதற்கிடையில் நீண்ட நாட்களாகப் பெரிய அளவில் தொழிலகங்களில் தேங்கியிருக்கும் பணத்தை வசூலிப்ப தற்கான வேலைகளிலும் இருவரும் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினார்கள்.

முன்னரே அதற்கான அப்பாயிண்ட்மென்ட்டை வாங்கிக் கொண்டு நாளொன்றுக்கு ஐந்து கம்பெனிகள் வீதமாக இருவரும் நேரிலேயே சென்று பார்க்கவும் தொடங்கினர்.

அதற்கு அவர்கள் எதிர்பார்த்துச் சென்றதை விடவும் கூட நல்ல பலன் கிடைத்தது. ஒளிவு மறைவில்லாத நாகரிகமான நேரடிச் சந்திப்பில் அவர்களுக்கும் தொழில கங்களுக்கும் இடையேயான வியாபார நட்பு வலுப் பெற்றது.

அதனால் மேலும் நல்ல நல்ல ஆர்டர்கள் வந்ததோடு, வெளியே தேங்கி விட்டிருந்த பணத்தில் பெரும் பங்கை வசூலித்து விடவும் முடிந்தது.

அதே போலத் தொடர்ந்து வெளியூர்களில் இருக்கும் நல்ல கம்பெனிகளையும் நேரத்தை வீணாக்காத வகையில் முன்னரே வாங்கி வைத்துக் கொண்ட அப்பாயிண்ட்மென்ட்டின் பேரில் காலையில் நேரத்தி லேயே சென்று சந்தித்து விட்டு மாலைக்குள் கடை களுக்கு வந்து சேர்ந்தார்கள்.

அப்படி வெளியூர் சென்று வர வேண்டிய கட்டாயம் வாரத்தில் ஓரிரு முறை மட்டுமே வந்தது.

முடிந்த அளவிற்கு வெளியூர்களுக்கு மட்டும் போனி லேயே பேசி வேலைகளை முடித்தனர்.



எங்கும் வெளியே செல்ல வேண்டிய அவசியமில் லாத நேரங்களில் கடைகளுக்குள்ளும் நிறைய நல்ல மாற்றங்களைக் கொண்டு வந்தார்கள்.

அதில் முதலாவதாக வார விடுமுறை நாட்களையும் பயனுள்ள வகையில் செலவழிக்கத் தொடங்கினார்கள்.

அதன் முதல் அடியாக வாரத்திற்கொரு முறை ஊருக்குச் சென்று வர இருந்ததைத் தவிர்த்து விட்டிருந் தான் ஹரிவரதன். அவனே அந்த அளவிற்கு இருந்ததில் அதை விடவும் இரண்டு மடங்கு அதிகமாக அக்கறை எடுத்துக் கொண்டாள் வசுமதி.

அதன் அடுத்த அடியாகச் சேர்ந்தாற் போல வந்த இரண்டு விடுமுறை நாட்களையும் ஒரு பயனுள்ள வேலைக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

அதாவது மூன்று கடைகளுக்குள்ளும் முக்கியமாக விற்பனைக் கவுண்ட்டர் ஏரியாக்களில் ரகசியக் கேமராக் களைப் பொருத்தி அதைத் தங்களுடைய நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்கள்.

அனைத்திற்கும் மேலாகத் தோழமை உணர்வுடன் வெகு இயல்பாக நெருங்கிய வசுமதி, ஹரிவரதனின் வார்த்தைகளுக்குக் கடை ஊழியர்களிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கிடைத்தது.

அதனால் அவர்கள் இருவரும் சொல்லும் வேலை களைக் கடை ஊழியர்கள் சிரமேற் கொண்டு செய்து கொடுத்தார்கள், ஒரு சிலரைத் தவிர.

அதிலிருந்தே உள்ளிருந்து சுரண்டும் பெருச்சாளி களைக் கண்டு கொள்வது ஹரிவரதனுக்கு எளிதாயிற்று.

அவர்களைக் கையும் களவுமாகப் பிடிப்பதற்கு அவன் வசுமதியே அறியாமலும் சில வேலைகளைச் செய்திருந் தான்.

போகப்போக அதற்கும் நல்ல பலன் கிடைத்தது.

சோமநாதன் வெளிநாடு கிளம்பிச் சென்று அன்றோடு ஒரு மாதம் முடிந்திருந்தது.

இடையில் ஒரே ஒரு முறை மட்டும் அவனுடைய குடும்பத்தைச் சென்று பார்த்து விட்டு வந்திருந்தான் ஹரிவரதன்.

வெளிநாடு சென்றிருக்கும் சோமநாதன் திரும்பி வருவதற்குள் எப்படியோ தொழிலில் இருக்கும் குளறு படிகளைக் களைந்து நேராக்கி விட வேண்டுமென்பதில் அவனும் உறுதியாக இருந்தான்.

அப்பொழுது தான் வாக்குக் கொடுத்தபடி வேலையை முடித்துக் கொடுத்து விட்டுப் போய்த் தன்னுடைய வேலையைப் பார்க்கத் தொடங்கலாமென்ற எண்ணம் அவனுக்கு.

வசுமதிதான் இத்தனை நாட்களில் ஏதோ மலை யையே இடம் பெயர்த்து வைத்து விட்டாற் போலத் தனக்குள் மிகவும் சவாலாக உணர்ந்தாள்.

ஆனால் ஹரிவரதனுக்கு அப்படியில்லை என்பதும்.

அதிலும் சிரமமான வேலைகளைக் கூட வெகு இயல் பாகவும் சர்வ சாதாரணமாகவும் கையாண்டு அவன் வெற்றி கொண்ட விதத்தில் வசுமதி பிரமிப்பின் எல் லைக்கே சென்று விட்டிருந்தாள்.



அதோடு அவன் இதையெல்லாம் பெரிய விஷயமாக - ஏன், ஒரு பொருட்டாகக் கூட - எடுத்துக் கொண்டிருக்க வில்லை என்பதும் புரிந்தது.

மாறாக ஆரம்ப நாளில் இருந்த அந்த ஈடுபாட்டுடன் அவன் இப்பொழுதும் தொடர்ந்து வேலையில் செலுத் திக் கொண்டிருக்கும் அக்கறை அவன் மீது பெரு மதிப்பையும், மரியாதையையும் ஏற்படுத்தி விட் டிருந்தது வசுமதிக்கு.

அது மட்டுமல்லாமல் பார்வையிலும் கூடக் கண் ணியத்தைக் கடைப்பிடிக்கும் ஹரிவரதனுடன் ஒரு பெண்ணாக எந்தவிதப் பயமுமின்றி வெகு இயல்பாக வேலை செய்ய முடிந்தது அவளுக்கும் மிகுந்த மனத்திருப் தியைக் கொடுத்தது.

என்னதான் அவனிடம் இயல்பாகப் பேசிப் பழகுவது எளிதாகத் தோன்றினாலும், ஒரு எல்லைக்கு மேல் அவன் யாரையும் அனுமதிக்காததைச் சற்று வியப்புடன் கண்டாள்.

அதனாலேயே அவளுக்கு ஹரிவரதனின் மேலான ஈடுபாடு மனதிற்குள் சற்று அதிகமானதென்று கூடச் சொல்லலாம்.

ஆனால் அதை உணர்ந்து கொண்ட ஹரிவரதனோ தன்னை இன்னும் சற்றுத் தள்ளி நிறுத்துவதையும் வசுமதியால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

சரிதான் என்று அதைப் பொருட்படுத்தாமல் விட்டு விடவும் அவளால் முடிந்தது.

# 5



நீண்ட நாட்களாக அதிலும் கிட்டத்தட்டப் பல லட்சங்களைக் கொடுக்காமல் ஏமாற்றிக் கொண்டிருந்த ஒரு தொழிலகத்தின் எம்.டி.யைப் பார்ப்பதற்குப் பல நாள் முயற்சியின் பலனாக அன்று அப்பாயிண்ட்மெண்ட் கிடைத்திருந்தது.

அந்தக் கம்பெனியின் எம்.டி. பெரிய ரௌடி, யாருக்கும் எதற்கும் அஞ்ச மாட்டான் என்றெல்லாம் பரவலாகக் காதுகளில் வந்து விழுந்த செய்திகளில் எங்கே மறைமுகமாக மிரட்டுவானோ, வேறு வகையில் ஏதேனும் தொல்லைகள் கொடுத்து விடுவானோ என்று வசுமதிக்குள் உள்ளுக்குள் என்னவோ உதறலெடுத்துத் தான் போனது.

அதைப் புரிந்து கொண்ட ஹரிவரதனும் புன்னகை யுடன் நீ வர வேண்டாம், நான் மட்டும் போய் வரு கிறேனென்று முடித்து விட்டிருந்தான்.

தொடக்கத்தில் சரியென்று விட்டிருந்த வசுமதியும் ஹரிவரதன் கிளம்பிய நேரத்தில் நானும் உங்களுடன் வருகிறேனென்று கிளம்பி விட்டிருந்தாள்.

கடன் வாங்கியவனே நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு பதில் சொல்லும்போது நாம் எதற்காக இப்படிப் பயப்பட வேண்டுமென்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.



என்ன முயன்றும் எங்களால் அந்தக் கம்பெனியிட மிருந்து பேமெண்ட்டை வாங்கவே முடியவில்லை யென்று கடை ஊழியர்களும் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருக்கிறார்களே என்று கடந்த இரண்டரை மாதங்களில் வசுமதி தானும் பலமுறை காசோலைக்காக அந்தக் கம்பெனியின் அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்டில் இருந்து பலருக்கும் அழைத்துப் பேசி விட்டிருந்தாள்.

எம்.டி.யை மட்டும் அவளால் போனில் பிடிக்கவே முடிந்திருக்கவில்லை என்பதோடு அவளுடைய முயற்சி களுக்கான பலனும் பூஜ்யமாகவே தான் இருந்து வந்தது.

சரிதான், இன்றைக்குத் தான் அப்பாயிண்ட்மெண்ட்டே (அதை வாங்கியதும் வேறு யாருமல்ல, ஹரிவரதனே) கொடுத்து விட்டிருக்கிறார்களே என்று தானும் அவனுடன் கிளம்பி விட்டிருந்தாள் வசுமதி.

சரி, நேராகப் போய் எம்.டி.யைப் பார்த்துக் காசோலையைக் கேட்பான் என்று நினைத்துக் கொண்டு தான் வசுமதி ஹரிவரதனுடன் சென்றதும்.

ஆனால் அங்கு போய் அந்தக் கம்பெனியின் எம்.டி.யைப் பார்த்த பிறகுதான் அவளுக்கு விஷயமே புரிந்தது.

அதாவது ஹரிவரதனின் சாமர்த்தியமும் திறமையும். முக்கியமாக அவன் செய்திருந்த வியாபாரத் தந்திரம்.

கடனாக வாங்கியிருந்த இன்டஸ்ட்ரியல் டூல்ஸ் களுக்கு நீண்ட நாட்களாகப் பணத்தைத் தராமல் இழுத் தடித்துக் கொண்டிருக்கும் அந்தக் கம்பெனி அப்படி யெல்லாம் ஒன்றும் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்க வில்லை.

மற்றவர்களை ஏமாற்றும் அளவிற்குத் திறமை படைத்தவர்கள் ஏன் நஷ்டமடையப் போகிறார்கள்?

ஆஹா ஓஹோவென்று சொல்லுமளவிற்கு இல்லா விட்டாலும், ஓரளவிற்கு நன்றாகத் தான் போய்க் கொண் டிருந்தது.

ஏன் அப்படி நஷ்டத்திலேயே போனாலும் கூடக் கை நீட்டிக் கடன் வாங்கியவனுக்கு அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடமையும் இருக்கிறதல்லவா?

ஹரிவரதன் செய்திருந்ததும் இதைத்தான்.

அதாவது அந்தக் கம்பெனியின் தயாரிப்புகளை நான்கைந்து லட்சங்களுக்கு வாங்கிக்கொண்டு அதற்கு இரண்டு நாட்கள் தள்ளித் தேதியிடப்பட்ட ஒரு காசோலையைக் கொடுத்துவிட்டு வந்திருந்தான்.

தான் திருடன் பிறரை நம்பான் என்பதைப் போல, அவர்களும் ஒன்றும் உடனே நம்பிக் கொடுத்து விட் டிருக்கவில்லை.

ஆனால் அப்படிக் கொடுக்க வைப்பதற்காக ஹரிவர தனும் பலமுறை சென்று பொருட்களை உடனடிப் பணத்தைக் கொடுத்து வாங்கி முதலில் அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானான்.

இதெல்லாம் நடந்ததும் கடந்த ஒரு மாதத்திற்குள் தான்.

முதலில் சிறு மதிப்பில் அவர்களுடைய தயாரிப்பு களை வாங்கியிருந்தவன் போகப்போகச் சற்றுப் பெரிய அளவிலும் வாங்கத் தொடங்கியிருந்தான்.

அப்படி ஒவ்வொரு முறை செல்லும் பொழுது பெரிய அளவில் ஆர்டர் இருக்கிறது, முதலாளியிடம் சொல்லி



காசோலையை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் பிறகு எடுத்துக் கொள்கிறேனென்றும் சொல்லிக் கொண்டே வந்தான்.

சொன்னது போலவே சில நாட்களுக்கு முன்பு சென்று அந்தக் கம்பெனியின் தயாரிப்புகளை வாங்கிக் கொண டவன், தள்ளித் தேதியிடப்பட்ட காசோலையையும் கொடுத்துவிட்டு வந்திருந்தான்.

வந்தவன் நேராக வங்கிக்குச் சென்று செய்த முதல் வேலை ஸ்டாப் பேமெண்ட் கொடுத்தது.

அதாவது அந்த எண்ணை உடைய காசோலை வரும் பொழுது அதற்குப் பணத்தைக் கொடுக்க வேண்டா மென்று நம்பும்படியான காரணத்துடன் கடிதம் ஒன்றை வங்கியின் மேலாளருக்கு எழுதிக் கொண்டு போய் அவரையே நேரில் பார்த்துக் கொடுத்ததோடு பேசிவிட் டும் வந்திருந்தான்.

அந்த வங்கியில் தான் சோமநாதன் அவருடைய மூன்று கடைகளின் கணக்குகளையும் வைத்திருந்தார்.

அந்த வங்கியைப் பொறுத்தவரை சோமநாதன் நம்பிக்கைக்குரிய வாடிக்கையாளர் என்பதோடு, பெரிய வாடிக்கையாளரும் கூட.

அதிலும் சோமநாதன் தானே ஹரிவரதனையும், தனது மகள் வசுமதியையும் அவர் வெளிநாடு கிளம்பு வதற்கு முதல் நாள் அழைத்துக் கொண்டு போய் அந்த வங்கியின் மேலாளருக்கு அறிமுகப்படுத்தி வைத்திருந் தார்.

அதன் பலனாக ஹரிவரதனின் வேண்டுகோளுக்கு உடனே செவி சாய்க்கப்பட்டது.

மூன்றாம் நாள் அந்தக் கம்பெனியின் ஊழியர் களிடமிருந்து விழுந்தடித்துக் கொண்டு போன் வர, உடனே உங்களுடைய எம்.டி.யை நேரில் பார்க்க வேண்டும், அவரிடம் தான் தொடர்ந்து எதையும் பேச முடியும் என்று விட்டிருந்தான். ஹரிஹரன்.

இவ்வளவு நடந்து விட்டதற்குப் பிறகு தான் அந்தக் கமபெனியின் எம்.டி.யை நேரில் சந்திப்பதற்கே அப்பாயிண்ட்மெண்ட் கிடைத்திருந்தது.

தன்னுடன் இருந்து கொண்டே தான் அறியாமல் எவ்வளவு வேலைகளைச் செய்து விட்டிருக்கிறானென்று வசுமதிக்கும் அளவு கடந்த ஆச்சர்யம்.

அந்தக் கம்பெனியின் எம்.டி. பொறுமையாகக் கார ணம் கேட்க, தானும் பொறுமையாகவே பதில் சொன் னான் ஹரிவரதன்.

வாங்கிய பொருளுக்குப் பணத்தைக் கொடுப்பது என்னுடைய கடமையே, ஆனால் கொடுப்பதற்குப் பணமில்லாத போது என்ன செய்வது. ஒன்று செய். முதலில் நீ வாங்கியதற்குக் கொடுத்து விடு, பிறகு நானும் உனக்குக் கொடுத்து விடுகிறேனென்று முடித்து விட்டிருந்தான்.

நடந்தது இவ்வளவு தான்,

முதலில் தாம் தூமென்று கத்திய அந்த எம்.டி. பிறகு அதனால் எல்லாம் வேலையெதுவும் ஆகாது என்பதை உணர்ந்து கீழே இறங்கி வந்திருந்தான்.

அதற்குப் பிறகும் அந்தக் கம்பெனியின் எம்.டி.யைச் சம்மதிக்க வைப்பதற்கு அவர்கள் இருவரும் முக்கியமாக ஹரிவரதன் நிறையப் பேச வேண்டியிருந்தது.



முதலில் ஆங்கிலத்தில் தேவையற்றதைப் பேசி மழுப்பப் பார்த்தவன், அதற்கு ஹரிவரதனிடமிருந்து வந்த பிரமாதமான பதிலில் பிறகு ஹிந்தியில் பேச ஆரம்பித்து விட்டிருந்தான்.

வசுமதியே கூட எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆங்கிலத்தைப் போலவே ஹிந்தியிலும் சரளமாகவும் மிகவும் சாமர்த்தியமாகவும் பேசிய ஹரிவரதன் கடைசி யில் அந்த எம்.டி.யிடமிருந்து தங்களுக்கு வர வேண்டிய பணத்தைச் சில்லரை பாக்கியில்லாமல் வாங்கிக் கொண்டு அவர்கள் கேட்டுக் கொண்டபடி வவுச்சரிலும் கையெழுத்திட்டுக் கொடுத்து விட்டு வந்திருந்தான்.

வந்தவன் முதல் வேலையாகத் தான் வாங்கி வந் திருந்த அவர்களுடைய தயாரிப்புகளையும் கொண்டு போய்ப் பேசித் திருப்பிக் கொடுத்து விட்டு வந்திருந் தான்.

## 6



மேலும் ஒரு மாதமும் கூடக் கடந்திருந்தது.

சோமநாதன் இன்னும் இரண்டு நாட்களில் இந்தியா திரும்புவதாக இருந்தது.

அவருக்கு வாக்குக் கொடுத்திருந்தது போலவே வசுமதியின் உதவியோடு தொழிலைத் தூக்கி நிறுத்தி யிருந்தான் ஹரிவரதன்.

நூறு சதவிகிதம் அனைத்துமே சரியாகி விட்ட தென்று சொல்லிவிட முடியாதென்றாலும், இப்பொழுது குறைகள் முழுமையாகக் களையெடுக்கப்பட்டு விட் டிருந்தன.

இனித் தொடர்ந்த மேற்பார்வை ஒன்று மட்டும் இருந் தால் போதும், வேலைகள் அனைத்தும் தானாகவே நடக்குமென்ற நிலைக்கு வந்து விட்டிருந்தன.

முக்கியமான தலைவலியாக இருந்த பல பெரிய பெரிய வராக் கடன்கள் வசூலிக்கப்பட்டு விட்டதி லேயே பெருமளவு பிரச்சனைகள் சரியாகி விட்டிருந்தன.

அன்று வீட்டிலிருந்த கார்கள் இரண்டுமே ஏதோ முக்கியமான வேலையாக வெளியே சென்று விட் டிருந்தன, கடைக்குக் கிளம்பி விட்டு வந்து பார்த்தபோது தான் தெரிந்தது வசுமதிக்கு.

என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தவள் உடனே ஹரிவரதனின் மொபைலுக்கு அழைத்து விட் டிருந்தாள்.

அவனும் இன்னும் பத்து நிமிடங்களில் வீட்டிற்கே வந்து விடுவதாகச் சொல்லி விட்டிருக்க, நேராகத் தன்னுடைய அறைக்குப் போய் இன்னுமொரு முறை கூடக் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண் டாள்.

பார்த்தவள் அதில் திருப்தியடையாதவளாக மேலும் சில ஒப்பனைகளையும் செய்து கொண்டாள்.

இப்பொழுது திருப்தி தோன்றி விட்டிருக்க, சந் தோஷமாகக் கீழே இறங்கி வந்தாள்.



தினமும் காலை, மாலை இரண்டு வேளைகளுக்கும் ஹரிவரதனுக்கு வசுமதியின் வீட்டிலிருந்து தான் உணவு சென்று கொண்டிருந்தது.

மதியம் வழக்கம்போல கம்பெனிக்கே வீட்டிலிருந்து உணவு வந்து விடும்.

காலை உணவை முடித்திருப்பார் என்று நினைத் தவள் உடனே சமையலறைக்கு விரைந்தாள்.

''என்னமா?''

அப்பொழுதுதான் தான் தாயின் நினைவு வந்தவ ளாகத் தன்னைக் கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொண் டாள்.

''காபி வேணும்மா.''

''சரிமா, ஒரு ரெண்டு நிமிஷம் வெயிட் பண்ணு.''

''அப்படியே இன்னொரு கப்பும் வேணும். ஒரு அஞ்சு நிமிஷம் கழிச்சுக் கலக்குங்க, போதும்.''

''ஏம்மா, யாருக்கு?''

''ஹரிவரதன் வர்றார். அதான்.''

''ஓ, அப்படியா,'' என்ற தாயின் முகத்திலும் சந் தோஷத்தின் ரேகைகள் தெரிவதைக் கண்டாள் வசுமதி.

''அப்புறம் வசு...''

''சொல்லுங்கமா.''

''உங்கப்பா வந்துட்டா இந்தத் தம்பி கிளம்பிடுவார், இல்லையா?''

''அப்படின்னு தான் நினைக்கறேன்.''

''அந்தத் தம்பிக்கு ரொம்பப் பிரமாதமான குணம்மா...''

''மத்தது எப்படியிருந்தா நமக்கென்னமா? அவரால இப்ப பிஸினஸ் ரொம்பப் பிரமாதமாப் போயிட்டிருக்கு.''

''அப்ப இனிமேல் பயப்பட வேண்டியதில்லையா?''

''ம்கூம், இனி அப்பா ஒருத்தரே முன்ன மாதிரி பாத்துக்கலாம். ஆனா பிஸினஸ் அதவிடவும் பிரமாதமாப் போகும்.''

''அப்பாடா! எனக்கே இவ்வளவு நிம்மதியா இருக்கு, உங்கப்பாவுக்கு எப்படியிருக்கும்?''

''அது சரிதான்மா. அதோட இன்னும் கூட சிஸ்டமேட்டிக்கா பிஸினஸக் கொண்டு போறதுக்கு நிறைய ஐடியாக்கள் இருக்காம். அப்பா வந்ததும் பேசணும்னு சொல்லிட்டிருந்தார். ஆனா எது எப்படியானாலும் அப்பா வந்ததும் எல்லாத்தையும் ஹேண்ட் ஓவர் பண்ணிட்டு உடனே கிளம்பிட்ற ஐடியால தான் இருக்கார் போலிருக்கு.''

''இந்தத் தம்பி மட்டும் தொடர்ந்து இங்க நம்ம பிஸினஸையே பாத்துக்கிட்டா எவ்வளவு நல்லா இருக்கும். சம்பளமும் எவ்வளவு கேட்டாலும் குடுத்துடலாமே.''

''அது சரி, ஆனா அது இந்த ஜென்மத்துல நடக்காது.''

மேலும் எதையோ சொல்ல வந்த வசுமதி உடனே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

தான் ஏன் இப்படி மாறிப்போய் விட்டோமென்று அவளுக்கே மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

மேலும் தொடர்ந்து எதையோ சொல்ல வந்தவள் ஹரிவரதனின் கார் காம்பவுண்டுக்குள் வருவது ஜன்னல் வழியாகத் தெரிய,



''சரிமா, நீங்க காபி கலக்குங்க. உடனே கடைக்குக் கிளம்பணும்,'' என்று ஹாலுக்கு விரைந்தாள்.

உள்ளே வந்த ஹரிவரதனை, ''வாங்க,'' என்று லேசான புன்னகையுடன் வரவேற்றாள் வசுமதி.

''என்ன ரெடியா?'' என்று கேட்டுக் கொண்டே சோபாவில் வந்து அமர்ந்தவனிடம், ''ரெண்டு நிமிஷம். காபி மட்டும் குடிச்சுட்டுக் கிளம்பிடலாம்,'' என்றாள்.

சொன்னது போல காபியுடன் வந்த கோகிலாவும், சந்தோஷமாக ஹரிவரதனை வரவேற்றுச் சில வார்த்தைகள் பேசினார்.

''காபி எடுத்துக்கோங்க,'' என்று கோகிலா சொல்ல, எடுத்துக் கொண்டான்.

வசுமதி தானும் எழுந்து வந்து ஒரு கப்பை எடுத்துக் கொள்ள, ''சரி, பேசிட்டிருங்க, வர்றேன்,'' என்று உள்ளே சென்றார் கோகிலா.

''வாசவி, வசந்த் ரெண்டு பேரும் ஸ்கூலுக்குப் போய்ட்டாங்களா?''

''ஆமாம்,'' என்றவள், ''இன்னைக்கு நாம எங்காவது வெளிய போக வேண்டியிருக்கா?'' என்று கேட்டாள்.

''அவசியமிருக்காதுன்னு தான் நினைக்கறேன்,'' என்ற ஹரிவரதனிடம் முயன்று தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டு கேட்டாள் வசுமதி.

''டாடி வந்ததும் நீங்க கிளம்பிடுவீங்களா, இல்ல...''

''அங்கிள் நாளைக்கு வர்றார், நான் நாளைக்கு மறுநாள் கிளம்பலாம்னு இருக்கேன் பாக்கலாம். ஏன் கேக்கற?''

''இல்ல, அம்மா கேட்டாங்களா... அதான்,'' என்றவள், எனக்கு அதைப் பற்றி ஒன்றுமில்லை என்பதைப் போலக் காட்டிக் கொண்டாள்.

''இன்னும் கொஞ்சநாள் இருந்துட்டா, அதுக்கப்புறம் கிளம்பவே மனசு வராது போலிருக்கு, அதனால உடனே கிளம்பிட்றதுதான் பெட்டர்.''

மெல்லிய புன்னகையுடன் சொன்னவனைப் புரியாமல் பார்த்தாள் வசுமதி.

''அந்த அளவுக்கு இது இன்ட்ரஸ்டிங் பிஸினஸ்.''

''ஓ'' என்றவள், ''அதே மாதிரி எங்க எல்லாருக்குமே கூட நீங்க கிளம்பறத நினைச்சால கஷ்டமா இருக்கு,'' என்றாள்.

''எல்லாருக்கும்னா?''

அப்படிக் கேட்டவனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் வசுமதி விழித்துக் கொண்டிருக்கும் போதே, ''சரி, கிளம்பலாம்,'' என்று எழுந்து விட்டிருந்தான் ஹரிவரதன்.

ஏன், எதற்காக அப்படிக் கேட்டானென்று யோசித்துக் கொண்டே தானும் எழுந்திருந்தாள் வசுமதி.

அதே நேரம் கோகிலா ஹாலுக்கு வர, இருவரும் சொல்லிக் கொண்டு கிளம்பினார்கள்.

வசுமதியும் ஏறி அமர்ந்திருக்க, காரை ஸ்டார்ட் செய்தான் ஹரிவரதன்.

''அங்கிள் வந்துட்டதுக்கப்புறமும் நீ தொடர்ந்து பிஸினஸ்ல கான்ஸன்ட்ரேட் பண்ணு,'' என்றவனிடம், ''சரிதான். முயற்சி பண்றேன்,'' என்றாள் வசுமதி.



''ஏன், பாக்க முடியாதா?''

''முடியாதுன்னு இல்ல. பிஸினஸப் பொறுத்த வரைக்கும் நாம கொஞ்சம் உள்ள போய்ப் பாக்கணும்னு நினைச்சாலே அது அப்படியே சுழல் மாதிரி நம்மள இழுத்துடுது.''

''சரியா சொன்ன. ஆனா நாமதான் முடிஞ்ச அளவுக்கு நம்பிக்கையான ஆட்கள எடுத்துப் போட்டுட்டு எல்லாத்தையும் சிஸ்டமேட்டிக்கா மாத்திட்டு நம்மளக் கொஞ்சம் அப்பப்ப ரிலேக்ஸ் பண்ணிக்கணும்,'' என்ற ஹரிவரதனிடம், ''ஆமாம்,'' என்பதைப் போலத் தலையை ஆட்டினாள் வசுமதி.

''நீங்க ஊருக்குப் போய் என்ன பண்ணப்போறீங்க?''

''இப்பத்துக்கு விவசாயம் தான், ஆனா அப்படியே சைட்ல எனக்குன்னு சில குறிக்கோள்கள் இருக்கு. அதுக்காகவும் பாத்தாகணும்,'' என்றான்.

அது என்னவென்று வசுமதியும் கேட்டுக் கொள்ளவில்லை, ஹரிவரதனும் வேறு யோசனையில் ஆழ்ந்து விட்டிருந்தது தெரிந்தது.

எது எப்படியோ ஹரிவரதன் கிளம்பிவிடப் போகிறான் என்பதே அவளுக்கு மிகுந்த வேதனையளிப்பதாக இருந்தது.

ஆனால் அவனுக்கு அந்த மாதிரியெல்லாம் எதுவுமே இல்லை என்பதும்.

அவனைப் பொறுத்தவரை தான் பத்தோடு பதினொன்று தான் என்பது தெளிவாகப் புரிந்தது.

சரிதான். அதற்கு மேல் அவனிடம் நீயும் தான் என்ன எதிர்பார்க்கிறாய் என்று கேட்ட மனதை ஒரு தட்டுத் தட்டி அடக்கினாள்.

ஏனோ அதற்குப் பிறகு இன்னதென்று சரியாக விளக்கிச் சொல்ல முடியாத ஒருவித வேதனையில் முழுகிப் போய் விட்டிருந்தாள் வசுமதி.

சொன்னது போலவே சோமநாதனிடம் அனைத்தையும் ஒப்படைத்து விட்டு மூன்றாம் நாள் தனது சொந்த ஊருக்குக் கிளம்பி விட்டிருந்தான் ஹரிவரதன்.

வசுமதி வேதனையுடன் தனக்குள் நினைத்துக் கொண்டது போலவே பத்தோடு பதினொன்றாகத் தான் ஹரிவரதன் அவளிடமும் விடை பெற்றிருந்தான்.

ஏன் அதைக் கூடச் சொல்லிக் கொள்ளாமலே கிளம்பியிருக்க வேண்டியது தானே என்று நினைத்துக் கொண்டவளுக்குக் கண்கள் கூடக் கலங்கி விட்டிருந்தன.

தனது வெளிநாட்டுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்பியிருந்த சோமநாதனுக்கு இங்கிருக்கும் தனது தொழில்களின் முன்னேற்றம் அளவு கடந்த மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தது.

சொன்னதைப் போல - ஏன், அதை விடவும் அதிகமாகவே, சாதித்து விட்டிருந்த ஹரிவரதனின் மேல் அவருக்கு அளவு கடந்த மதிப்பும், மரியாதையும் வந்து விட்டிருந்தன.

உணர்ந்து அதை அப்படியே அவனிடம் வார்த்தைகளாக வெளிப்படுத்தவும் செய்தார்.

எனக்கு இவ்வளவு பெரிய உதவியைச் செய்து கொடுத்திருக்கிறீர்கள். உங்களுக்கு நானும் ஏதாவது செய்ய



ஆசைப்படுகிறேனென்று உணர்ந்து கேட்ட சோமநாதனிடம், எதுவும் வேண்டாமென்று மறுத்து விட்டிருந்தான் ஹரிவரதன்.

எவ்வளவு கேட்டுக் கொண்டும் அவன் மறுத்து விட்டிருந்ததில், சரி இதை எப்படி மறுப்பீர்கள் பார்க்கலாமென்று நினைத்துக் கொண்டே சற்று பெரிய தொகை ஒன்றைக் காசோலையில் நிரப்பி உங்களுடைய சம்பளத் தொகை, மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நீட்டினார்.

ஆனால் அதையும் உடனே மறுத்து விட்டிருந்தான் ஹரிவரதன்.

''தயவு செய்து நீங்கள் இதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

''எனக்கு நீங்கள் செய்திருப்பது எவ்வளவு பெரிய உதவி என்பதை எப்படி உங்களிடம் சரியாக விளக்கிச் சொல்வதென்று கூட எனக்குத் தெரியவில்லை.

''உங்கள் வயதுக்கு உங்களுக்கு இவ்வளவு பெருந்தன்மை இருக்கும் பொழுது, எனக்கு மட்டும் அப்படியெல்லாம் ஒன்றுமே இருக்கக் கூடாதென்று நீங்கள் நினைப்பது எந்த விதத்தில் நியாயமாகும்?

''நானும் ஒன்றும் சம்பளமாக மட்டும் எண்ணிக் கணக்கை முடித்துக் கொள்ளும் எண்ணத்தில் கொடுக்கவில்லை. நீங்கள் இதை ஏற்றுக் கொண்டால் தான் எனக்கும் கொஞ்சமேனும் மனதிற்கு நிம்மதியாக இருக்கும்.''

இப்படி இன்னும் நிறையச் சொல்லி மறுக்க முடியாத நிலையில் நிறுத்திக் கொடுத்து விட்டிருந்தார் சோமநாதன்.

அவருடைய தங்கையையும் அழைத்து சந்தோஷத்தை வெளிப்படுத்திக் கொண்டார்.

அவர் எப்படியெப்படி - கொண்டு செல்ல வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தாரோ அதன்படி - ஏன், அதை விடவும் பிரமாதமாகவே - தொழிலை முன்னேற்றப் பாதையில் கொண்டு வந்திருந்த ஹரிவரதனின் திறமையை வாய் நிறைய மெச்சிக் கொண்டதோடு, மனந்திறந்து பாராட்டவும் செய்தார்.

# 7



ஒரு மாதம் கடந்திருந்தது.

ஏனோ இப்பொழுதெல்லாம் வசுமதியால் எதையுமே ஈடுபாட்டுடன் செய்ய முடிந்திருக்கவில்லை.

ஆனால் யாரும் அந்த வித்தியாசத்தைக் கண்டு கொள்ளக் கூடாதென்று, வெளியே முயன்று தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டாள்.

அதற்குக் காரணமும் ஹரிவரதன் தான்.

இந்நேரம் அவன் தன்னை மறந்து கூட இருப்பானோ என்று நினைத்தவளுக்கு வழக்கம்போல மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

''வசு!''

தந்தை அழைப்பது கேட்க, ''என்ன டாடி?'' என்று அருகில் சென்றாள் வசுமதி.



''இந்த வாரம் ஊருக்குப் போய்ட்டு வரலாமாம்மா?''

''ஊருக்கென்றால்...''

''என்ன யோசிக்கற, அத்தை வீட்டுக்குத் தான்.''

அப்படியென்றால் அது ஹரிவரதனின் ஊரும் அல்லவா?

வசுமதியின் மனம் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது.

ஆனாலும் அது வெளியே தெரியாதபடி, ''போலாம் டாடி,'' என்றாள்.

''என்னமா, உனக்கு விருப்பமில்லையா?''

''அச்சச்சோ! அப்படியெல்லாம் ஒன்னுமில்ல டாடி.''

''ஏன் கேக்கறேன்னா அங்க போறதுக்கு இப்ப மத்தவங்க யாரும் தயாரில்ல, அதான்...''

''இல்ல டாடி. போய்ட்டு வரலாம், ஏதோ கொஞ்ச நேரம் உங்க கூடக் கடைக்கு வந்துட்றதால பிரச்சனையில்ல. வீட்ல செம போர் டாடி.''

''சரி விடு, அப்ப சன்டே நம்ம ரெண்டு பேரும் போலாம்.''

''தேங்க் யூ டாடி.''

சந்தோஷமாகச் சொன்ன மகளைப் பார்த்த சோமநாதன், ''உன் சந்தோஷத்தைப் பாத்தா ஒரு நாள் முன்னாடி கூடப் போலாம் போலிருக்கு?'' என்று கேட்டார்.

.........

''இல்ல, சனிக்கிழமை ஈவினிங்கே போலாம். அப்பத் தான் சன்டே ஈவினிங் கிளம்பவும் சவுகர்யமா இருக்கும்.

அதோட அங்க போய் ஒரு நாள் இருந்த மாதிரியும் இருக்கும்.''

''சரி டாடி.''

வெளியே காட்டிக் கொள்ளா விட்டாலும், உள்ளுக்குள் வசுமதி எவ்வளவு சந்தோஷப்பட்டாள் என்பது வார்த்தைகளால் விளக்கவே முடியாத ஒன்று.

எப்பொழுது சனிக்கிழமை வருமென்று ஆவலுடன் காத்திருக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகம் போலக் கழிவதாக உணர்ந்தாள்.

ஒரு வழியாகச் சனிக்கிழமை நாள் விடிந்தும் விட்டிருக்க, காலையிலிருந்தே பரபரப்புடன் அனைத்தையும் எடுத்து வைக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

''என்னமா, வழக்கமில்லாத வழக்கமா ஊருக்குப் போறத இவ்வளவு ஆவலா எதிர்பார்த்துட்டிருக்க?''

தாய் கவனித்து விட்டுக் கேட்டே விட்டிருக்க, மனதிற்குள் திக்கென்றது வசுமதிக்கு.

அப்படியெல்லாம் ஒன்னுமில்லையேம்மா என்று பட்டும் படாமல் மழுப்பினாள்.

''எனக்குப் பொறாமையா இருக்குக்கா!'' என்ற தங்கையிடம், ''ஏன்?'' என்று கேட்டாள்.

''நீ மட்டும் ஜாலியாக் கிளம்பிட்ட, ஆனா என்னைப் பாரு, படிக்கணும்னு எவ்வளவு டென்ஷன்?''

''நானும் உன்ன மாதிரி ஸ்டேஜைக் கடந்து தான் வந்திருக்கேன்.''



''என்னவோக்கா. ஆனா எப்படா நானும் உன்ன மாதிரி ஃப்ரீ ஆவேன்னு இருக்கு.''

''என்ன இன்னுமொரு ஆறு மாசம்,'' என்று வசுமதி சொல்ல, ''எவ்வளவு சிம்பிளா சொல்லிட்ட?'' என்று அலுத்துக் கொண்டாள் வாசவி.

எப்படியோ நேரத்தைத் தள்ளியவள், தந்தை வருவதாகச் சொல்லியிருந்த நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே சென்று கிளம்பத் தொடங்கி விட்டிருந்தாள்.

சரியாகச் சொன்ன நேரத்திற்குத் தந்தை வந்துவிட, ''சீக்கிரம் டாடி,'' என்று அவரையும் துரிதப்படுத்தினாள்.

கணவனுக்குச் சாப்பிட டிபன் எடுத்துக் கொண்டு கோகிலா வர, ''நீங்களும் வாங்கமா,'' என்று அழைத்தாள் வசுமதி.

''இல்லமா, நீங்க போய்ட்டு வாங்க. வாசவியும், வசந்தும் எக்ஸாம்க்குப் படிக்கறாங்களே,'' என்றார்.

''அதான...'' என்ற வாஸவி, ''மம்மியெல்லாம் வர மாட்டாங்க,'' என்றாள்.

''வசு.''

''சொல்லுங்க டாடி.''

''நாளைக்குக் காலைல போய்ட்டா என்னமா?''

''சரி, உங்க இஷ்டம் டாடி,'' என்று வசுமதி தயக்கத்துடன் மென்று விழுங்க, ''சரி, வேண்டாம். இப்பவே கிளம்பலாம்,'' என்று விட்டிருந்தார் சோமநாதன்.

''ஏன் டாடி, வேணு...''

''இல்லில்லமா, போய் ஒரு நாள் இருந்துட்டு வந்தா உங்க அத்தைக்கும் கொஞ்சம் சந்தோஷமா இருக்கும்.''

அடுத்த அரை மணி நேரத்தில் தந்தை மகள் இருவரும் ஊருக்குப் புறப்பட்டு விட்டிருந்தனர்.

ஹரிவரதனைப் பார்க்கப் போகிறோமென்ற எண்ணமே ஏதோ ஒரு இனம் புரியாத தவிப்பையும், சந்தோஷத்தையும் அவளுக்குள் ஏற்படுத்தியிருந்தது.

சரியாக அதே நேரம் தந்தையும் அதைப் பற்றியே பேச, தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ளச் சற்று சிரமப்பட்டுத்தான் போனாள் வசுமதி.

''ஹரிவரதன் தம்பியத் தாம்மா பாக்கலாம் போலவே இருக்கு.''

ஆமா டாடி என்று சொல்வதற்காக வாயைத் திறந்து விட்டிருந்தவள், பிறகு மீண்டும் வாயை மூடிக் கொண்டாள்.

''ரெண்டு தடவ கூப்புட்டிருந்தார்மா, நீ ஏதாவது பேசினயா?''

''இல்ல டாடி...''

''பேசணும்மா, நமக்காக கூப்புட்ட குரலுக்கு வந்து எவ்வளவு பெரிய உதவி எவ்வளவு சாதாரணமாப் பண்ணிக் குடுத்துட்டுப் போனார். அந்த நன்றியெல்லாம் மறக்கக் கூடாது.''

தந்தை அவர் பாட்டுக்குச் சொல்லிக் கொண்டே போக, வசுமதி எதுவும் பேசாமல் அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள்.

''அதுக்கும் அவருக்கே தோட்டங் காடுன்னு எல்லாமே இருக்காம்மா.



''திரும்பவும் அவர் பேசினப்ப தான் எல்லாம் டீடெய்லாக் கேட்டேன். நானுங்கூட ஒரு ரெண்டு மூணு தடவ அந்தத் தம்பிக்குக் கூப்புட்டுப் பேசியிருப்பேன்.''

''அப்படியா டாடி?''

''ஆமாம்மா. அதுவும் இன்னைக்கு வர்றோம்னு மதியம் கூப்புட்டிருந்தேன். நாளைக்கு மதியம் இங்க நம்ம வீட்ல தான் லஞ்ச்சுன்னு அந்தத் தம்பி ஒரே வார்த்தைல முடிச்சுட்டார். போய்ட்டு வந்துடலாம்மா.''

''சரி டாடி.''

மேலும் ஏதேதோ பேசிக் கொண்டே வந்தவர்கள் ஒரு பெரிய பழக்கடையில் காரை நிறுத்திப் பலவிதமான பழங்களையும் ஹரிவரதனின் வீட்டிற்கும், வசுமதியின் அத்தை வீட்டிற்கும் வாங்கிக் கொண்டனர். கூடவே ஸ்வீட், காரம் என அனைத்தையும்.

''வேற ஏதாவது வேணும்னாலும் கூட வாங்கிக் கோம்மா.''

''போதும் டாடி. இதுவே ஒவ்வொரு வீட்டுக்கும் நாலஞ்சு கவருக்கு மேல வரும் போலிருக்கு,'' என்று மறுத்து விட்டிருந்தாள் வசுமதி.

''அப்புறம் வசு...''

''சொல்லுங்க டாடி.''

''உங்க அத்தை...''

ஏதோ சொல்ல வந்து விட்டுப் பிறகு பாதியில் நிறுத்தி விட்டிருந்த தந்தையைப் பார்த்த வசுமதி, ''என்ன டாடி?'' என்று கேட்டாள்.

''இல்ல, உங்க அத்தைக்கு நாம நாளைக்கு அந்தத் தம்பி வீட்டுக்கு லஞ்சுக்குப் போறதையெல்லாம் இனி எப்படி எடுத்துக்குவாங்கன்னு தெரியலமா...''

''ஏன் டாடி அவங்கென்ன சொல்லப் போறாங்க...''

''அதான் எதுவும் சொல்ல மாட்டாங்கன்னு தான் நானும் நினைக்கறேன். உங்க அத்தை தான் எல்லாத் துலயுமே கௌரவம் நிறையப் பாக்கறவங்களாச்சே...''

''ஏன் அப்படிப் பாத்தா அதே அத்தை தான ஹரி வரதனப் பாராட்டி இங்க நம்மகிட்ட அனுப்பி வெச் சதே.''

''அது சரிதான்மா,'' என்றவர், அதற்கு மேல் எதையும் சொல்லி விடவில்லை.

சிறு விஷயங்களைக் கூடப் பெரிதாக எடுத்துப் பேசுவது இயற்கையாகத் தங்கையிடம் அமைந்து விட் டிருக்கும் குணம். அதைப் போய் நாம் ஏன் மகளிடமே என்றாலும் கூட குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஏன் அது வசுமதிக்குமே தெரிந்து தானே இருக்குமென்று நினைத்துக் கொண்டார்.

அதோடு யாரைப் பற்றியும் யாரிடமும் தவறான அபிப்ராயத்தை உண்டு பண்ணுவது நல்லதல்லவே, அதுவும் ஒன்றுமே இல்லாத விஷயத்தைப் போய் ஏன்...

''என்ன டாடி?''

''இல்ல, நாம இருக்கப் போறதே ஒரு நாள். அதுல வெளிய வேற போகணும்னு சொன்னா எப்படி எடுத் துக்குவாங்களோன்னு ஒரு யோசனை. அவ்வளவு தான்மா.''



''அதனால என்ன, அத்தையையும் கூடவே கூப் டுட்டுப் போய்ட்டா முடிஞ்சது.''

''அது சரி, அப்புறம் உலகம் தலைகீழாகி விடாது!''

''என்ன டாடி?''

''சரிதான்மா. நாளைக்குப் பாக்கலாம்.''

இருவரும் ஊர் போய்ச் சேர்ந்த பொழுது இரவு எட்டு மணி ஆகியிருந்தது.

இருவரும் காரை விட்டு இறங்கும்பொழுதே சோம நாதனின் தங்கை சுசீலா வெளியே வந்து விட்டிருந்தார்.

''வாங்க, வாங்க.''

''வரலாம்மா. எப்படியிருக்க?''

''நல்லார்க்கேண்ணா, வாங்க.''

''மாப்பிள்ளமா.''

''உள்ள அவரு ரூம்ல இருந்தார்ணா,'' என்றவர், ''வசு! வாடாம்மா, வா வா,'' என்று கீழேயே இறங்கி வந்து விட்டிருந்தார் சுசீலா.

''வார்றேன் அத்தை. எப்படியிருக்கீங்க? அப்புறம் மாமா எப்படியிருக்கார்?''

''எல்லாரும் நலம். அப்புறம் ஆள் பாக்கப் பிரமாதமா ஆயிட்டயே.''

''புரியல அத்தை, என்ன...''

''ரொம்ப அழகாயிட்டேன்னு சொல்றேன்.''

''அப்படியெல்லாம் ஒன்னுமில்ல அத்தை.'' என்ற வளிடம், தானும் சில கவர்களை வாங்கிக் கொண்ட

சுசீலா, ''எதுக்கு இத்தனைய வாங்கிட்டு வந்திருக்கீங்க? ஒரு அளவு இல்ல?'' என்று கேட்டார்.

''அப்படி ஒன்னும் நிறைய எதையும் வாங்கல அத்தை.''

''அது சரி. இதையெல்லாம் இனி மாமாவும் நானும் தான் வேஸ்டாப் போகுமேன்னு ஆதங்கப்பட்டுக்கிட்டு சாப்பிடணும். எங்களுக்கென்ன குழந்தையா, குட்டியா... கடவுள் தான் அந்த பாக்கியத்தைக் குடுக்காமப் போயட்டாரே...''

தனது அத்தை பாட்டுக்குப் புலம்பிக் கொண்டே வர, என்ன இந்த அளவிற்குக் கூட கீழே இறங்கி வந்து மனம் திறந்து பேசுகிறாரென்று வசுமதிக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆனாலும் அவள் அதை வெளியே காட்டிக் கொள்ள வில்லை.

அதற்குள் அனைவரும் வீட்டிற்குள்ளேயே வந்திருக்க, ''வாங்க வாங்க,'' என்று வரவேற்றுக் கொண்டே ஹாலுக்கு வந்த சுசீலாவின் கணவர் நாராயணனிடம் இருவரும் பேச ஆரம்பித்து விட்டிருந்தனர்.

''சரி, பேசிட்டிருங்க. இதோ வர்றேன்,'' என்று தனது அத்தை உள்ளே செல்ல, தானும் அவரைப் பின் தொடர்ந் தாள் வசுமதி.

''அப்புறம் அவங்களையெல்லாரையும் கூப்டுட்டு வந்திருக்கலாமே வசு, நாளைக்கு சன்டே தான?''

''இல்ல அத்தை. ரெண்டு பேருக்குமே இந்தத் தடவ பப்ளிக் எக்ஸாம் வருது. ஹார்ட் வொர்க் பண்ணி



யாகணும். அப்புறம் அவங்கள விட்டுட்டு அம்மாவும் வர முடியாதே.''

''அது சரிதான், உங்கம்மாவுக்கு ஏற்கெனவே காரணம் தேவைப்படாது. இனி கிடைச்சுட்டா மேடம் கிளம்பு வாங்களா?''

''அச்சச்சோ! அப்படியெல்லாம் இல்ல அத்தை. வர முடியலேன்னு அம்மா ரொம்பவும் புலம்பக் கூட செஞ் சாங்க...''

''புலம்பியிருப்பா, சரி விடு. அப்படிப் பாத்தா நாங்க மட்டும் நினைச்சா வர்றோமா என்ன?''

''என்ன பண்ண முடியும் அத்தை, எல்லாருக்கும் மெஷின் லைஃப் ஆயிடுச்சு...''

''எப்படியோ நீ படிப்ப முடிச்சுட்ட.''

''ஆமாம் அத்தை...''

''மேல படிக்கலையா?''

''ரெண்டு ஐடியால இருக்கேன், பாக்கலாம்.''

''படிச்சதெல்லாம் போதும்மா. எப்படியும் குடும் பத்துல மூத்த பொண்ணாயிட்ட. உன்னக் கல்யாணம் பண்ணிக் குடுத்தாகணும். அப்பதான் சின்னவ படிப்ப முடிக்கும்போது அவளுக்குப் பண்ண சரியா இருக்கும்.''

இருவரும் பேசிக்கொண்டே டிபனை எடுத்துப் பரி மாறுவதற்குத் தயாராக டேபிளின் மீது வைத்தனர்.

''நீங்களே செஞ்சீங்களா அத்தை?''

''அது சரி. வேலைக்கு ரெண்டு பேர் இருக்காங்க, கொஞ்சம் முன்னாடி தான் கிளம்பினாங்க. என்னதான்

ஆளுங்க இருந்தாலும் நாம ஒவ்வொன்னையும் பக்கத்துல இருந்து பாத்துப் பாத்துச் சொல்லிக்கிட்டே இருக்கணும். இல்லன்னா வாயில வெக்க சகிக்காது.''

அனைத்திலும் கொஞ்சத்தை எடுத்து டேஸ்ட் செய்து பார்த்துவிட்டு, ''சூப்பர்ப்'' என்று சாட்டிபிகேட் கொடுத்தாள் வசுமதி.

''அம்மா தான் அத்தை சொல்லிக்கிட்டே இருப்பாங்க, உங்க கைப்பக்குவம் அவ்வளவு ருசியா இருக்குமாமே.''

''அது சரி, உங்கம்மாவ விடவுமா?''

சிறிது நேரத்தில் அனைவரும் டிபனை முடித்திருக்க, தானும் தனது அத்தையுடன் சேர்ந்து அனைத்தையும் ஒதுக்கி வைப்பதில் உதவினாள் வசுமதி.

''போதும்மா விடு. காலைல வேலைக்காரங்க வந்து பாத்துக்குவாங்க. அப்புறம் குடிக்கறதுக்கு அண்ணனுக்கு என்ன வேணும்னு கேட்டுட்டு வா.''

''இன்னும் கொஞ்ச நேரம் போகட்டும் அத்தை.''

''சரிதான்,'' என்ற சுசீலா, ''சரி வா. ஹாலுக்குப் போலாம்,'' என்றார்.

பேச்சு வாக்கில் தந்தையும், அத்தையும் ஹரிவரதனின் குடும்பத்தைப் பற்றிப் பேச, தனக்குத் துளியும் சம்பந்தமில்லாத எதையோ அவர்கள் பேசிக் கொள்வதைப் போலக் காட்டிக் கொண்டாள் வசுமதி.

ஆனால் அவளுடைய கவனம் அனைத்தும் அவர்களுடைய பேச்சில்தான் இருந்தது.

''அந்தத் தம்பியப் பாக்கறதே அபூர்வம். அந்தளவுக்கு எப்பப் பாத்தாலும் பிஸியாவே இருக்கும். மனுஷங்க



மேல ரொம்ப ஆசை. அவங்க வீட்ல எல்லாருமே அப்பிடித்தான்.''

''நாளைக்கு அவங்க வீட்டுக்குப் போய்ட்டு வரலாமா சுசீ...''

''எதுக்குண்ணா? சரிதான். வேணும்னா போய்ட்டு வாங்க.''

''நீயும் வா.''

''நான் வரல...''

''ஏன் அத்தை, வாங்க, போய்ட்டு வரலாம்.''

''என்ன அப்பாவும் மகளும் ரொம்ப ஆவலா இருக்கீங்க. ஒருவேள...''

''என்னமா, சொல்லு?''

''வசுவுக்கு அந்தத் தம்பியப்...''

''போதும் சுசீலா.''

கோபமாக ஏதோ சொல்ல வந்த தந்தையைப் பயத்துடன் பார்த்தாள் வசுமதி.

சில வினாடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண்ட அண்ணனை, ''ஏன் அப்படியென்னத்த நான் தப்பாக் கேட்டுட்டேன்?'' என்று பார்த்தார் சுசீலா.

''அது அப்படியில்லமா. இருந்திருந்து இந்த மாதிரி ஒரு பட்டிக்காட்டுக்குள்ளயா வந்து என் பொண்ணக் கல்யாணம் பண்ணிக் குடுப்பேன்னு நினைச்சுட்ட?''

''ஓ! அப்ப அந்தக் காலத்துல என்ன மட்டும் குடுத்திருக்கீங்க?''

''அதான் நீயே சொல்லிட்டயே, அந்தக் காலம்னு, அதோட உனக்கும் மாப்பிள்ளையப் புடிச்சுப் போச்சு.''

''அதையெல்லாம் விடு. ஊர் கிராமங்கறது மட்டும் தான் அப்பக் காரணமா?''

''நான் இன்னும் வசுவக் கல்யாணம் பண்ணிக் குடுக் கறதப் பத்தி யோசிக்கக் கூட இல்ல. சின்னப் பொண்ணு. இன்னொரு வருஷம் போகட்டும்.''

............

''அப்படியே பாத்தாலும்...''

''என்னண்ணா?''

''இப்ப ரீஸண்டா வசுவுக்கு ரெண்டு ஜாதகம் வந் திருக்கு. ரெண்டுமே பிரமாதமான குடும்பம். பாக்கலாம்.''

''சரிதான். பொருத்தமா இருந்தாப் பாரு. எதுக்கு யோசிச்சுட்டிருக்கணும்?''

பேச்சு போகும் பாதையே சரியில்லையே என்று நினைத்த வசுமதி அதே நேரம் தனது மொபைலுக்கு வந்த அழைப்பை அட்டெண்ட் செய்து காதில் வைத்தாள்.

சில வினாடிகள் பேசியவள், ''இந்தாங்கப்பா. வசந்த்,'' என்று தனது தந்தையிடம் கொடுத்தாள்.

# 8

தூங்குவதற்காகப் படுக்கைக்கு வந்திருந்த வசுமதிக்குத் தூக்கம் அருகில் கூட வந்திருக்கவில்லை.



எப்பொழுது நாளை மதியம் வருமென்று பரபரவென் றிருந்தது.

ஒரு வழியாகத் தூங்கி யெழுந்தவள் காலையி லிருந்தே ஹரிவரதனின் வீட்டிற்குச் செல்வதை ஆவ லுடன் எதிர்பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

டிபன் சாப்பிட அனைவரும் ஒன்றாக அமர்ந்து விட் டிருக்க, ''அப்ப மதியம் லஞ்ச் செய்யச் சொல்ல வேண் டாம். அப்படித்தான?'' என்று வசுமதியைப் பார்த்தார் சுசீலா.

''அது சரிதான். நாங்க தான் அங்க போறதாச்சே,'' என்று சோமநாதன் சொல்ல, ''எப்படியும் உங்களுக்குச் செய்யணும் தான அத்தை?'' என்று கேட்டாள் வசுமதி.

''எங்களுக்குன்னா சிம்பிளா செஞ்சுக்குவோம்.''

டிபனை முடித்துக் கொண்டு தந்தை மாமாவுடன் எங்கோ வெளியே சென்று விட்டிருக்க, தனது அத்தை யுடன் அமர்ந்து பேசத் தொடங்கி விட்டிருந்தாள் வசுமதி.

''கிளம்பலாமா?'' என்று இரண்டு மணி நேரத்தில் வந்த தந்தையைப் பார்த்ததும் தான் அவளால் இயல்பாக மூச்சுக்கூட விட முடிந்தது.

ஹரிவரதனின் வீட்டிற்குத் தந்தையுடன் காரில் புறப்பட்டு விட்டிருந்தவளுக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

ஏன் இப்படியிருக்கிறோம், இப்படி மாறிப் போய் விட்டோமென்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

ஹரிவரதன் தன்னை இன்னும் நினைவில் கூட வைத்திருக்கிறானோ என்னவோ என்றும்.

''அவங்க வீட்டுக்கு வாங்கினதயெல்லாம் எடுத்துட்டி யாம்மா?''

''கார்லயே தான் இருக்கு டாடி.''

''அப்ப சரி.''

''இங்கிருந்து எவ்வளவு தூரம்?''

''பத்து நிமிஷத்துல போயிடலாம்மா.''

இருவரும் அவர்களுடைய மனதிற்குள் நினைத்துக் கொண்டது போல ஹரிவரதனின் குடும்பம் ஒன்றும் அவ்வளவு சாதாரணமானதாக இருக்கவில்லை. அந்த அளவிற்கு அங்கு போய்ப் பார்த்த பிறகு தான் அவர் களுடைய செல்வ நிலை புரிந்தது.

கிராமத்து மாடலில் வீடென்றாலும், பெரிய அளவில் கட்டப்பட்ட வீடு பார்க்கவே மிகவும் விஸ்தாரமாக இருந்தது.

அந்த வீட்டு மனிதர்களோ அதை விடவும் கூடப் பரந்த மனம் கொண்டவர்களாக இருந்தார்கள்.

''வாங்க... வாங்க.''

வயதில் சற்றுப் பெரியவர் ஒருவர் சந்தோஷமாக வரவேற்றுக் கொண்டே முன்னே வர, அவர் ஹரிவரத னின் தந்தையென்று தெரிந்து கொள்வதற்கு ஒன்றும் அதிகம் சிரமப்பட வேண்டியிருக்கவில்லை.

ஹரிவரதனின் அளவு உயரத்துடன் ஜாடையிலும், ஒற்றுமைகள் தெரிந்தன.

அவரைத் தொடர்ந்து ஹரிவரதனும் வர, வசுமதியின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.



''வாங்க ஸார், வாங்க.''

''வரலாம் ஹரிவரதன். அப்புறம் ஃப்ரீயா இருக்கீங்க போலிருக்கு.''

சோமநாதன் கேட்க, ''ஆமாம் அங்கிள். இப்பதான் தோட்டத்திலிருந்து வந்தேன். வாங்க. உக்காருங்க,'' என்று உபசரித்தான்.

''அப்புறம் ஊர்ல எல்லாரும் எப்படியிருக்காங்க?'' என்று தன்னைப் பார்த்தவனிடம், ''நல்லாக்காங்க,'' என்றாள் வசுமதி.

அவனைப் பார்த்ததில் ஏதோ ஒரு இனம் புரியாத தவிப்பு வந்து தன்னை ஆட்கொண்டதைப் போல உணர்ந் தாள்.

மிகவும் இயல்பாக சாதாரணமாகப் பேசிய ஹரிவரத னிடமும் என்ன முயன்றும் வசுமதியால் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அதே நேரம் உள்ளிருந்து தன் வயதையொத்த ஒரு பெண் வர, ''இவங்க தான் வசுமதி. உள்ள அழைச்சுட்டுப் போ மது,'' என்றவன், ''அப்புறம் இவ என் பெரிய தங்கை. பேர் மதுமதி,'' என்று வசுமதியிடம் அறிமுகப்படுத்தி வைத்தான்.

''ரொம்ப அழகா இருக்கீங்க,'' என்று மதுமதி சொல்ல, ஹரிவரதனின் முன்பு மிகவும் முயன்று தன்னை இயல் பாகக் காட்டிக் கொண்டாள் வசுமதி.

''வாங்க வசுமதி,'' என்று ஹரிவரதனின் தங்கை தன் னிடம் இருந்த கவர்களில் பாதியை வாங்கிக் கொண்டு முன்னே நடக்க, அவளைப் பின் தொடர்ந்தாள் வசுமதி.

இருக்கீங்க!'' என்ற

''நீங்களும் ரொம்ப அழகா இருக்கீங்க!'' என்ற வசுமதியைப் புன்னகையுடன் பார்த்தவள், ''சரிதான். உங்களுக்காக வேணும்னா நம்பிக்கறேன்,'' என்றாள்.

அதே நேரம் உள்ளறைக்கு வந்து விட்டிருக்க, ''அம்மா! வசுமதி வந்துட்டாங்க,'' என்று தாயை அழைத்தாள்.

''வாம்மா, நல்லார்க்கியா?'' என்று பத்மாவதி புன்னகையுடன் சமையலறையிலிருந்து வெளியே வர, அவர்தான் ஹரிவரதனின் தாய். ''நல்லார்க்கேன் ஆன்ட்டி. நீங்க எப்படியிருக்கீங்க?'' என்று கேட்டாள் வசுமதி.

''இங்க எல்லாரும் நல்லார்க்கோம்மா. நேத்து போன் வந்ததுலிருந்து நாங்க எல்லாருமே உங்கள ரொம்ப ஆவலா எதிர்பாத்துட்டிருக்கோம். உக்காருடாம்மா,'' என்று அங்கிருந்த இருக்கையைக் காட்டியவர், ''இதோ வர்றேன்,'' என்று வசுமதியின் தந்தையை வரவேற்பதற்காக ஹாலுக்கு விரைந்தார்.

''அப்புறம் வசுமதி... வசுன்னு கூப்பிடலாமா?''

மதுமதி கேட்க, ''தாராளமா. அப்படித்தான என்ன எல்லாரும் கூப்புடுவாங்க,'' என்று சிரித்துக் கொண்டே சொன்ன வசுமதி, ''நானும் உங்கள மதுன்னு கூப்புட்டுக்கறேன்,'' என்றாள்.

''பின்ன அப்படித்தான என்னையும் எல்லாரும் கூப்புடுவாங்க,'' என்று சிரித்தவள், அங்கு வந்த இன்னொரு சிறு பெண்ணை, ''மஞ்சு'' என்று அழைத்தாள்.

''வந்துட்டேன்கா,'' என்று வேகமாக அருகில் வந்திருந்த பெண்ணிடம் மதுமதி ஏதோ சொல்ல வருவ



தற்குள்ளேயே, ''வாங்க வசுமதி, நல்லார்க்கீங்களா?'' என்று புன்னகையுடன் கேட்டாள் அந்தப் பெண்.

''எப்படித் தெரியும்?'' என்று ஒரு வினாடி ஆச்சரியப்பட்டவள், உடனே, ''இவ மஞ்சரி. என் தங்கை,'' என்று தனது தங்கையை வசுமதிக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள் மதுமதி.

''அப்புறம் மஞ்சு...''

''சொல்லுக்கா.''

''மதிய நேரத்துல ஜூஸ் குடுக்கலாம். பின்னாடி மரத்துல இருந்து நல்லாப் பழுத்த எலுமிச்சம்பழம் ரெண்டு பறிச்சுட்டு வா.''

''சரிக்கா,'' என்று மஞ்சரி நகர, ''எதுவும் வேண்டாமே!'' என்றாள் வசுமதி.

''அது சரி,'' என்று சிரித்தவள், ''சீக்கிரம் வா,'' என்று தங்கையைத் துரிதப்படுத்தினாள்.

சில நிமிடங்களிலேயே வசுமதியும், மதுமதியும் வா போ என்று அழைத்துக் கொள்ளுமளவிற்கு நல்ல தோழிகளாகி விட்டிருந்தனர். வயது வித்தியாசமும் ஒன்றும் பெரிதாக இருக்கவில்லை, சில மாதங்களே.

பேசிக்கொண்டே, கைகளை நன்கு கழுவிக் கொண்டு எலுமிச்சையைப் பிழிந்து சாறு தயாரித்திருந்தாள் மதுமதி.

''இந்தா வசு, எடுத்துக்கோ.''

''உங்களுக்கெல்லாம்?''

''கொஞ்சம் முன்னாடி தான் டீ சாப்புட்டோம், அண்ணாவும் அப்பாவும் மோர் குடிச்சாங்க,'' என்றவள், ''இரு.

வந்துட்டேறேன்,'' என்று அங்கிளுக்குக் குடுத்துட்டு நகர்ந்தாள்.

மஞ்சரி தனது தாய்க்குச் சமையலில் சிறுசிறு உதவிகளைச் செய்து கொடுத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

சில வினாடிகளில் வந்த மதுமதியிடம், ''நாமளும் போய் ஆன்ட்டிக்கு ஹெல்ப் பண்ணலாமா?'' என்று கேட்டாள் வசுமதி.

''எல்லாமே ஆச்சு வசு. பரிமாறத் தயாரா எடுத்து வைக்கறாங்க. அவ்வளவுதான். வாயேன், உனக்கு வீட்ட சுத்திக் காட்றேன்,'' என்று அழைத்த மதுமதியுடன் சந்தோஷமாக எழுந்து சென்றாள் வசுமதி.

''பெரிய மாட மாளிகை!'' என்ற மஞ்சரியின் கிண்டல் எல்லாம் அவர்களுடைய காதுகள் வரை கூடச் சென்றிருக்கவில்லை.

வீடு, அதை ஒட்டிய தோப்பு என அனைத்தையும் மதுமதி ஆசையாகக் காட்ட, ஏனோ வசுமதிக்கும் அவை அனைத்தையுமே மிகவும் பிடித்துப் போனது.

சந்தோஷமாக ஏதேதோ கேள்விகள் கேட்டாள். மதுமதியும் அவளுக்குத் தெரிந்த அளவில் விளக்கமாகப் பதில் கொடுத்தாள்.

''உன்ன எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு வசு.''

''அப்படியா!''

''ஆமாம், சிட்டில பொறந்து வளர்ந்த பொண்ணு ரொம்ப மாடனா பேசக்கூட யோசிப்பையோன்னு நினைச்சோம். இல்லில்ல. முக்கியமா நாந்தான் அப்படி



நினைச்சேன், ஆனா எவ்வளவு நல்லாப் பேசற,'' என்று சிலாகித்தவளைப் புன்னகையுடன் பார்த்தாள் வசுமதி.

''நானும்கூட நீங்க எல்லாரும் எப்பிடிப் பழகுவீங்களோன்னு யோசிச்சுட்டே தான் வந்தேன் மது. நீங்க எல்லாரும் அவசியம் எங்க வீட்டுக்கு வரணும்.''

''சென்னை வந்தா நிச்சயம் வர்றோம். அதுக்கான வாய்ப்புகளும் வரும்னுதான் எதிர்பாத்துட்டிருக்கேன்,'' என்றவள், ''அண்ணா உங்க எல்லாரையும் பத்தி நிறைய சொல்லுவார். அதனால எனக்குமே அங்க உங்க வீட்டுக்கு வரணும்னு ரொம்ப ஆசைதான்,'' என்று வெகுளித் தனமாகப் பேசிய மதுமதியைப் புன்னகையுடன் பார்த்தாள் வசுமதி.

''அப்படியென்ன சொன்னார் உங்கண்ணா?''

''அங்க எல்லாரும் நம்ம வீடு மாதிரியே தான் நல்லாப் பேசிப் பழகுவாங்கன்னு சொல்லுவார். முக்கியமா உன்ன...''

''ம், என்ன?'' என்று கேட்ட வசுமதிக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

''நீ எல்லாத்துலயுமே ரொம்ப க்யூட்டாம். பிஸினஸ்ல ரொம்ப அனுபவமிருக்கற மாதிரி பிரமாதமாப் பாத்துக் குவியாம். முக்கியமா பொண்ணா அடக்கமா இருப்பியாம். என்ன மாதிரி இல்லாம.''

''அது சரி, கூட நீயும் ரெண்டு பிட்டப் போட்டு விட்றியாக்கும்?''

''அச்சச்சோ! அப்படியெல்லாம் இல்லப்பா. ஆனா இதெல்லாம் நான் அண்ணாவோட வாயப் பிடுங்குனதுல வந்தது.''

மாட்டாராக்கும்.''

''இல்லேன்னா சொல்லியிருக்க மாட்டாராக்கும்.''

''அச்சச்சோ! அப்புறம் அவ்வளவுதான். உலகம் அழிஞ் சுடும். அண்ணாகிட்ட அவ்வளவு சீக்கிரம் எதையும் கேட்டுட முடியாது. அவ்வளவு அழுத்தம்,'' என்று அலுத்துக் கொண்டவளைப் புன்னகையுடன் பார்த்தாள் வசுமதி.

''ஏன் வசு சிரிக்கற?''

''இல்ல. எங்கூட தொடர்ந்து ஒரு ரெண்டு நாள் இருந்து பாத்தா தான் நான் எந்த அளவுக்கு வாயடிப் பேன்னு உனக்குப் புரியும்.''

''நீயா? என்னைவிட... சான்ஸே இல்ல...''

கிணற்றடித் தென்னை மர நிழலில் அமர்ந்து மும்முர மாகப் பேசிக் கொண்டிருந்த பெண்கள் இருவரும் யாரோ வரும் அரவம் கேட்டுத் திரும்பினர்.

ஹரிவரதன் வந்து கொண்டிருப்பது தெரிய, இருவரும் எழுந்தனர்.

''மும்முரமாப் பேசற அளவுக்கு ஃப்ரண்ட்ஸ் ஆயிட் டிங்க போலிருக்கு!'' என்று கேட்டுக் கொண்டே உயர மாக இருந்த வாழை இலைகளைச் சற்று எம்பி, கத்தியின் உதவி கொண்டு அறுத்தான் ஹரிவரதன்.

''பின்ன?'' என்று கேட்டுக் கொண்டே தனது அண்ண னின் கைகளில் இருந்து இலைகளை அவன் அறுத்துக் கொடுக்கக் கொடுக்கத் தனது கைகளில் வாங்கிக் கொண்டாள் மதுமதி.

''போதும்ணா. நிறைய ஆயிடுச்சு,'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே தாய் தன்னை அழைக்கும்



குரலில், ''வா வசு, நான் உள்ள போறேன்,'' என்று இலை களுடன் அங்கிருந்து சென்றிருந்தாள் மதுமதி.

''இன்னைக்கே கிளம்பணுமா?''

ஹரிவரதன் கேட்க, ''ஆமாம். ஈவினிங்,'' என்றாள் வசுமதி.

''ஏன் அத்தை வீட்ல ரெண்டு நாள் இருந்துட்டுப் போலாமே.''

''ஏன் உங்க வீட்ல இருந்துட்டுப் போகக் கூடாதா?''

அப்படிக் கேட்ட தன்னை ஹரிவரதன் சாதாரணமாகத் தான் பார்த்தான் என்றாலும், அந்தப் பார்வையில் முகம் சிவந்து போனாள் வசுமதி.

ஆனாலும் அதை முயன்று மறைத்துக் கொண்டாள்.

''சரி, உள்ள வா, சாப்பிடலாம்,'' என்று நகரப் போன வனை, ''ஒரு நிமிஷம்!'' என்று அழைத்தாள்.

நின்று திரும்பியவனைப் பார்த்தவளுக்கு என்ன பேசுவதென்றே தெரிந்திருக்கவில்லை. அந்த அளவிற்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

''ம்.''

''உங்கள அங்க வீட்ல எல்லாரும் கேட்டதா சொல்லச் சொன்னாங்க.''

''ரொம்ப சந்தோஷம். நானும் எல்லாரையும் ரொம்பக் கேட்டதா சொல்லிடு.''

''எல்லாரையும்னா?''

''ஆன்ட்டி, வாசவி, வசந்த்,'' என்றவன், அதற்கு மேல் அங்கு நின்றிருக்கவில்லை. ஆனால் ஹரிவரதன்

சென்று விட்ட பிறகும் கூட அப்படியே நின்று கொண் டிருந்தாள் வசுமதி.

தனியாகப் பேசக் கிடைத்த வாய்ப்பே இது மட்டும் தான். ஆனால் அதிலும் கூட நின்று பேச விருப்ப மில்லாமல் செல்கிறான் என்றால்,

கடவுளே! அப்படியானால் அவனுக்குத் தன்மேல் துளிகூட ஆசையில்லையா....

சரிதான், நாம்தானே மனதைத் தொலைத்து விட்டுப் படாத பாடு பட்டுக் கொண்டிருக்கிறோம். அவனெல் லாம் சர்வ சாதாரணமாகத் தானே இருக்கிறான்.

கண்கள் கலங்கி விட்டிருக்க, எதுவுமே தோன்றாது நின்று விட்டிருந்தாள்.

ஏதேதோ எண்ண ஓட்டங்களில் மேலும் அழுகை வந்தது.

யாரேனும் பார்த்து விட்டால் என்று முயன்று நடப் புக்கு வந்திருந்தவள், அவசரமாகக் கண்களைத் துடைத் துக் கொண்டாள்.

மேலும் சில நிமிடங்கள் கூட எடுத்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டு அதன் பிறகே மெதுவாக உள்ளே வந்தாள்.

''வா வசு, இப்பதான் உன்னக் கூப்புட வரலாம்னு நினைச்சேன்,'' என்ற மதுமதிக்கும் வசுமதியின் முகத்தில் தெரிந்த வித்தியாசம் கண்களில் படவே செய்தது.

ஆனாலும் அதைத் துளியும் வெளியே காட்டிக் கொண்டாள் இல்லை.

இயல்பாக வேறு விஷயங்களைப் பற்றிப் பேசினாள்.



முயன்று தன்னையும் அந்தப் பேச்சுக்குள் இணைத் துக் கொண்டாள் வசுமதி.

முயன்றுதான்.

போகப்போக ஓரளவிற்கு சகஜ நிலைக்கும் வந்து விட்டிருந்தாள்.

ஆண்கள் மூவரும் முதலில் உணவருந்தி முடிக்க, அதன் பிறகு பெண்கள் அமர்ந்து கொண்டார்கள்.

''உங்க தம்பி ஒருத்தர் இருக்காரில்ல,'' என்று வசுமதி கேட்க, ''அவனும் அண்ணாதான். அதாவது ஹரியண்ணா வுக்கு அடுத்தவன்,'' என்ற மதுமதி, ''அவனோட ஃப்ரண்ட்ஸ் கூட டூர் போயிருக்கான். வர ரெண்டு நாளாகும்,'' என்றாள்.

''ஓ! அப்ப மஞ்சு தான் கடைசி இல்லையா?''

''ஆமாம் வசு. ஹரி அண்ணா தான் மூத்தவர். அவருக் கப்புறம் ஆறு வருஷம் கழிச்சு ரிஷி. அதுக்கப்புறம் ரெண்டு வருஷம் கழிச்சு நான். அப்புறம் கடைசியா மஞ்சு. என்னைவிடக் கூட நாலு வருஷம் சின்னவ.''

''ஓ! அப்ப என்ன விட நீ ஒரு வருஷமே சின்னவளா?'' என்று கேட்ட வசுமதியிடம், டேட் ஆஃப் பார்த் கேட் டாள் மதுமதி.

கணக்கிட்டவள், ''அட ஆமாம்பா. ஒன்னே கால் வரு ஷமே நான் சின்னவ!'' என்றவள், ''அடடா, வா போன்னு கூப்டுட்டேனே!'' என்று வருத்தப்பட்டாள்.

''அட நீ வேற மது, ஃப்ரண்ட்ஸ் ஆயிட்டா நோ ஏஜ் டிஃப்ரண்ஸ்.''

''அது சரிதான்,'' என்று சிரித்தாள் மதுமதி.

அதற்குப் பிறகு ஹரிவரதனுடன் தனித்துப் பேச வாய்ப்பே கிடைத்திருக்கவில்லை.

பொதுவாக ஒரு சில வார்த்தைகள் மட்டுமே பேச முடிந்தது, அது கூடப் போய் வருகிறேன், ஊருக்கு வந்தால் வாருங்கள் என்பதைப் போலத்தான்.

# 9

ஒரு மாதம் சென்றிருந்தது.

யாருக்கு வந்த வினையோ என்பதைப் போலச் சில நேரங்களில் பெரிய மகள் வசுமதி நடந்து கொள்வதைப் போல அவளுடைய பெற்றவர்களுக்குத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

முக்கியமாக வசுமதியின் தாய் கோகிலாவுக்கு.

அதைத் தனது கணவனிடமும் சொல்லவே செய்தார்.

ஆனால் சோமநாதனோ அதைக் கேட்டு நன்றாகவே சிரித்தார்.

''ஏன் சிரிக்கறீங்க?''

''பின்ன போரடிச்சுட்டு உக்காந்துட்டிருக்கா. பொண்ணு பாவம், அவளப் போய் நீ என்னென்னவோ சொல்ற!'' என்றார்.

''ரெண்டு நாள் நல்லா கவனிச்சுப் பாருங்க. வித்தியாசம் தெரியும்.''



''அதெல்லாம் ஒண்ணும் தேவையில்ல. விடு,'' என்றவர், ''அப்புறம் பேங்க் மேனேஜர்ன்னு சொல்லிட்டு அவங்க பையனுக்கு நம்ம வசுவோட ஜாதகத்தப் பொருத்தம் பாத்தோமே...''

''ஆமாம். சொல்லுங்க.''

''இந்த வார ஞாயித்துக்கிழமை நம்ம வசுவப் பாக்க வர்றாங்களாம்.''

''என்ன இவ்வளவு மெதுவா சொல்றீங்க?''

''எனக்கே அவங்க மதியம் தான் கூப்புட்டாங்க. சரி தான். எதுக்கும் காலைல கூப்புட்டு சொல்லலாம்னு கேட்டேன்.''

''சரி.''

''சரின்னு சொன்னாங்க. நல்ல பதிலா இருக்கட்டுங் கற மாதிரி சொன்னாங்க. எனக்கென்னவோ அந்தப் பையனப் புடிச்சுப் போச்சுமா. சன்டே வரச் சொல்லிடலாம்.''

''தாராளமா!'' என்று சொன்ன மனைவி, ''ஆனா...'' என்று தயங்க, என்னவென்று கேட்டார் சோமநாதன்.

''வசுகிட்ட ஒரு வார்த்த கேக்க வேண்டாமா?''

''கேட்டா வேண்டாம்னு தான் சொல்லுவா.''

''புரியற மாதிரி எடுத்துச் சொன்னா சரின்னுட்டுப் போறா.''

''வேண்டாம், அவசியமில்ல. நான் அவங்ககிட்ட வாங்கன்னு காலைல கூப்புட்டு சொல்லிடறேன்.''

மேலும் ஐந்து நாட்கள் சென்றிருந்தன.

விடிந்தால் ஞாயிற்றுக் கிழமை.

மகளிடம் மெதுவாக விஷயத்தைச் சொன்னார் சோமநாதன். கோகிலாவும்.

''யாரக் கேட்டு வரச் சொன்னீங்க?''

பட்டென்று மகளிடமிருந்து வந்த கேள்வியில் பெற்றவர்கள் இருவருமே திகைத்துப் போய் விட்டிருந்தனர்.

முக்கியமாக சோமநாதன்.

''யாரமா கேக்கணும்?'' என்று கேட்டார்.

''என்னக் கேக்கணும்.''

''பெத்தவங்க நாங்க உனக்கு நல்லது தான் செய்வோம்.''

''சரிதான். அது பொதுவா எல்லா விஷயங்கள்லையும். இது லைஃப் மேட்டர்.''

''சரி.''

''என் மனசுக்குப் பிடிச்சிருக்கணும்.''

''சரி, சொல்லு. இப்ப என்ன தான் சொல்ல வர்ற?''

''வர வேண்டாம்னு அவங்களக் கூப்புட்டு சொல்லிடுங்க.''

''ஏன்?''

''ஏன்னா என்ன சொல்றது? எனக்குப் பிடிக்கல.''

''அதான் ஏன்னு கேக்கறோம்.''

........

''என்னமா, சொல்லு?''

''நான் ஒருத்தர விரும்பறேன்.''



எங்கிருந்து அவ்வளவு தைரியம் வந்ததோ, பட்டென்று சொல்லியே விட்டிருந்தாள் வசுமதி.

மகளின் பதிலில் பெற்றவர்கள் இருவருமே வாயடைத்துப் போய் விட்டிருந்தனர்.

முதலில் சுதாரித்துக் கொண்டது சோமநாதன்.

''யாரது?''

''ஹரிவரதன். அவருக்கும் என்னப் பிடிச்சிருக்கு. ஆனா அத உங்கிட்ட எப்படி சொல்றதுன்னு தெரியாம...''

''என்ன மாதிரி ஒரு பச்ச துரோகம்!''

விரக்தியுடன் தந்தையிடமிருந்து வந்த வார்த்தைகளில், ''ப்ளீஸ்பா, அப்படிச் சொல்லாதீங்க,'' என்றாள் வசுமதி.

''பின்ன என்ன சொல்லணுங்கற?''

''தயவுசெஞ்சு புரிஞ்சுக்கோங்கப்பா. எங்க ரெண்டு பேருக்குமே பிடிச்சிருக்...''

''ஆனா எனக்குப் பிடிக்கல. மறந்துடு.''

''முடியாது.''

''முடியணும்.''

''எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடந்தா அது அவர் கூடதான்.''

''சான்ஸே இல்ல, நாங்க பாத்து சொல்ற மாப்பிள்ளையத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டாகணும்.''

''இந்த விஷயத்துல என்ன நீங்க கம்பல் பண்ணினா அப்புறம் என்ன உயிரோட பாக்க முடியாது.''

''என்ன மிரட்டலா?''

''இல்லப்பா, உண்மையச் சொல்றேன்.''

''இப்படியெல்லாம் சொல்லுன்னு சொல்லிக் குடுத் தானா?''

தந்தையின் கேள்வியில் துடித்துப் போய் விட்டிருந் தாள் வசுமதி.

''இல்லப்பா. இது நான் சொல்றது தான். ஹரிவரதனப் பொறுத்த வரைக்கும் இனி எப்படியோ, என்னால தான் அவரில்லாத வாழ்க்கைய நினைச்சுக்கூடப் பாக்க முடி யல.''

''சரி.. பாக்காத.''

பட்டென்று சொல்லிவிட்டுத் தந்தை செல்ல, அவர் சென்ற திசையையே பார்த்தபடி அப்படியே நின்று விட்டிருந்தாள் வசுமதி.

மேலும் ஒரு வாரமும் சென்றிருந்தது.

இப்பொழுதெல்லாம் தன்னுடைய அறைக்குள்ளேயே சிறை புகுந்து விட்டிருந்தாள் வசுமதி.

பெரிய மகள் வசுமதி அன்று காலையிலிருந்து எது வுமே சாப்பிட்டிருக்காததில், அதைக் கணவனிடம் சொன்னார் கோகிலா.

''சரி. அதுக்கு என்ன செய்யணுங்கற?''

''தெரியலைங்க. நீங்க தான் சொல்லணும்.''

''அவ இஷ்டத்துக்கெல்லாம் ஆட நான் தயாரில்ல.''

''அவளே சொல்ற மாதிரி இது லைஃப் மேட்டர்.''

''இருக்கட்டும்.''



''ஏதாவது விபரீதமாயிடப் போகுதுங்க.''

''என்ன, அவளோட சேந்து நீயும் என்ன மிரட்டறியா?''

''இந்த விதத்துலயும் கொஞ்சம் யோசிக்கலாமேன்னு சொல்றேன்.''

''சரி. யோசி.''

''தயவு செஞ்சு நான் சொல்றதையும் கொஞ்சம் கேளுங்க...''

''என்னடி, எனக்கு ஒன்னுமே தெரியாதுன்னு முடிவே பண்ணிட்டிங்களா?''

''தயவு செஞ்சு டென்ஷனாகாதீங்க.''

''ம் இது நல்லாருக்கு!'' என்று சிரித்த கணவனைப் பயத் துடன் பார்த்தார் கோகிலா.

''கொஞ்சம் நான்...''

''போ, இதுக்கு மேல என்னோட பொறுமைய சோதிக் காத...''

''ஏன் அந்தத் தம்பிக்கு என்ன குறைச்சல்?''

''எம்பொண்ணக் குடுக்கற நிலம ஒரு சமயம் வந்தா வேணும்னா சொல்றேன் பதில. அப்பக் கேட்டுக்கோ.''

''எனக்கென்னவோ எல்லா விதத்துலயுமே அந்தத் தம்பி ரொம்பப் பிரமாதமான, நம்ம வசுவுக்கு ஏத்த வாழ்க்கைத் துணைன்னு தோணுதுங்க... தயவு செஞ்சு கேளுங்க. நீங்க எங்க போய் எப்படித் தேடினாலும் அந்த ஹரி தம்பிய விடவும் ஒரு நல்ல மாப்பிள்ளைய உங்க ளால தேடிக் கண்டு பிடிக்கவே முடியாது.''

''இது நல்ல ஜோக்கா இருக்கு. அந்த மாதிரி வேண்டவே வேண்டாம்னு தான நானும் சொல்லிட்டிருக்கேன்.''

''கடவுளே! திரும்பத் திரும்ப அதையே சொல்லாதீங்க, முதல்ல ஒன்னப் புரிஞ்சுக்காங்க. உங்க பொண்ணு தான் அந்தத் தம்பிய விரும்பறா. அவரு கிடையாது.''

..........

''ஒருவேளை உங்க மக ஆசப்பட்றாளேன்னு நீங்க இறங்கிப் போய் அவங்ககிட்டே கேட்டாக்கூட அவங்க சம்மதிக்கறது சந்தேகம் தான். அப்படியொன்னும் வேற வழியில்லேன்னு தலைய ஆட்றதுக்கு அவங்க ஒன்னும் பாதாளத்துலயும் கிடக்கல. உங்க மக பெரிய கோபுரத்து உச்சியிலும் இல்ல.

''அதுலயும் எனக்கென்னவோ அந்தத் தம்பி ரொம்பவும் ரோஷக்காரர்னு தோணுது, நீங்க ஏதாவது முகத்தக் காட்டுனீங்கன்னா யோசிக்காம வேண்டாம்னு சொல்லிடுவாங்க. அப்புறம் உங்க பொண்ணோட நிலைய நினைச்சுப் பாருங்க.

''உங்க கோணத்துல இருந்தே யோசிச்சாக் கூட, உங்க மகளுக்குத் தான் புத்தி கெட்டுப் போயிருக்கு. முதல்ல கோபப்பட்டீங்கன்னா உங்க மக மேல தான் படணும். அதுக்கப்புறம் தான் மத்தவங்க மேல.''

பெரிய ரோஷக்காரன், எல்லாம் வெளி வேஷமென்று ஹரிவரதனைப் பற்றி ஏளனத்துடன் நினைத்தார் சோமநாதன்.

என்னவோ பெரிய ஹீரோ மாதிரி செய்து கொடுத்த வேலைக்குக் கூலி கூட வேண்டாமென்றானே, மன



திற்குள் இவ்வளவு பெரிய திட்டத்தை வைத்துக் கொண்டிருப்பவனுக்குக் கூலியெல்லாம் எம்மாத்திரம்?

''அதோட உங்க பொண்ணப் பத்தி நான் சொல்லி எதுவும் உங்களுக்குத் தெரிய வேண்டியதில்ல. அவ பாக்கவும் பேசவும் தான் இலகுவாத் தெரியறா. ஆனா ஒன்னப் புடிச்சுட்டா எப்பவுமே உடும்புப் புடிதான்.

''நீங்களும் தான் கொஞ்சம் ரொம்பவும் கொஞ்சம் இறங்கி வாங்களேன்.

''துணி, நகை, படிப்புன்னு சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் கூட அவளோட விருப்பத்தைக் கேட்டு அதன்படி செஞ்சீங்களே, அப்படியிருக்கும் போது இது வாழக்கைப் பிரச்சனை. புரியாம தான் கேக்கறேன், எதுக்கு இந்த அளவுக்கு யோசிக்கறீங்க?''

## 10

ஒரு வழியாகத் தானும் கீழே இறங்கி வந்திருந்தார் சோமநாதன்.

சந்தோஷத்துடன் அல்ல, மனைவி சொன்னது போலவெல்லாம் எதுவும் நடந்து விடக் கூடாதே என்ற பயத்துடன் தான்.

ஆனாலும் அதை அவர் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அதை மட்டுமல்ல, சந்தோஷம், கோபம் என எந்த உணர்ச்சியையுமே அவர் காட்டிக் கொள்ளவில்லை.

கோகிலா தானே அழைத்து ஹரிவரதனுடனும் அவனுடைய வீட்டிலும் பேசினார்.

கணவன் அவசர வேலையாக வெளியூர் சென்றிருப்பதால், அவர் என்னை அழைத்துப் பேசச் சொன்னாரென்று வேறு வழியில்லாமல் பொய் சொன்னார்.

அதை ஹரிவரதன் நம்பவில்லையென்பது பேசியதை வைத்தே புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் ஹரிவரதனின் பெற்றவர்கள் தான் சொன்னதை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டதைப் போலத் தான் தோன்றியது.

திருமண நிச்சயத்தன்று மிகவும் பயந்து கூடப் போய் விட்டிருந்தார் கோகிலா.

அந்த அளவிற்கு ஏதோ போனால் போகிறது என்பதைப் போலக் கணவன் நடந்து கொண்டதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

அதை ஈடு செய்வதற்காகவே தான் விழுந்து விழுந்து இரண்டு மடங்கு அக்கறையுடன் அனைத்தையும் பார்த்துக் கொண்டார் என்று கூடச் சொல்லலாம்.

ஆனால் தான் அப்படிச் செய்ததில் தான் கணவனின் விருப்பமின்மை தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டதென்பதை, பாவம்! அவர் சிறிதும் அறிந்து கொண்டிருக்கவில்லை.

மனதிற்குள் ஏளனமாகச் சிரித்துக் கொண்ட ஹரிவரதன் பார்க்கும் மற்றவர்களுக்காக மட்டுமே தன்னை முயன்று இயல்பாகக் காட்டிக் கொண்டான் என்றால் அது சற்றும் மிகையல்ல.



மற்றப்படி எந்தக் குறையுமில்லாமல் திருமண வேலைகளெல்லாம் சிறப்பாக நடைபெற்று வந்தன.

மிகச் சிலரைத் தவிர வேறு யாருக்குமே எந்த வித்தியாசமும் தெரிந்திருக்கவுமில்லை.

அந்த அளவிற்கு சந்தோஷத்துடன் திருமணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

அதிலும் சிறியவர்களுக்குச் சொல்ல வேண்டியதே இருக்கவில்லை.

திருமண நாளும் அன்று இனிதே விடிந்தது.

வசுமதியால் அனைவருடைய மனநிலையையுமே தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

முக்கியமாக வருங்காலக் கணவனை.

தொடக்கத்தில் நிம்மதியைக் கொடுத்து வந்த அவனுடைய மௌனம் இப்பொழுது பயமாக மாறியிருப்பதையும் உணர்ந்து கொள்ள முடிந்தது.

சுற்றிச் சொந்தங்களிலிருந்தும் தனிமையாக உணர்ந்தாள்.

ஏதேதோ எண்ண ஓட்டங்களுடன் மணவறையில் அமர்ந்தாள் வசுமதி.

அருகில் இருப்பவனை நிமிர்ந்து பார்க்கவே பயமாக இருந்தது.

ஒரு வழியாகத் திருமதியாகிக் கணவனின் கரம் பிடித்திருந்தாள் வசுமதி.

இரவின் தனிமையில் கணவனை எதிர்கொண்ட வசுமதிக்குத் தொண்டையில் ஏதோ வந்து அடைத்துக் கொண்டதைப் போலிருந்தது.

கதவு திறக்கப்படும் ஓசையில் திரும்பிப் பார்த்த ஹரிவரதன், சுத்தமாக உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத் துடன் மனைவியை எதிர்கொண்டான்.

ஏதோ ஒரு இனம் புரியாத தயக்கமும், பயமும் வந்து வசுமதியை என்னவோ செய்தது.

எழுந்து தன்னை நோக்கி வந்த கணவன், ''போய்ப் படுத்துக்கோ,'' என்று விட்டுத் தானும் சென்று படுக் கையில் விழுந்திருந்ததைக் கண்டாள்.

அப்போதிருந்த மனநிலைக்குக் கணவனின் செய்கை யில் நிம்மதியாகக் கூட உணர்ந்தாள் எனலாம்.

தானும் சென்று படுக்கையில் விழுந்திருந்த வசுமதி சிறிது நேரம் தான் தூக்கம் வராமல் புரண்டிருப்பாள்.

அது அவள் எப்பொழுதும் தூங்கும் படுக்கையறை என்பதால், கணவன் தன்னருகில் படுத்திருக்கிறான் என்பதே இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத ஒருவித அவஸ்தையை அவளுள் ஏற்படுத்தியிருந்தது.

காலையில் சற்று நேரத்திலேயே தூக்கம் கலைந்து எழுந்து விட்டிருந்தவள் கணவன் தனக்கு முன்னரே எழுந்து அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

வேகமாகச் சென்று காலைக் கடன்களை முடித்துக் குளித்துவிட்டு வெளியே வந்தவள், சமையலறைக்குச் சென்று கணவனுக்கும் தனக்குமான காபி கலக்கி எடுத்துக் கொண்டு வந்தாள்.

''காபி எடுத்துக்கோங்க,'' என்று மெல்லிய குரலில் கணவனுக்கு முன்பாக ட்ரேயை நீட்டினாள்.



'குடிச்சாச்சு.''

ஒற்றை வார்த்தையில் கணவனிடமிருந்து வந்த பதிலில், ''எப்படி?'' என்று தயக்கத்துடன் கேட்டாள்.

''வெளிய பேப்பரோட காபி ப்ளாஸ்க்கும் இருந்தது.''

''ஓ, சரி. இன்னொரு முறை எடுத்துக்கோங்...''

''வேண்டாம்,'' என்று விட்டுக் கணவன் குளிப்பதற் காக டவலுடன் செல்ல, பேசாமல் தான் மட்டும் எடுத்துக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் வெளியே வந்த கணவனிடம், ''கிளம் பிட்டுக் கீழே வாங்க. டிபன் சாப்பிடலாம்,'' என்று அழைத்தாள்.

''எட்டு மணிக்கு ஊருக்குக் கிளம்பணும்.''

''இப்பவே...''

''சரியா எட்டு மணிக்குள்ள நாம இங்கிருந்து கிளம்பி யாகணும்,'' என்றவன், ''டிபன் சாப்டா சரியா இருக்கும்,'' என்று வாட்சைப் பார்த்தான்.

''இதோ இப்பவே டிபன் எடுத்து வைக்கறேன். வாங்க,'' என்று வேகமாகக் கீழே இறங்கிச் சென்றாள் வசுமதி.

சொன்னதுபோலச் சரியாக எட்டு மணிக்குக் கணவ னுடன் கிளம்பி விட்டிருந்தாள் வசுமதி.

தன்னுடைய பொருட்கள் அடங்கிய பேக்கை மறுபடி யும் ஒருமுறை சரி பார்த்துக் கொண்டிருந்த வசுமதி, கண வன் தன்னை நோக்கி வருவதைப் பார்த்து நிமிர்ந்தாள்.

''கட்டின சேலையோடவும், நான் கட்டின தாலிக் கொடியோடவும் வா, போதும். மத்ததெல்லாத்தையும் கழட்டி வெச்சுட்டுக் கிளம்பு.''

''இருந்...''

''ஓ! இவனால எல்லாத்தையும் வாங்கிக் குடுக்க முடியுமான்னு பாக்கறியா?''

கணவனின் கேள்வியில், அந்த வினாடியே அனைத்து நகைகளையும் கழற்றி வைத்திருந்தாள் வசுமதி.

கணவன் கட்டியிருந்த தாலியோடு கூடிய தங்கச் செயினையும், ஒரு சிறிய, தான் சிறு வயதிலிருந்து அணிந்து வந்த வெள்ளைக்கல் வைத்த தோடை மட் டுமே எடுத்து அணிந்தவள், நான்கு கண்ணாடி வளை யல்களை எடுத்து இரண்டு கைகளுக்கும் அணிந்து கொண்டாள்.

கணவனுக்காக அவன் சொல்வதைச் செய்கிறோம் என்று தோன்றிய எண்ணத்தில் மனதிற்குள் மிகவும் பெருமையாக உணர்ந்தாள்.

''நான் ரெடி,'' என்று வெறும் கைகளுடன் வந்த மனைவியை ஒரு முறை பார்த்தவன், எழுந்து முன்னே நடந்தான்.

வீட்டில் அனைவரிடமும் சொல்லிக் கொண்டு வந் தாள் வசுமதி.

சோமநாதன் ஹாலில் அமர்ந்திருக்க, ''நாங்க கிளம்ப றோம்,'' என்று அனைவருக்கும் பொதுவாகச் சொன்னான் ஹரிவரதன்.

மகளின் கோலம் மனதை உறுத்த சற்றே மட்டுப்படத் தொடங்கியிருந்த சோமநாதனின் கோபம் மேலும் அதிகமாகி விட்டிருந்தது.



வாறோம்பா என்ற மகளுக்குப், ''போய்ட்டு வாங்க,'' என்று விட்டேற்றியாக எங்கோ பார்த்துக் கொண்டு பதில் சொன்னார்.

இந்த வீம்பெல்லாம் எத்தனை நாட்களுக்கு, நானும் பார்க்கிறேனென்று மனதிற்குள் சொல்லிக் கொண்டார்.

கோகிலாவிற்கும் மகளின் அந்தக் கோலம் என்னவோ போலத்தான் இருந்தது.

ஆனாலும் வீட்டு மாப்பிள்ளையிடம் கணவன் காட்டிய உதாசீனம் அவருடைய நெஞ்சுக் கூட்டையே அதிரச் செய்திருந்தது.

சாஸ்திர சம்பிரதாயங்களையெல்லாம் பார்க்காமல் மகளும், மருமகனும் கிளம்பி விட்டிருந்தது கூட மனதிற்கு ஒரு வகையில் நிம்மதியளிப்பதாக இருந்தது.

நேராக ஒரு பெரிய துணிக் கடைக்கு அழைத்துச் சென்ற கணவன் பத்துச் சேலைகளை எடுத்துக் கொடுக்க, பேசாமல் வாங்கிக் கொண்டாள்.

அடுத்ததாக ஒரு நகைக் கடைக்கு மனைவியை அழைத்துச் சென்றவன், இரண்டு தங்க வளையல் களையும், பிறகு தரமான தயாரிப்பில் ஒரு பெண்கள் அணியும் கைக்கடிகாரத்தையும் வாங்கி அணிந்து கொள்ளச் சொல்லி மனைவியிடம் கொடுத்தான்.

கணவன் வாங்கிக் கொடுத்ததை சந்தோஷத்துடன் அணிந்து கொண்டாள் வசுமதி.

''எல்லா விதத்துலயும் நான் விரும்பற மாதிரியான பொருத்தமான மனைவியா மாறிட்டதா சந்தோஷப்பட் டுக்காத! இன்னும் நிறைய இருக்கு!'' என்ற கணவன்

எதைக் குறிப்பிட்டுச் சொன்னான் என்பது புரியாவிட்டாலும் உங்களுடைய மனதிற்குப் பிடித்த மனைவியாவதற்கு நானும் எதை வேண்டுமானாலும் செய்யத் தயாரென்று புன்னகையுடன் மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

பஸ்ஸில் செல்லும்போது கணவனை ஒட்டி அமர்ந்து கொள்ள நேரிட்டதை மனதிற்குள் உணர்ந்து அனுபவித்தாள் வசுமதி.

ஏற்கெனவே அவனுடைய அருகாமை என்னவோ செய்து கொண்டிருக்க, யதேச்சையாகத் தன்னைத் திரும்பிப் பார்த்த கணவனின் பார்வையில் மேலும் குப்பென்று முகம் சிவந்து போனாள்.

அந்த நிலையில் மனைவியைப் பார்க்க நேர்ந்த ஹரிஹரனும் அந்த வினாடியில் தன் வசம் இழந்து விட்டிருந்தான் என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

குனிந்து தன்னை ஓரளவு சமாளித்துக் கொண்ட வசுமதி, முயன்று ஜன்னலுக்கு வெளியே பார்வையைத் திருப்பியிருந்தாள்.

வீட்டிற்கு வந்த மணமக்களை ஏற்கெனவே தயாராக இருந்த பத்மாவதி ஆலம் சுற்றி உள்ளே அழைத்துக் கொண்டார்.

தனது அத்தையின் வார்த்தைக்கிணங்க, வீட்டில் வந்து சூழ்ந்திருந்த சொந்தங்கள் முதல் அனைவரிடமும் சிரித்த முகத்துடன் பேசினாள் வசுமதி.

அனைவருக்கும் மதிய உணவு பரிமாறப்பட, தானும் சென்று உதவினாள்.



கடைசியாக வீட்டுப் பெண்களும் உணவை முடித்தனர்.

''வசுமதி.''

தனது அத்தை அழைக்க, அருகில் சென்றாள் வசுமதி.

''என்னமா இந்த வேலைக்கே இப்படி வேத்துப் பூத்துப் போயிட்ட?'' என்று சிரித்த பத்மாவதி, ''சரிதான். உனக்குக் காலைலிருந்தே அலைச்சலா இருந்திருக்கும். போய்க் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு போ,'' என்றார்.

''பரவாயில்ல அத்தை.''

''குளிக்கறதா இருந்தாலும் உங்க பெட்ரூம்க்கு ஒட்டியே பாத்ரூம் இருக்கு. காட்றேன் வா,'' என்று மருமகளுடன் நடந்தார் பத்மாவதி.

''இதுதாம்மா. இத்தனை நாளும் ஹரியோட ரூமா இருந்தது, இனிமேல் உங்க ரூம்,'' என்றார்.

..........

''சின்னச் சின்ன மாற்றங்கள் செஞ்சிருக்கு,'' என்று அவர் காட்டிய கணவனின் அறை, பார்க்கவே விஸ்தாரமாகவும் சுத்தமாகவும் மனதிற்கு மிகவும் பிடித்துப் போனது.

சரிதான். கணவனுக்குத் தான் அனைத்துமே படு சுத்தமாக இருக்க வேண்டுமே, அப்படியிருக்கும் போது அவனுடைய அறையைப் பற்றிக் கேட்கவா வேண்டும்.

இனிமேல் உங்களுடையது என்ற தனது அத்தையின் வார்த்தைகள் தன்னை என்னவோ செய்தது அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

''சரிடாம்மா. அதுதான் பாத்ரூம். ஏதாவது அசவுகர்யம் இருந்தாலும் சொல்லு,'' என்றவர், ''சரி, போய்க் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு,'' என்று அங்கிருந்து நகர்ந்தார்.

அத்தை சென்று விட்டிருக்க, ஏனோ நிற்கவும் பிடிக்காமல் அமரவும் பிடிக்காமல் தூங்கவும் பிடிக்காமல் என்னவோ போல உணர்ந்தாள் வசுமதி.

சில நிமிடங்கள் தான் அப்படியிருந்தது. பிறகு பேசாமல் கதவைச் சும்மா மூடிக்கொண்டு சென்று கட்டிலின் ஓரத்தில் படுத்து விட்டிருந்தாள்.

தூங்குவதற்காக அல்ல. அதோடு தூக்கமும் அருகில் வந்தால் அல்லவா?

ஏதேதோ எண்ண அலைகள் மனதை என்னவோ செய்தன.

ஆனால் அவையனைத்திற்கும் மேலாகக் கணவனின் முகம் வந்து அவளை உள்ளம் படபடக்கச் செய்தது.

ஒரு அரை மணி நேரம் சென்றிருக்கும். படுக்கையை விட்டு எழுந்து அமர்ந்திருந்தாள்.

ஜன்னலுக்கு வெளியே யாருடனோ பேசிக் கொண்டிருந்த கணவனின் குரல் அவளை அப்படியெழுந்து அமரச் செய்திருந்தது.

தனது கைக்கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

மணி நான்காகி இருந்தது.

எழுந்து கணவன் வாங்கிக் கொடுத்திருந்த துணிகளையெல்லாம் எதற்கும் இருக்கட்டுமென்று அப்போதைக்குப் பீரோவிற்குள் அடுக்கி வைத்தாள்.



குளித்துவிட்டு வேண்டுமானால் இதை அணிந்து கொள்ளென்று அத்தை தனக்காக எடுத்து வைத்திருந்த சேலையையும் அதற்கான அனைத்து செட்டையும் எடுத்துக் கொடுத்து விட்டுப் போயிருக்க, அதை மட்டும் எடுத்து வெளியே வைத்தாள்.

என்ன செய்வதென்று தெரியாமல் மேலும் சிறிது நேரமும் கூட அப்படியே அமர்ந்திருந்தவள் பிறகு சென்று குளித்து விட்டு வந்தாள்.

நேரம் ஐந்துக்கும் மேல் ஆகியிருக்க, தயக்கத்துடன் வெளியே வந்தாள்.

யாரும் கண்களில் படாததால் நேராகச் சமையலறைக்குச் சென்றாள்.

அத்தை இரவு உணவு வேலையில் ஈடுபட்டிருக்க, உதவப் போனாள்.

''வேண்டாம்மா. இத நாங்க பாத்துக்கறோம். நீ போய்ப் பூஜை ரூமில் விளக்கேத்தி வை,'' என்றவர், ''வா,'' என்று மருமகளுக்குப் பூஜையறையைக் காட்டினார்.

அறை சிறிதாக இருந்தாலும் அனைத்துக் கடவுளின் படங்களும் வரிசையாக அடுக்கப்பட்டிருந்ததைப் பார்க்கவே பிரமாதமாக இருந்தது.

''என்ன விடக் கூட உன் மாமாவுக்குக் கடவுள் பக்தி அதிகம்!'' என்றவர், ''இதிது இங்கிருக்கு,'' என்று அனைத்தையும் காட்டினார்.

விளக்கேற்றும் வரை மருமகளுடன் கூடவே இருந்து அனைத்தையும் சொன்னவர், ''சரி, வா. வந்து டிபனும் காபியும் எடுத்துக்கோ,'' என்று முன்னே நடந்தார்.

# 11

அண்ணி என்று அழைத்துக் கொண்டே அருகில் வந்த மதுமதியை லேசான வெட்கத்துடன் பார்த்தாள் வசுமதி.

''பேர் சொல்லிக் கூப்புடு.''

''உண்மையாவா சொல்றீங்க? வயசுலயும் வேற பெரியவங்க,'' என்ற மதுமதியின் கேலியில், ''பரவா யில்ல. பேர் சொல்லியே கூப்புடு,'' என்று மீண்டும் சொன் னாள் வசுமதி.

''அப்புறம் சாதிச்சுட்டயே வசு.''

அப்படிச் சொன்ன மதுமதியை அதாவது அவளுடைய நாத்தனாரைப் பார்த்தாள் வசுமதி.

''என்ன பாக்கற? எனக்கு எல்லாமே தெரியும்,'' என்றாள் மதுமதி.

''எல்லாமேன்னா... எப்படி?''

''ம், அன்னைக்கு வீட்டுக்கு வந்தப்ப அழுதியே, அப் பவே யூகிச்சேன். அதுக்கப்புறம் நடந்ததுல ஊர்ஜிதமே ஆயிடுச்சே,'' என்றாள்.

''ஆனாலும் நீ சரியான ஆள்தான் மது.''

''ம், அப்புறம் புதுப் பொண்ணு. ஆனாலும் இன் னைக்கு செகண்ட் நைட் தான...''



''பேசாமப் போடி,'' என்ற வசுமதியின் முகம் வெட் கத்தில் சிவந்து போய் விட்டிருக்க, மதுமதியாலும் சிரிப் பைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அதே நேரம் வெளியே தன்னைத் தந்தை அழைப்பது கேட்க, ''இதோ வர்றேன்,'' என்று எழுந்து சென்றாள் மதுமதி.

சில வினாடிகளில், ''வசுமதி!'' என்று அழைத்துக் கொண்டே தனது அத்தை வர எழுந்து வந்தாள்.

அதற்குள் அறைக்குள்ளேயே வந்திருந்த பத்மாவதி, ''திரும்புமா,'' என்று தனது கையிலிருந்த மல்லிகைச் சரத்தை ஆசையுடன் மருமகளின் தலையில் வைத்து விட்டார்.

ஏதோ சொல்ல வருவதைப் போன்ற அவருடைய பார்வையில், ''என்ன அத்தை?'' என்று கேட்டாள்.

''ஹரியோட கோபம் குறை... மனசு மாற வரைக்கும் உங்க வீட்டுக்குப் போறது பேசறது எல்லாத்தையும் கொஞ்சம் குறைச்சுக்கோம்மா.''

சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் வசுமதி.

''முடிஞ்ச அளவுக்கு அவங்கிட்ட அப்படிக் காட்டிக்க வாவது செய். அப்புறம் நான் சொல்றேனேன்னு நீ மனசு சங்கடப்படக் கூடாது...''

''இல்ல, அத்தை, சொல்லுங்க...'' என்று தயக்கத்துடன் பார்த்துக் கேட்டாள் வசுமதி.

''கல்யாண நிச்சயத்தப்ப இருந்தே உங்கப்பா எங்க யார் கூடவும் முகங் குடுத்துப் பேசலமா. ஹரி

அன்னைக்கே எப்ப அவங்க கீழ இறங்கி வர்றாங்களோ அதுக்கப்புறம் பாத்துக்கலாம். நாம என்ன அந்த அளவுக்கா கேவலமாப் போயிட்டோம்! அவங்க வீட்டுப் பொண்... கல்யாணமே வேண்டாம்னு நின்னுட்டான்மா...

''அட நீ எதுக்குக் கவலைப்பட்ற, உம் புருஷனை யெல்லாம் எந்த விஷயத்துலயும் மனச மாத்தி எதயும் செய்ய வைக்க முடியாதுமா. மனசு கேக்காம தான் அதக்கூட சொல்லியிருப்பான்னு நினைக்கறேன்.''

''ஒரு பொண்ணா அவளே மனசு திறந்து சொல்றா, உனக்கும் புடிச்சிருந்தா யாருக்காக நீ பாக்கணும், அப் படின்னு நானும் ஒரு சில வார்த்தைகள் மட்டும்தான் சொன்னேன்.''

................

''அவனுக்கும் உம்மேல அன்பு இருக்கு. அதப் புரிஞ்சு அவனோட மனசு கோணாம நடந்துக்கோ. எல்லாம் சரியாப் போயிடும்.''

''சரி அத்தை,'' என்று மெல்லிய குரலில் சொன்னாள் வசுமதி.

''அப்புறம் உனக்கு ஜாக்கெட் தைக்கணும். மதுவே அளவெடுப்பா. அதக் கொண்டு போய்க் குடுத்துட்டு வந்தா நாளைக்கே ரெண்டு துணியத் தைச்சுக் குடுத்துடு வாங்க.''

அப்படியானால் அத்தைக்கும் அனைத்தும் தெரியுமோ...

''என்ன பாக்கற? எனக்கும் உம் புருஷன முப்பது வருஷமாத் தெரியும்,'' என்று சிரித்தவர், 'இரு. மதுவ வரச் சொல்றேன்,' என்று சென்றார்.



''சீக்கிரம் சீக்கிரம் அளவெடுக்கணும்,'' என்று மதுமதி மெசரிங் டேப்புடன் வர, ''நீ தைப்பியா மது?'' என்று கேட்டாள் வசுமதி.

''விட்டா தைப்பேன். ஆனா முதல்ல அளவு மட்டும் எடுத்துட்டுப் போய்த் துணிக்கடைல குடுத்துட்டு வான்னு சொல்லிட்டாங்க.''

''அப்ப தைக்க மாட்டேன்னு நேராவே சொல்லு. என் சுத்தி வளைச்சுப் பதில் சொல்ற?''

''யார் சொன்னது, விட்டாப் பிரமாதமாத் தைப்பே னாக்கும். என்னவோ உங்க அத்தை தான் எம்மருமக ளுக்குத் துணிக் கடைல தான் தைக்கணும்னு ரொம்ப பந்தாப் பண்றாங்க,'' என்றாள்.

வசுமதி ஒத்துழைக்க, அளவெடுத்துக் கொண்டாள் மதுமதி.

''ஏன் சிரிக்கற?''

வசுமதி கேட்க, ''செம ஸ்ட்ரக்சர்,'' என்றாள் மதுமதி.

''ஏய் போடி.''

''அது சரி. அதையெல்லாம் சொல்றவங்க சொன்னா தான ஏத்தக்குவீங்க.''

''இதோ எடுத்துட்டு வர்றேன்,'' என்ற கணவனின் குரலில் வசுமதியின் உடல் விரைக்க, ''கூல் மேடம் கூல். எங்கண்ணன் ஒன்னும் கடிச்சுத் தின்னுட மாட்டார்,'' என்றாள் மதுமதி.

சில வினாடிகளில் அறைக்குள்ளேயே வந்திருந்த ஹரிவரதன், அங்கிருந்த தனது தங்கையிடம், ''தோட் டத்து வீட்டுச் சாவியெங்க?'' என்று கேட்டான்.

''அப்பாகிட்டதாண்ணா...''

''அப்பா தான் உங்கிட்டக் குடுத்தாராம்.''

''ம், ஆமாண்ணா. ஒரு நிமிஷம்,'' என்று வேகமாக எழுந்து சென்றாள் மதுமதி.

திரும்பித் தன்னைப் பார்த்த கணவனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட பார்வையில், மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது வசுமதிக்கு.

ஒருவேளை கணவனுக்குத் தன்மேல் துளியும் ஆசை யில்லையோ?

இருந்திருந்தால் எப்படி நேற்று இரவு...

ஏன் கணவனுடைய பார்வையிலும் கூட ஆசை போன்ற ஒன்றுமே இருக்கவில்லை.

ஏதேதோ எண்ணிச் சுத்தமாக மனம் குழம்பிப் போய் விட்டிருந்தாள் வசுமதி.

''சரி குடு வசு. நான் போய்க் குடுத்துட்டு வர்றேன்,'' என்று வந்த மதுமதியிடம், ''நானும் வரட்டுமா?'' என்று கேட்டாள்.

''அச்சோ! வேண்டாம்மா. அப்புறம் அம்மா திட்டு வாங்க. அதுக்கு மேல உன்னைக் கூட்டிட்டுப் போனா லும் அப்புறம் எல்லார் கூடவும் நின்னு பேசிட்டு வந்து சேர ரொம்ப நேரம் ஆயிடும்,'' என்றாள்.

''சரி. நீயே போய்ட்டு வா.''

''எனக்கும் ஆசையா தான் இருக்கு வசு. எதுக்கும் நான் போய் அம்மாகிட்ட கேக்கட்டுமா?''

''வேண்டாம் மது. விடவும் மாட்டாங்க. அதோட எனக்கும் வரப் பிடிக்கல.''



''சரி விடு. இன்னைக்கே போனாதான் ஆச்சா? நான் வர்றேன்,'' என்று மதுமதி சொல்ல, அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள் வசுமதி.

சிறிது நேரம் சென்றிருக்க, ஏன் இப்படித் தனிமையில் அமர்ந்து கொண்டிருக்கிறோம் என்று எழுந்து சென்றாள்.

''வாம்மா.''

''ஏதாவது வேலையிருக்கா அத்தை.''

''இல்லமா. சமையல் ஆச்சு. உக்காரு, வா.''

தனது அத்தை பாத்திரங்களைக் கழுவிக் கொண டிருக்க சென்று அனைத்தையும் வாங்கி வைத்தாள் வசுமதி.

''உனக்குச் சமையல் செய்யத் தெரியுமாம்மா?''

''கொஞ்சம்...'' என்ற தனது மருமகளைப் புன்னகை யுடன் பார்த்த பத்மாவதி, ''சரிதான். போகப் போகக் கத்துக்கலாம்,'' என்றார்.

''அங்க எப்படி அம்மாவே எல்லாம் செஞ்சுடுவாங் களா?''

''ம், அதோட வேலைக்கும் வீட்டோடவே ஒரு அம்மா இருக்காங்க.''

''சரிதான். நீ போய் எதையும் எடுத்துச் செய்ய வேண டிய அவசியமே வந்திருக்காது.''

''ஆமா அத்தை.''

''அம்மா.''

''வா ரிஷி.''

''வாங்க அண்ணி, எப்படியிருக்கீங்க? ஊர்ல எல் லாரும் எப்படியிருக்காங்க?'' என்று நன்றாகப் பேசிய

கொழுந்தனாருக்குப் புன்னகையுடன் பதில் சொன்னாள் வசுமதி.

''நீங்க எப்படியிருக்கீங்க?''

''நல்லார்க்கேன் அண்ணி. நேத்து மண்டபத்துல உங்களப் பாத்துப் பேச முடியல...''

''முதல்ல நீ மண்டபத்துல எவ்வளவு நேரம் இருந்த, பேசறதுக்கு?''

''அட மெதுவாப் பேசுங்கமா, அப்பா காதுலயோ அண்ணா காதுலயோ விழுந்துடப் போகுது.''

''விழட்டுமே, அவங்களுக்கு மட்டும் நீ பலனில்லாம ஊர் சுத்திட்டிருக்கறது தெரியாமலா இருக்கு...''

''சரிசரி, விடுங்க, நான் போய்...''

''டேய் இருடா, இப்ப எங்க போற?''

''ஃப்ரண்ட் வெயிட் பண்ணிட்டிருப்பா...''

''உத கிடைக்கும். காலைலிருந்து சுத்துனது பத்தாது. போடா. போய் உங்கப்பாவுக்கும் ஹரிக்கும் ஏதாவது ஹெல்ப் பண்ணு.''

''சரி. விடுங்கமா.''

''முதல்ல போய்க் கை கால் கழுவறதோ, குளிக்கறதோ எதுவானாலும் முடிச்சுட்டு வா. டிபன் சாப்பிடுவியாம்.''

''அம்மா, அப்புறம்...''

''என்னடா?''

''பணம் வேணும்...''



''ரிஷி...''

ஹரிவரதன் அதாவது அவனுடைய அண்ணன் உள்ளே வர, ''சரிமா. நான் போய்க் குளிச்சுட்டு வர்றேன்,'' என்று நகரப் போனான் ரிஷிவரதன்.

அதற்குள் உள்ளேயே வந்து விட்டிருந்த ஹரிவரதனிடம், ''சொல்லுங்கண்ணா?'' என்று கேட்டான்.

''இங்கதான் இருக்கியா? பணம் கேட்ட...''

''இல்லண்ணா. அதெல்லாம் ஒன்னுமில்லயே.''

''ஏன்டா, போனவாரம் பணம் வேணும்னு கேட்டிருந்தியே, இந்தா,'' என்று அண்ணன் நீட்டிய பணத்தை வாங்கிக் கொண்டான் ரிஷிவரதன்.

''எதுக்கு இப்படி மென்னு முழுங்கற? அப்படியென்ன தப்புப் பண்ற, எங்க யாருக்கும் தெரியாம?''

''அப்படியெல்லாம் ஒன்னுமில்லண்ணா,''

ஒரு பார்வையுடன் நகர்ந்த அண்ணனைத் தானும் எதுவும் பேசாமல் பார்த்தபடி நின்று விட்டிருந்தான் ரிஷிவரதன்.

''ரிஷி,'' என்ற தந்தையின் அழைப்பில், ''அம்மா, நான் அப்பவே குளிக்கப் போய்ட்டேன்னு சொல்லிடுங்க,'' என்று ஓடியே விட்டிருந்தான்.

புன்னகையுடன் பார்த்த மருமகளிடம், ''இவனுக்கு வேற பொழப்பே இல்லமா. சொன்ன பேச்சுக் கேக்கறதில்ல. அப்புறம் ஆளப்பாத்தா, நிக்கறதில்ல,'' என்று அலுத்துக் கொண்டார் பத்மாவதி.

அதற்குள் கணவர் உள்ளேயே வந்திருக்க, ''என்னங்க?'' என்று கேட்டார்.

''உன் சின்ன மகனெங்க?''

''இப்ப தானுங்க குளிக்கப் போனான்.''

''சரி. குளிச்சதும் வரச் சொல்லு. தேங்காய் லோடு ஏத்தணும். லாரி வந்திருக்கு.''

''சரிங்க.''

சற்றே திரும்பிய பரந்தாமனின் கண்களில் பட்டாள் வசுமதி.

''ஏம்மா நின்னுட்டிருக்க, உங்க அத்தெ குடுத்த தண் டன்னயா?''

''அச்சச்சோ! அதெல்லாம் ஒன்னுமில்லீங்க மாமா...''

''பின்ன உக்காரு,'' என்றவர், ''மதுவும் மஞ்சுவும் எப்படி யிருக்காங்களோ அதே மாதிரி நீயும் ஃப்ரீயா இருக்கலாம். எங்களுக்கு நீ வேற, அவங்க வேற இல்ல!'' என்றார்.

''சரிங்க மாமா.''

''என்னமா நான் சொல்றது?'' என்று பரந்தாமன் மனை வியைப் பார்க்க, ''அது சரிதானுங்க,'' என்றார் பத்மாவதி.

''அதோட மருமகளுக்கும் நம்ம மது வயசு தான,'' என்றார்.

சிறிது நேரத்தில் கணவனும், மகன்களும் சாப்பிட வர, பரிமாறினார் பத்மாவதி.

அனைத்தையும் எடுத்துக் கொடுக்க வந்த வசுமதி யிடம், ''நானே வெச்சுக்கறேம்மா. நீ போய் மது கூடப் பேசிட்டிரு போ,'' என்றார்.

''அட ஆமாம் வசு, வா,'' என்று மதுமதியும் கையோடு வசுமதியை அழைத்துக் கொண்டு வெளியே வந்திருந் தாள்.



''நான் பேர் சொல்லிக் கூப்புட்டதுல உம் புருஷன் என்ன ஒரு மாதிரியாப் பாக்கறார். ஏன் அண்ணின்னு கூப்புடனுமாக்கும்?'' என்று மதுமதி நக்கலாகக் கேட்க, ''உங்க அண்ணன் தான, நீயே போய்க் கேளேன்,'' என் றாள் வசுமதி.

''அச்சச்சோ! நானில்லமா,'' என்று கிணற்றடியில் அமர்ந் தவள், ''வா வசு, இங்க வந்து உக்காரு,'' என்று அழைத் தாள்.

''இந்த நேரத்துல இங்க எதுக்கு மது?''

''ஏன் பயமா இருக்கா?''

''எனக்கென்ன பயம்?''

''அதுசரி, கண்ல பயம் அப்படியே தெரியுது.''

''அதெல்லாம்...'' என்று ஏதோ சொல்ல வந்தவள் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை.

பாம்பு ஒன்று பெரிதாகவும் பார்ப்பதற்கு மொழுமொழு வென்றும் சற்றுத் தொலைவிலிருந்து வந்து கொண் டிருந்தைப் பார்த்துப் பயத்தில் தன்னையறியாமலேயே கத்தி விட்டிருந்தாள் வசுமதி.

''ஏய் என்ன... என்ன?'' என்று கேட்டுக் கொண்டே மதுமதி எழுவதற்குள், தான் எழுந்து இரண்டு எட்டு கூட வைத்து விட்டிருந்தாள் வசுமதி.

அப்படி வந்தவள், ''என்னாச்சு?'' என்று வேகமாக வெளியே வந்திருந்த கணவனின் மேல் மோதிக் கொண் டாள்.

அவசரமாக மனைவியைப் பிடித்து நிறுத்தியவன், அங்கு இருபதடி தொலைவில் வெளியே செல்லத்

தெரியாமல் அலைமோதிக் கொண்டிருந்த பாம்பைப் பார்த்தே விட்டிருந்தான்.

அதற்குள் மற்ற ஆண்களும் வெளியே வந்திருக்க, அதே நேரம் பாம்பை நோக்கி முன்னேறியிருந்தான் ஹரிவரதன்.

''பாம்பு இருக்கும் இடத்திலிருந்து ஒரு ஐந்தடி தள்ளிப் பெரிய கம்பு ஒன்று இருக்க, அதை எடுக்கப் போனான்.''

ஆனால் அதற்குள் பயந்து தன்னைக் காத்துக் கொள் வதற்காக ''ஷ்ஷ்...'' என்று தலையைத் தூக்கிக் கொண்டு படமெடுத்துக் கொத்துவதைப் போல, பாம்பு கணவ னுக்கு மிக அருகில் வந்திருந்ததைப் பார்த்து, ''ஐயோ! வேண்டாம்...'' என்று அழவே தொடங்கி விட்டிருந்தாள் வசுமதி.

''ஒன்னுமாகாதுமா,'' என்று பத்மாவதி இவளுக்கு ஆறுதல் சொல்ல, 'மற்றவர்கள், ''ஹரி, வேண்டாம். வேண்டாம்பா!'' என்று கத்தத் தொடங்கி விட்டிருந்தனர்.

விபரீதம் உணர்ந்து கண்ணிமைக்கும் நேரத்தில் பாம்பின் கழுத்தைப் பிடித்திருந்தான் ஹரிவரதன்.

அடுத்த வினாடியே பாம்பைத் தூக்கித் தூர எறிந்தவன், அது சுதாரித்துக் கொள்வதற்குள் கம்பை எடுத்து அடித்துக் கொன்றிருந்தான்.

பாம்பு சுருண்டு விட்ட பிறகு தான் போன உயிர் மீண்டும் வந்திருந்தது வசுமதிக்கு.

ஆனாலும் அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது.



''என்னப்பா, என்ன காரியம் பண்ணிட்ட?'' என்று பரந்தாமன் மகனைப் பார்க்க, ''நல்ல பாம்ப ஏம்பா அடிச்ச? விட்டிருந்தா அது அப்படியே வெளிய போயிருக் குமே!'' என்று வந்தார் பத்மாவதி.

''அதுசரி. அப்புறம் அது வீட்டுக்குள்ள வந்துடுச் சுன்னா?'' என்று பயத்துடன் கேட்டாள் மதுமதி.

''ஆமா, எங்க மஞ்சரி? கண்லயே தட்டுப்படல!'' என்று ஹரிவரதன் கிணற்றடியில் இருந்து நீரை எடுத்துக் கைகளை நன்கு சோப்புப் போட்டுக் கழுவிக் கொண்டே கேட்டான்.

''அவ ரூம்ல படிச்சுட்டிருந்தா ஹரி,'' என்று அவ னுடைய தாய் அவனுக்குப் பதில் சொல்ல, ''ம் இப்ப வாவது எல்லாரும் நம்பறீங்களா? இங்க ஏதாவது விபரீதம் நடந்திருந்தாக் கூட அம்மணி கண்டுக்க மாட்டாங்க. அந்த அளவுக்குப் புத்தகப் புழுவாம்!'' என்று அலுத்துக் கொண்டாள் மதுமதி.

இவையனைத்திற்குமே ஒரு சில வினாடிகள் பிடித் திருக்க, அதற்குப் பிறகே அனைவரும் ஒரு சேர வசு மதியைப் பார்த்தனர்.

''வசு, இங்க பாருமா,'' என்று பத்மாவதி அழைக்க, ''பாவம்! பயந்துட்டா. உள்ள கூட்டிட்டு வாங்க,'' என்றார் பரந்தாமன்.

வசுமதிக்கு ஆளாளுக்கு ஒரு சில ஆறுதல் வார்த்தை களைச் சொல்லிவிட்டு, அனைவரும் உள்ளே சென்றிருந் தனர்.

ஆண்கள் அனைவரும் சாப்பிட்டு முடித்திருக்க, ''சரி. இனி வசு, மது ரெண்டு பேரும் வாங்க. நாம சாப்புடலாம்,'' என்று அழைத்தார் பத்மாவதி.

அப்பொழுதும் வசுமதியின் முகம் தெளிந்திருக்காததைக் கண்ட மதுமதி, ''இந்த அண்ணந்தான் கொஞ்சம் சமாதானப்படுத்திட்டுப் போயிருந்தா என்னவாம்?'' என்று அலுத்துக் கொண்டாள்.

''ஹலோ, உன் வீட்டுக்காரருக்குத் தான் ஒன்னும் ஆகலையே. அப்புறம் ஏன் இப்படி டல்லா இருக்க?'' என்று மீண்டும் கேட்டாள் மதுமதி.

''அதெல்லாம் ஒன்னுமில்லையே.''

மிகவும் முயன்று சொன்னவளைக் கை காட்டி, ''பாருங்கமா. விட்டா அழுவா போலிருக்கு. ஆனா சமாளிக்கறா!'' என்று தனது தாயிடம் சொன்னாள் மதுமதி.

''சரிமா. விடு, பாவம். வசுமதி ரொம்பவுமே பயந்துட்டா..''

''க்கும், இதுவே வேற யாராவதா இருந்தா இப்படி அழுவாளாக்கும், அவளோட புருஷன்.''

''போதும். சாப்புடு மது, அவ மறக்க நினைச்சாக் கூட நீ விட மாட்ட போலிருக்கு!'' என்று மகளை அதட்டி விட்டிருந்தார் பத்மாவதி.

ஒருவேளை திருப்பிக் கடித்திருந்தால் என்று பத்மாவதிக்குமே கதி கலங்கித் தான் போய்விட்டிருந்தது.

இந்த வீட்டு ஆண்களுக்கு அதெல்லாம் எங்கே புரியப் போகிறது, அதற்கு மேல் எதையாவது சொன்னாலும் ஆளாளுக்கு மூக்கிற்கு மேல் கோபம் தான் வருமென்று எரிச்சலுடன் நினைத்துக் கொண்டார்.



அதிலும் அவருடைய பெரிய மகன் ஹரிவரதனை நினைத்தவருக்கு இன்னும் கூடக் கோபம் அதிகமாகத் தான் வந்தது.

இன்று மட்டுமென்று கிடையாதே, அவன் எப்பொழுதுமே அனைத்து விஷயங்களிலுமே இப்படித் தானே நடந்து கொள்கிறான்.

இத்தனை நாளும் எப்படியோ, இனிமேல் இப்படியெல்லாம் இருக்கக் கூடாதென்று முடிந்தால் மகனிடம் சொல்ல வேண்டுமென்று நினைத்துக் கொண்டார்.

ஆனாலும் தனது பெரிய மகன் ஒன்றும் வீம்புக்காகவோ, மற்றவர்கள் பார்க்கிறார்களென்றோ எதையும் செய்பவன் கிடையாதே.

இயல்பாகவே அவனுக்கென்று ஒன்று தோன்றி விட்டால் அதை யாருக்காகவும் பார்த்துக் கொண்டிருக்காமல் செய்து விடுபவன் என்பதோடு மற்றவர்கள் யார் எதைச் சொன்னாலும் அதைக் கேட்டுக் கொள்பவனும் கிடையாதே.

ஏன், முதலில் அதை விரும்பக் கூட மாட்டானே.

சிறிது நேரத்தில் அனைவருமே டிபன் சாப்பிட்டு முடித்திருந்தார்கள்.

தனது அத்தையுடன் சேர்ந்து அனைத்தையும் ஒதுக்கி வைத்தாள் வசுமதி.

# 12

''வசு!''

''அத்தெ!''

''இந்தாமா, நீ பால் எடுத்துக்கோ.''

''எனக்கு வேண்டாம் அத்தெ.''

''ஏன், எப்பவுமே குடிக்க மாட்டியா?''

''வெறும் பால் குடிக்க மாட்டேன்.''

''சரி, அப்ப ஏதாவது கலந்து குடி.''

''இல்ல வேண்...''

''ஹலோ மேடம். இது சுத்தமான பசும்பால். உங்க சிட்டி பாக்கெட் பால் மாதிரியில்ல. அதனால வெறும் பாலே தாராளமாகக் குடிக்கலாம்!'' என்று வந்த மதுமதி, ''அம்மா, பாருங்க. நான் எடுத்துக்கிட்டேன். அதுக்கப்புறம் நீ குடிக்கலேன்னு சொல்லக் கூடாது,'' என்று பெரிய டம்ளர்களில் ஊற்றி வைக்கப்பட்டிருந்ததில் ஒன்றைத் தான் எடுத்துக் கொண்டாள்.

''வீட்டுத் தேவைக்காவே ரெண்டு மாடு வளக்க றோம்மா. நம்ம வீட்ல பால எந்தக் காலத்துலயுமே விலைக்கு ஊத்தறது கிடையாது. வேணும்னா சும்மா வந்து வாங்கிட்டுப் போவாங்க. பால் குடிக்கறதும் அப் படிதான். முக்கியமா நைட் எல்லாருமே எடுத்துக்கு வாங்க. காலைல யாரையும் புடிக்கவும் முடியாது.



அதோட காபியத் தவிர காலைல வேற எதையும் தொட வும் மாட்டாங்க.''

''சரிதான்மா. நீங்க என்ன சொன்னாலும் வசு எடுத் துக்கப் போறது கிடையாது.''

மதுமதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே தானும் ஒரு டம்ளர் பாலைக் கையில் எடுத்துக் குடிக்கத் தொடங்கி விட்டிருந்தாள் வசுமதி.

''இந்தாமா, இந்த டம்ளர உன் வீட்டுக்காரருக்கு எடுத் துட்டுப் போய்க் குடுத்துடு.''

அத்தை கொடுத்த பால் டம்ளரை வாங்கிக் கொண் டாள் வசுமதி.

''உங்களுக்குப் பால்...''

தயக்கத்துடன் தனக்கு முன்னே வந்து நின்றிருந்த மனைவியிடமிருந்து வாங்கிக் கொண்டான் ஹரிவரதன்.

''உனக்கு?''

''நான் குடிச்சாச்சு.''

சில வினாடிகளில் குடித்து முடித்தவன், எழுந்து சென்று உள்புறமாகக் கதவைத் தாழிட்டு விட்டு வந் தான்.

கணவன் அப்பொழுது தான் குளித்துவிட்டு வந்திருப் பான் போல. சோப்பின் மனம் நாசியைத் தொட்டதை உணர்ந்தாள்.

நேராக மனைவியை நோக்கி வந்தான் ஹரிவரதன்.

கணவன் தன்னருகில் வந்து நின்றிருந்தது தெரிந்தது வசுமதிக்கு.

ஆனாலும் குனிந்தபடி அப்படியே நின்று விட்டிருந் தாள்.

''வசு...''

கணவன் தன்னை அழைப்பது தெரிந்தாலும் நிமிர்ந்து பார்த்தாள் இல்லை.

மீண்டும் ஒரு முறை கூட மனைவியை அழைத்துப் பார்த்தவன், பிறகு அவளது முகவாயைத் தொட்டு நிமிர்த்தினான்.

மிருதுவாகத் தான்.

கணவனின் தொடுகையில் நெஞ்சுக்குள் சிலிர்த்துப் போனாள் வசுமதி.

அந்த வினாடியில் கலங்கி விட்டிருந்த மனைவியின் கண்களைப் பார்த்தவன், ''என்னாச்சு?'' என்று கேட் டான்.

............

''உன்னத்தான். என்ன...''

''உங்களுக்கு ஏதாவது ஆயிருந்தா...''

''எனக்கு என்ன? ஓ! பாம்ப அடிச்சதக் கேக்கறியா?''

''அப்படியா பாம்பக் கைல புடிக்கறது.''

''அப்படிப் புடிச்சதால தான் தப்பிச்சேன். இல்லேன் னாக் கடிச்சிருக்கும்.''

''பேசாதீங்க.''

அழுகையில் உதடு பிதுங்கிய மனைவியையே பார்த்தவாறு அப்படியே தானும் நின்று விட்டிருந்தான் ஹரிவரதன்.



சில வினாடிகள் பார்த்தவன், ''சரி. இப்ப என்ன பண்ணலாம்?'' என்று கேட்டான்.

அப்பொழுதும் மனைவி எதுவும் பேசாததில் பேசாமல் படுக்கைக்குச் சென்று விட்டிருந்தான்.

''வசு..''

மேலும் சில வினாடிகள் கூடப் பார்த்தவன், பிறகு லைட்டை ஆஃப் செய்துவிட்டுப் படுத்து விட்டிருந் தான்.

இருட்டு என்றால் வசுமதிக்கு எப்பொழுதுமே பயம். வேகமாகச் சென்று மீண்டும் லைட்டைப் போட்டிருந் தாள்.

லைட்டைப் போட்டுவிட்டுத் திரும்புவதற்குள் மனைவியைத் தன்னருகில் இழுத்திருந்தான் ஹரி வரதன்.

கணவனின் மேலேயே சென்று விழுந்திருந்த வசுமதி, வேகமாகக் கணவனிடமிருந்து விலகிப் போனாள்.

ஆனால் அதற்கு விடாமல் ஹரிவரதன் மனை வியைத் தன்னருகில் அமர்த்திக் கொண்டு விட்டிருந் தான்.

கணவனின் அருகாமையும், பார்வையும் தன்னை என்னவோ செய்ய, மீண்டும் குனிந்து கொள்ளப் போனாள்.

ஆனால் அதற்கு விடாமல் மனைவியின் முகவாயை நிமிர்த்தி அவளுடைய கண்களை ஊடுருவிப் பார்த் தான்.

மெல்லிய குரலில், ''ம் என்ன?'' என்றான்.

.......

''ம்''

''ஹரி!''

கணவனின் முகத்தைத் தனது கைகளில் ஏந்தியிருந் தவள், ''ஹரி...'' என்று உணர்ந்து அழைத்தாள்.

''நடப்ப என்னால நம்பவே முடியல ஹரி. உண்மை லயே நான் உங்க பக்கத்துல தான் இருக்கேனா...''

''ஐ லவ் யூடா!'' என்று அழுகையில் உதடு துடிக்கச் சொன்னவளை இழுத்துத் தனது மார்போடு அணைத்துக் கொண்டான்.

''ஹரி...'' என்று மேலும் எதையோ சொல்ல வந்த மனைவியின் முகத்தை நோக்கிக் குனிந்தவன், அதற்கு மேல் எதையும் சொல்ல விட்டிருக்கவில்லை.

''வாம்மா.''

தனது அத்தையிடம் சில வார்த்தைகள் பேசிய வசுமதி, ''ஒரு நிமிஷம் இருமா. வந்து காபி கலக்கறேன்,'' என்று அவர் வெளியே சென்றிருக்க மதுமதியிடம் வந்தாள்.

''குட்மானிங் மது.''

''எனக்கெல்லாம் இது குட்மானிங் தான். ஆனா உனக்கு அப்படித்தானா, இல்ல... எதுக்கு இந்த மானிங் வந்தது, நைட்டே நீண்டு போய்ட்டே இருந்திருக்கக் கூடாதான்னு சபிக்கிறயா?''

காதருகில் வந்து ரகசியக் குரலில் கேட்ட நாத்த னாரின் கையில் நறுக்கென்று கிள்ளினாள் வசுமதி.



''ஷ்... அம்மா, ஏன்...''

''நீ ரொம்ப ஓவராப் பேசற. அடங்கு...''

''போனாப் போகுதுன்னு தான் கேக்கறேன். ஸாரி...''

''உன் ஸாரி எனக்கெதுக்கு? இனிமேல் இப்படிப் பேசாத.''

''வசு...''

''சொல்லுங்க அத்தெ,'' என்று அருகில் வந்திருந்த மருமகளிடம் காபியைக் கொடுத்திருந்தார் பத்மாவதி.

''இன்னும் ஒரு மணி நேரத்துல எல்லாரும் கோவி லுக்குக் கிளம்பணும்மா.''

''சரி அத்தெ,'' என்று திரும்பியவள், ''அம்மா, காபி,'' என்று வந்த மஞ்சரியை அதாவது சிறிய நாத்தனாரைப் புன்னகையுடன் பார்த்தாள்.

''குட்மானிங் மஞ்சு.''

''வெரி குட்மானிங் அண்ணி!'' என்று தானும் சிரித்த மஞ்சரி, ''இதுக்குள்ள நீங்க குளிச்சே முடிச்சுட்டிங்களா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''ஏன்டி இதுலென்ன உனக்கு அதிசயம்?'' என்று மதுமதி தங்கையைப் பார்த்துக் கேட்க, ''பின்ன உன்ன மாதிரி வாரத்துக்கொரு முறை குளிக்கறவளையே பாத்துட்டிருந்துட்டு லட்சுமிகரமா இந்த நேரத்துக்கே குளிச்சுட்டு வர்றவங்களப் பாத்தா ஆச்சரியமா இருக் காதா?'' என்று கேட்டாள் மஞ்சரி.

''ஏய் என்ன ஓட்ட மாத்திப் போடற?''

''மஞ்சு எல்லாம் சரியாதான் போடறா!'' என்று வசுமதி சொல்ல, ''சரியா சொன்னீங்க அண்ணி. எது எப்படியோ

அவளுக்கு மட்டும் நான் ஓட்டுப் போடவே மாட்டேனாக்கும்!'' என்று விட்டுப் போனாள் மஞ்சரி.

''பெரிய கூட்டணி!'' என்று மதுமதி உதட்டைப் பிதுக்க, ''ஹலோ, அவங்க கூட்டணி தான் ரொம்ப நாளைக்கு நிலைக்கும்!'' என்று வந்த ரிஷிவரதன் வசுமதியிடம், ''அண்ணி, குட்மானிங்!'' என்று புன்னகையுடன் சொன்னான்.

பதிலுக்குத் தானும் குட்மானிங் சொன்ன வசுமதி, கொழுந்தனாரிடம், ''உங்களுக்குக் காபி...'' என்று சொல்லிக் கொண்டே சமையலறைக்குப் போகத் திரும்பினாள்.

அதற்குள் ரிஷிவரதன், ''நான் குடிச்சாச்சு அண்ணி,'' என்று சொல்ல, ''பரவாயில்லப்பா, உன் அண்ணி ஆசையோட சொல்றாங்களே, இன்னொரு தடவ குடி,'' என்று நக்கலாகச் சொன்னாள் மதுமதி.

''அதெல்லாம் மாடு கழுநீர்த் தண்ணியக் குடிக்கற மாதிரி எத்தன தடவை வேணும்னாலும் இவ குடிப்பா அண்ணி. கொண்டு வந்து ஊத்துங்க!'' என்று ரிஷிவரதன் தங்கையான மதுமதியைக் கை காட்டிச் சொல்ல, ''யாரு மாடு? போடா எரும!'' என்றாள்.

''அச்சச்சோ! நானில்லப்பா!'' என்று மஞ்சரி அந்த இடத்தை விட்டு நகர, ''கூல் கூல்!'' என்றாள் வசுமதி.

அதே நேரம் தம்பியை அழைத்துக் கொண்டே ஹரிவரதன் உள்ளே வர, ''சொல்லுங்கண்ணா,'' என்றான் அவன்.

''இன்னுங் கொஞ்ச நேரத்துல எல்லாரும் கோவிலுக்குக் கிளம்பணும்டா. வேற எங்காவது போயிடாத.''

''சரிண்ணா,'' என்ற ரிஷிவரதனைப் பார்த்த மதுமதி, ''இன்னும் நல்லா மண்டைல ஏத்ற மாதிரி சொல்லுங் கண்ணா!'' என்றாள்.



''ஏய் போதும். வாயாடி, வேலயப் பாரு.''

ஹரிவரதன் சொல்ல, ''யாரு, நான் வாயாடியா?'' என்று கேட்டாள் மதுமதி.

''இதென்ன இப்படியொரு கேள்வி, அதுதான் ஊருக்கே தெரியுமே. அதுவும் சாதாரண வாயா என்ன, செங்கல் கா...''

''டேய், வேலயப் பார்த்துட்டுப் போடா...'' என்று தன்னை அப்படிச் சொன்ன சிறிய அண்ணன் ரிஷிவரதனைக் கோபத்துடன் பார்த்தாள்.

## 13

தனது அத்தை சொன்ன நேரத்திற்குள் கிளம்பி வந்திருந்தாள் வசுமதி.

அதே போல அனைவருமே கிளம்பியிருப்பதையும் கண்டாள்.

''ரிஷி...''

ஹரிவரதன் அழைக்க, ''அண்ணா!'' என்று அருகில் வந்தான் ரிஷிவரதன்.

''நீ கார்ல எல்லாத்தையும் அழைச்சுட்டு வந்துடுப்பா. நான் முன்னாடி போறேன்,'' என்றவன், திரும்பி அருகில் நின்றிருந்த மனைவியிடம், ''நாம கிளம்பலாமா?'' என்று கேட்டான்.

சரியென்பதைப் போல வசுமதி தலையை ஆட்ட, ''அண்ணா, அந்தக் கார் கோவில் வரைக்கும் கொண்டு வந்து விட்டுடும் தானாண்ணா?'' என்று பாவமாகக் கேட்டாள் மதுமதி.

''இனி அந்தக் காருக்கும் உம்மேல ஏதாவது கோபம் இருக்குமோ என்னவோ, எனக்குத் தெரியலையேம்மா...''

''அண்ணா, வேண்டாம்.''

''நானும் அதத்தான் சொல்றேன். எதுக்கும் நீ அந்தக் கார்ல வர வேண்டாம். அப்படியே பொடி நடையாக்...''

''சரியா சொன்னீங்கண்ணா!'' என்று மஞ்சரி வார, ''அட்டா, இது ஒன்னும் சரியாப் படலையே. வா, நாம கிளம்பிடலாம்,'' என்று பயந்தவன் போல மனைவியுடன் வெளியே வந்திருந்தான் ஹரிவரதன்.

கோவிலுக்கு எடுத்துச் செல்ல வேண்டியதனைத்தையும் வெளியே திண்ணையில் தயாராக எடுத்து வைத்துக் கொண்டிருந்த தாயிடம், ''சரிமா, அப்ப நாங்க முன்னாடி போய் எல்லாத்தையும் பாத்து வெக்கறோம். நீங்க ரிஷி கூட வாங்க,'' என்று மனைவியுடன் கிளம்பியே விட்டிருந்தான்.

கணவனுடன் பைக்கில் செல்வது அதுதான் முதன் முறை, ஏன், பைக்கில் செல்வதே.

அதிலும் கிராமத்து ரோடுகளின் மேடு பள்ளங்களில் மிரண்டு போய்க் கணவனை இறுகப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தாள் வசுமதி.

திடீரென்று கணவன் ஒரு இடத்தில் பைக்கை நிறுத்தி விட்டிருக்க, தானும் இறங்கிக் கொண்டவள் என்னவென்று கேட்டாள்.



எதுவும் பேசாமல் தன்னைப் பார்த்த கணவனின் பார்வையில் மேலும் புரியாமல் பார்த்தாள்.

''என்ன ஹரி...''

''இது கிராமம்.''

''சரி.''

''இங்கெல்லாம் இவ்வளவு நெருக்கமா உக்காந்துட்டுப் போனா நல்லா இருக்காது... உனக்கு டூ வீலர்ல போய்ப் பழக்கமில்லாததால பயத்துல தான் அப்படிப் புடிச்சுட்டு வர்றேங்கறது எனக்குப் புரியுது. ஆனா பாக்கற மத்தவங்களுக்கு அது தெரியாதே...''

''இப்ப நான் என்ன பண்ணணும்?''

''முடிஞ்ச அளவுக்கு ஒட்டாமத் தள்ளி உக்காந்துட்டு வா,'' என்ற கணவனின் பார்வையில் என்ன முயன்றும் வசுமதியால் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடியவில்லை.

''இப்படிக் கூட சொல்ல வேண்டியதிருக்கே!'' என்று வருத்தப்பட்டுக் கொண்ட கணவனின் பாவனையில், வேறு பக்கம் திரும்பித் தன்னை ஓரளவு சமாளித்துக் கொண்டு மீண்டும் ஏறி அமர்ந்தாள்.

அந்த ஊரின் எல்லையிலேயே இருந்த அவர்களுடைய குலதெய்வக் கோவிலில் அனைவரும் ஒன்று சேர்ந்து பொங்கலிட்டுப் பூஜை செய்தார்கள்.

வசுமதிக்கும் அந்த அனுபவம் மிகவும் பிடித்திருந்தது.

இதற்கு முன்னரும் கிராமத்திற்கு ஏன் அதே ஊருக்கே நிறைய முறை வந்திருக்கிறாள் தான் என்றாலும், இந்த அளவிற்கு அவள் கோவில் குளத்திற்கெல்லாம் வந்ததில்லை.

என்ன அத்தையின் வீட்டிற்கு வருபவள் மிஞ்சிப் போனால் ஒரு நாள் தங்குவாள். அவ்வளவே.

அதிலும் வீட்டை விட்டு வெளியே வருவதே அரிது. அப்படியெல்லாம் அவ்வளவு விரைவில் அத்தை எங்கும் அழைத்துச் செல்பவர் கிடையாது என்பதாலோ என்னவோ இந்த போரடிக்கும் ஊரையும் அவளுக்கு நாளடைவில் பிடிக்காமலே போய் விட்டிருந்தது.

ஆனால் இன்று...

அதே ஊரிலேயே வந்து வாழ்க்கைப் படவும் நேர்ந்திருக்கிறதே என்று மனதிற்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டாள்.

கோவிலில் நிறையப் பூக்களைப் பறித்துப் பெரிய பெரிய பூமாலைகள் கட்டுவது, இடுப்பில் குடம் வைத்து அனாயசமாகத் தண்ணீர் சுமப்பது என அனைத்தையும் மதுமதியும், மஞ்சரியும் சர்வ சாதாரணமாகச் செய்வதைப் பார்த்துத் தானும் அவர்களைப் போலவே அனைத்தையும் செய்தாள் வசுமதி.

அதிலும் அவளுக்கு இடுப்பில் வைத்த குடம் வழுக்கிக் கொண்டே போவதைப் பார்த்து அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

ஹரிவரதனும் கூடத் தனது மனைவியிடம், ''போதும். விட்ரு. போகப் போகப் பழகிடும்,'' என்று புன்னகையுடன் சொன்னான்.

ஆனாலும் முயன்று செய்து கடைசியில் பழகியே விட்டிருந்தாள் வசுமதி.

வீட்டிற்கு வந்தது தான் தாமதம், நான் படிக்க வேண்டும் என்று மஞ்சரி தனது அறைக்குள் சென்று



புகுந்திருக்க, ''வா வசு, அப்படியே தோப்புக்குள்ள நடந்து போய்ட்டு வரலாம்,'' என்று வசுமதியை அழைத்துக் கொண்டு போனாள் மதுமதி.

தோப்புக்குள் துளியும் வெயில் தெரியாததோடு சிலுசிலுவென்று காற்றும் வீசியதில் அப்படியே பேசிக் கொண்டு வெகு தூரம் சென்று விட்டிருந்தனர்.

பின்னாலிருந்து யாரோ வரும் அரவம் கேட்டதில் இரு பெண்களுமே திரும்பிப் பார்த்தனர்.

''அண்ணா, நீங்களா? கோவில்ல இருந்து வந்ததும் வந்திருக்கோம். எங்களுக்கும் முன்னாடியேவா, எப்படி?''

''ம். பறந்து வந்தேன்.''

''ஏய், அங்க பாம்பு!'' என்று திடீரென்று ஹரிவரதன் அவசரமாகச் சொன்னதில் அலறியடித்துக் கொண்டு வந்து அருகிலிருந்த கணவனின் கைகளைப் பிடித்துக் கொண்டிருந்தாள் வசுமதி.

ஆனால் மதுமதியோ சற்றும் பயப்படாமல் அப்படியே நின்றிருந்தாள்.

''எல்லாருமே உங்க பொண்டாட்டி மாதிரி பயந்தாங் கொள்ளிகளா இருப்பாங்களா?'' என்று மதுமதி கேட்க, அதற்குப் பிறகுதான் கணவன் பொய் சொல்லியிருக்கிறான் என்பதே வசுமதிக்குப் புரிந்தது.

உடனே வசுமதி கணவனிடமிருந்து விலகி நின்றிருக்க, ''பர்வாயில்ல. புடிச்சுக்கோ. அதுக்காகதான் உங்க வீட்டுக்காரர் அந்தப் பொய்யையே சொன்னார்,'' என்றாள் மதுமதி.

''பேசு பேசு. இன்னும் எத்தன நாளுக்கு?''

''ஏண்ணா அப்படி சொல்றீங்க?''

''வேறென்ன, கல்யாணம் முடிஞ்சு உம் புருஷன் வீட்டுக்குப் போயிடுவியே. ம்கூம். துரத்தி விட்டுரு வோமே. அதச் சொல்றேன்.''

''அப்ப மாப்ள ரெடியாண்ணா?''

ஆவலுடன் மதுமதி கேட்க, ''இனிமேலா பொறக்கப் போறார் அந்தப் பாவப்பட்ட மனுஷன்!'' என்றான் ஹரிவரதன்.

''அது என்னவோ சரிதாண்ணா, ஆனாலும் அந்தாளு ரொம்பப் பாவமில்ல.''

''தெரிஞ்சா சரி.''

''அப்ப ஒன்னு பண்ணுங்கண்ணா. என்னக் கல்யாணமே பண்ணிக் குடுக்காதீங்க.''

''ஏன் நாங்கென்ன பாவம் பண்ணினோம்?''

தனது நாத்தனார் மதுமதி முறைக்க, சிரித்தாள் வசுமதி.

''சரிதான். நான் போறேன்,'' என்று மதுமதி வீடு செல்லும் வழி நோக்கி இரண்டு அடி எடுத்து வைத்திருக்க, ''அப்பாடா, இவ்வளவு நேரமாச்சா புரியறதுக்கு?'' என்று பெருமூச்சு விட்டான் ஹரிவரதன்.

ஆனால் உடனே நின்று திரும்பிப் பார்த்த மதுமதி, ''எதுக்கும் உங்க வீட்டுக்காரர நல்லாப் புடிச்சுக்கோமா. இல்லேன்னா பாம்பு, பல்லின்னு இன்னும் என்ன வேணும்னாலும் வரும்!'' என்று நக்கலாகச் சொல்லி விட்டுப் போனாள்.

''ஏய் மது நிஜமாவே போறியா?'' என்று கேட்ட அண்ணனிடம், ''பின்ன அடிச்சுத் துரத்தர வரைக்கும் நிக்கணுமாக்கும்?'' என்று கேட்டாள்.



''மது, இரு நானும் வர்றேன்,'' என்று வசுமதியும் இரண்டு எட்டு எடுத்து வைத்திருக்க, ''ஆனாலும் உங்களுக்கு எதிர்ப் பதமா ஒரு பொண்டாட்டிய எப்பிடிண்ணா புடிச்சீங்க?'' என்று விழுந்து விழுந்து சிரித்தாள் மதுமதி.

ஒரு வழியாகச் சிரித்து ஓய்ந்தவள், ''நான் அம்மா கூட டவுனுக்குப் போறேண்ணா. பீரோல இருந்து ஐந்நூறு ரூபாய் எடுத்துக்கறேன். பை வசு!'' என்று சென்றே விட்டிருந்தாள்.

மதுமதி கண்களிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்றிருந்த வசுமதி, பிறகு திரும்பிக் கணவனைப் பார்த்தாள்.

ஆனால் அதற்குப் பிறகுதான் கணவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

''என்ன, ஏன் அப்படிப் பாக்கறீங்க?''

மெல்லிய குரலில் கேட்ட மனைவியை, ''வா, தோப்ப சுத்திக் காட்டறேன்,'' என்று அழைத்துக் கொண்டு போனான்.

ஆங்காங்கே கேட்ட சலசல சத்தத்தில் கணவனின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டாள் வசுமதி.

தோப்பை முழுவதுமாக மனைவிக்குச் சுற்றிக் காட்டியிருந்தான் ஹரிவரதன்.

''எத்தன ஏக்கர்?''

''இருபத்தஞ்சு.''

''அப்ப நாம இப்ப அவ்வளவு தூரமா நடந்திருக்கோம்?'' என்று ஆச்சரியமாகக் கேட்டவளிடம், ''மேக்ஸிமம் வேணும்னா ஒரு ரெண்டு கிலோ மீட்டர்

நடந்திருப்போம். ஏன் கால் வலிக்கிதா?'' என்று கேட்டான்.

''ம்கூம், இல்லையே.''

......

''ஆமாம். நேத்து தோப்பு வீடுன்னு சொல்லிட்டிருந்...''

''இப்ப அங்க தான் போயட்டிருக்கோம். அங்க தெரியுது பார் தோப்பு வீடு.''

''வாவ்! சுத்தி மரம், செடி, பூந்தோட்டம்னு ரொம்பப் பிரமாதமா இருக்கு ஹரி.''

''நிஜமாவா?''

''பின்ன?'' என்று கணவனோடு உரசிக் கொண்டு அவனது கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு வந்த வசுமதி, கணவனின் பார்வை மாறியதைக் கவனிக்கவில்லை.

அதற்குள் இருவரும் தோப்பு வீட்டிற்கு அருகிலேயே வந்திருக்க, தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து சாவியை எடுத்து வீட்டைத் திறந்தான் ஹரிவரதன்.

கணவனுக்கு முன்பாகவே வீட்டிற்குள் வந்திருந்த மதுமதி, ''அப்படியே குளுகுளுன்னு ஏ.சி.போட்ட மாதிரி ரொம்பப் பிடிச்சிருக்கு ஹரி!'' என்று மிகவும் உணர்ந்து சொன்னாள்.

''என்ன மட்டும் விட்டா நான் இங்கயே படுத்து சுகமாத் தூங்கிடுவேனாக்கும்.''

''பின்ன இங்க எதுக்கு வந்தோம்னு நினைச்ச?'' என்று கதவை உள்புறமாகத் தாழிட்டுக் கொண்டு வந்த கணவனைப் பார்த்தாள் வசுமதி.



''என்ன ஹரி, நிஜமாவா....''

அதே நேரம் கணவன் தனக்கு மிக அருகில் வந்து நின்றிருக்க, நெஞ்சு படபடக்க நிமிர்ந்து பார்த்தாள்.

அவனுடைய மூச்சுக்காற்று தன் மேல் விழுமளவிற்கு வந்து நின்றிருந்த கணவனின் அருகாமையில், குப்பென்று முகம் சிவந்து போய்விட அப்படியே குனிந்து கொண்டு விட்டிருந்தாள்.

''வசு...''

தனது அழைப்பில் நிமிர்ந்து பார்த்த மனைவியின் முகத்தை அப்படியே தனது கைகளில் ஏந்திக் கொண்டவன், அவளுடைய முகம் நோக்கிக் குனிந்தான்.

''யாராவது பாத்...'' என்று நகரப்போன மனைவியை இழுத்து அவன் தனது மார்போடு அணைத்துக் கொள்ள, சில வினாடிகள் திமிறிய வசுமதி போகப் போகத் தானும் தனது கணவனை இறுக அணைத்து அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

எவ்வளவு நேரம் அப்படிக் கழிந்ததோ, இருவரும் மீண்டும் நடப்புக்கு வந்த போது வெகு நேரம் கழிந்து விட்டிருந்தது மட்டும் தெரிந்தது.

''போலாம் ஹரி...'' என்று கணவனை நிமிர்ந்து பார்த்து மெல்லிய குரலில் சொன்னாள் வசுமதி.

.......

''உங்க...''

''அங்க வீட்ல யாருமில்ல, அம்மாவும், மதுவும் வெளிய கிளம்பியிருப்பாங்க. அப்பாவும் ரிஷியும் அப்படியே கோவில்ல இருந்தே ஒரு ஜோலியா வெளிய

போய்ட்டாங்க. இடியே விழுந்தாலும் தன் ரூம்ல கதவ சாத்திட்டுப் படிக்கற மஞ்சரி மட்டும் தான் இருக்கா.''

''அதனால என்ன...''

''இங்க வா,'' என்று மனைவியை அழைத்துக் கொண்டு போய்க் கட்டிலில் அமர வைத்துத் தானும் அருகில் அமர்ந்து கொண்டான் ஹரிவரதன்.

மனைவியின் மிருதுவான கைகளை எடுத்துத் தனது கைகளில் வைத்துக் கொண்டவன், ''உன் கை எவ்வளவு ஸாஃப்ட்டா இருக்கு!'' என்று வியந்தான்.

''ஹரி...''

''என்னடா?''

''உங்களுக்கு எம்மேல...''

''ம் சொல்லு.''

''உங்களுக்கும் என்னப் புடிக்குமா? இல்ல, சும்மா கட்டாயத்து...''

''இது என்ன இப்படியொரு சந்தேகம்? அதுதான் நேத்து நைட் எவ்வளவு புடிக்கும்னு காட்டினேனே...''

கணவனின் வார்த்தைகளில் முகம் சூடாகி இரத்த நிறமே கொண்டுவிட, உதட்டைக் கடித்துத் தன்னை இயல்பாக வைத்துக் கொள்ள முயன்றாள் வசுமதி.

அதேநேரம் ஹரிவரதனின் பார்வையோ மனைவியின் உதடுகளில் நிலைத்திருந்தது.

''விளையா...''

''வேணும்னா இப்பவும் தயாரா இருக்கேன்...'' என்ற கணவனை நிமிர்ந்து பார்த்த வசுமதி கணவனின் அந்தப் பார்வையில், ''ப்ளீஸ் ஹரி...'' என்று சிணுங்கினாள்.



.........

''வாங்க கிளம்பலாம்?''

''ஏன் அங்க தான் நல்லா இருக்கா, வேணும்னா இங்க...''

''ஐயோ..'' என்று தன்னை அடிக்க வந்த மனைவியை மீண்டும் தனது கைகளுக்குள் சிறைப் பிடித்திருந்தான் ஹரிவரதன்.

''ப்ளீஸ் ஹரி, இந்த நே...''

''ஆமா, நேத்து நைட்டு ஏன் அழுத, நான் பாம்ப அடிக்கும் போது?''

''பின்ன அது உங்களக் கடிச்சு வெச்சிருந்தா.''

''சரி, அதுக்கு அழுவாங்களா?''

''என்ன ஹரி, இப்படிக் கேக்கறீங்க? உங்களுக்கு மட்டும் ஏதாவது ஆயிருந்ததுன்னா...''

''ம்.''

''வேண்டான்டா...''

மேலும் தன்னை நெருங்கியிருந்த கணவனிடமிருந்து லாவகமாகத் தப்பித்துக் கொண்டு எழுந்து ஓடியே விட்டிருந்தாள் வசுமதி.

சில வினாடிகளில் தன்னைத் தொடர்ந்து வெளியே வந்திருந்த கணவனிடம், ''போலாம் ஹரி,'' என்றாள்.

''சரிதான் வா, அங்க நம்ம...''

''போடா, நான் வர மாட்டேன்.''

கதவைப் பூட்டிக் கொண்டு வந்த கணவனின் முகத்தில் தெரிந்த புன்னகையில்,

''என்ன?'' என்று கேட்டாள்.

''வரவர மரியாத ரொம்பக் குறையுது. எனக்குப் பிரச் சனையில்ல. ஆனா மத்தவங்களுக்கு முன்னாடி இப்படி எதையாவது சொல்லிட்டு அப்புறம் பாவம் முழிக்காத.''

''நான் ஏன் மத்தவங்களுக்கு முன்னாடி அப்படி சொல்லப் போறேனாம்?''

''அப்ப சரி,'' என்ற கணவனுடன் அவனை ஒட்டிக் கொண்டு நடந்தாள் வசுமதி.

''ஏற்கெனவே என்னக் கண்ட்ரோல் பண்ணிக்க முடி யாம கஷ்டப்பட்டுட்டிருக்கேன். மேலமேல இப்படி சோதிக்கறயே நியாயமா?''

கணவனின் கேள்வியில் ரோஷத்துடன் தள்ளி நடந்து வந்தவள், சரக் சரக்கென்று எங்கோ கேட்ட சத்தத்தில் பயத்துடன் மீண்டும் சென்று கணவனின் கைகளைப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தாள் வசுமதி.

''இனி என்னக் குத்தம் சொல்லக் கூடாது. சொல்லிட் டேன்,'' என்ற கணவனின் வார்த்தைகள் காதில் விழாதது போலக் காட்டிக் கொண்டு நடந்தாள்.

# 14



ஒரு வாரம் சென்றிருந்தது.

வீட்டு ஆண்கள் மூவரும் சாப்பிட வந்து அமர்ந்திருக்க, உணவு பரிமாறிய தனது அத்தை பத்மாவதிக்கு அனைத் தையும் எடுத்துக் கொடுத்து உதவி செய்தாள் வசுமதி.



''மதுவுக்கு அந்தப் பையனோட ஜாதகம் பொருத்தமா இருக்கு ஹரி, சொன்னேனா?''

தந்தை கேட்க, ''ஆமாம்பா. ரெண்டு நாள் முன்னா டியே சொன்னீங்க,'' என்றான் ஹரிவரதன்.

''திரும்பவும் இன்னைக்கும் வழில பாத்தப்ப மாப்பிள் ளைக்குப் பெரியப்பாவாம் பேசினார். ஏன் நாம மேல ஆக வேண்டியதப் பாக்கக் கூடாது?''

''தாராளமாப் பாக்கலாம். எந்தத் தப்பும் சொல்ல முடி யாத அளவுக்கு நல்ல இடம்பா. முக்கியமா நம்ம மது வுக்குப் பொருத்தமான மாப்பிள்ள.''

பிறகு அந்தக் குடும்பத்தைப் பற்றிப் பேச்சு சென் றிருக்க, சிறிது நேரத்திற்குப் பிறகே அனைவரும் சாப்பிட்டு முடித்து எழுந்திருந்தார்கள்.

தொடர்ந்து வந்த ஒரு மாதத்திலேயே மதுமதியின் திருமணம் நிச்சயமாகி விட்டிருந்தது.

திருமணத்திற்குத் துணி, நகைகள், பாத்திரங்கள், பொருட்கள் என அனைத்தையும் வாங்குவதிலேயே நாட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்திருந்தன.

திருமணத்திற்கு இன்னும் நான்கு நாட்களே இருந்தன.

அனைவருக்கும் பத்திரிகை வைக்கும் வேலைகள் அன்றோடு முழுமையாக முடிந்திருந்தன.

தனது வீட்டிற்குப் பத்திரிகை வைக்க அத்தையும், மாமாவும் சென்றிருந்தார்கள் என்பது வரை மட்டுமே வசுமதிக்குத் தெரிந்திருந்தது.

திருமணமான நாளிலிருந்து இன்று வரை அவளும் ஒரே ஒரு முறை மட்டுமே தனது வீட்டிற்கு அழைத்துப் பேசியிருந்தாள்.

அப்பொழுது தாய் மட்டுமே பேசினார். தந்தை பேசியிருக்கவில்லை.

தன்னிடமே அப்படியென்றால், மற்றவர்களிடம் அதாவது அத்தை மாமாவிடம் சுத்தமாகவே பேசியிருக்கவே மாட்டார்களோ என்று வசுமதியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதிலும் முக்கியமாகத் தந்தை.

அப்படித் திருமணத்திற்கு அழைக்கச் சென்றுவிட்டு வந்த அத்தையும் மாமாவும் அதைப் பற்றி எதையும் பேசவில்லை என்பதிலிருந்தே தனது பிறந்த வீட்டில் அவர்களுக்கு வரவேற்பு எந்த மாதிரி இருந்திருக்குமென்பதை வசுமதியால் புரிந்து கொள்ள முடிந்தது.

சற்று ஆழ்ந்து யோசித்துப் பார்த்தவளுக்கு அழுகை கூட வந்திருந்தது.

தனது புகுந்த வீட்டுச் சொந்தங்கள் நல்லவர்களாகி விட ஓரளவு தப்பித்து விட முடிந்தது. இதுவே மோசமானவர்களாக இருந்தால்...

அதற்கு மேல் எதைப் பற்றியுமே நினைத்துப் பார்க்கக் கூட வசுமதியால் முடிந்திருக்கவில்லை.

இதுவே தனது கணவன் ஒருவனுடைய முகத்திற்காகத் தான் தனது அத்தையும், மாமாவும் இதைப் பெரிது படுத்திப் பேசாமல் இருக்கிறார்களோ என்றும் மனதிற்குள் ஓரளவு சரியாகவே யூகித்திருந்தாள்.

ஒருவேளை இதைத் தனது கணவனே பெரிது படுத்திப் பேசினால்...

அந்த வழியில் மேலும் யோசித்துக் கொண்டே போனவள் உடனே ம்கூம் மாட்டான் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.



ஆனால் பின் வரும் நாட்களில் அப்படித்தான் நடக்கப் போகிறது என்பதை அப்பொழுது வசுமதியும் பாவம் அறிந்திருக்கவில்லை.

திருமண நாளும் மிக அருகில் வந்திருந்தது.

தனது பெற்றவர்களின் வரவைக் காலையிலிருந்தே வழி மேல் விழி வைத்து ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள் வசுமதி.

நியாயத்திற்குக் குடும்பம் மொத்தமுமே ஒரு நாள் முன்பே கிளம்பி வந்து இருந்து திருமணத்தை முடித்துக் கொண்டு செல்ல வேண்டும்.

ஆனால் அப்படியெல்லாம் அதிகப்படியாக எதிர்பார்த்து ஏமாந்து போகுமளவிற்கு வசுமதியும் ஒன்றும் சுத்தமாக நடப்பு புரியாதவளாக இருக்கவில்லை.

ஆனால் அன்று காலையிலிருந்து தன்னுடைய பெற்றவர்களின் வரவை மிகமிக ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

அவளுடைய நாத்தனாரான மதுமதியைத் திருமணம் செய்து கொடுப்பதும் பக்கத்திலிருக்கும் ஒரு ஊருக்குத் தான்.

அதனால் திருமணம் உள்ளூரிலேயே வைக்கப்பட்டு விட்டிருந்தது.

கிராமமென்றாலும் அது பெரிய ஊர் என்பதோடு, தனது கணவனின் குடும்பத்துடன் ஊர் மக்கள் அனைவருமே மிகவும் நல்ல விதமாகப் பழகி வருவதையும் கண்டாள் வசுமதி.

அதனால் காலையிலிருந்தே வீடு முழுவதற்கும் விருந்தினர்களின் வரவு அல்லோலகல்லோலப் பட்டது.

வசுமதி தானே சற்று மறந்திருந்தாலும் கூட, விடா மல், எங்கே சம்பந்தி வீட்டிலிருந்து இன்னும் யாரையும் காணவில்லையென்று வந்தவர்கள் அனைவருமே விசாரிக்கத் தொடங்கி விட்டார்கள்.

அதிலும் ஊர் வம்பு பேசுபவர்கள் சற்று மிகைப் படுத்தியே கேட்பதும் புரிந்தது.

அவர்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் தனது புகுந்த வீட்டுச் சொந்தங்கள் முக்கியமாக அத்தை திணறு வதைப் பார்த்தவளுக்கு ஆதங்கத்தில் கண்களும் கூடக் கலங்கி விட்டிருந்தன.

தந்தை ஏன் இந்த அளவிற்கு இருக்கிறாரென்று நினைக்கத் தோன்றியது.

சரிதான் போகட்டும், கடைசிக்கு அவர் அம்மாவை யாவது ஒருநாள் முன்னரே... ஏன் இப்பொழுது வந்தாலும் கூடப் போதுமே.

ஆனால் அன்று முழுவதுமே வசுமதியின் பிறந்த வீட்டிலிருந்து யாருமே வந்திருக்கவில்லை.

மறுநாள் காலையில் சரியாகத் தாலி கட்டும் நேரத் திற்கு வந்துவிட்டு அதிலும் வந்ததும் கிளம்பி விட்டிருந்த தாயின் செய்கையில் ஏன் இது கூட வராமலே இருந் திருக்கலாமே என்று தோன்றிவிட்டிருந்தது வசுமதிக்கு.

வசுமதிக்கே இப்படியென்றால் மற்றவர்களின் மன நிலையைப் பற்றியோ சொல்ல வேண்டியதே இருக்க வில்லை.

முக்கியமாக ஹரிவரதனுக்கு.

கணவனின் கோபம் வசுமதிக்கும் புரியவே செய்தது, ஏன், மனதிற்குள் என்ன சொல்லி விடுவானோ என்று பயந்து கூடப் போய் விட்டிருந்தாள்.



தொடர்ந்து வந்த இரண்டு நாட்களும் கணவன் தன்னிடம் முகம் கொடுத்துப் பேசாததில், சரிதான் என்று உறுதியே செய்து விட்டிருந்தாள்.

சாஸ்திர, சம்பிரதாயங்களெல்லாம் முடிந்து மதுமதி தனது கணவனுடன் மூன்றாம் நாள் அவளுடைய புகுந்த வீட்டிற்குக் கிளம்பி விட்டிருந்தாள்.

கணவனும் சில நாட்களாக முகம் கொடுத்துப் பேசாத தோடு, நன்கு மனம் விட்டுப் பேசும் மதுமதியும் கிளம்பி விட்டிருந்ததில் மணமாகி வந்ததிலிருந்து அறியாத வகையாக மிகவும் தனிமையாக உணர்ந்தாள் வசுமதி.

கணவன் மட்டுமா, அத்தையும், மாமாவும் கூடத் தன் னிடம் முகம் கொடுத்துப் பேசவில்லையே என்று நினைத்தவளுக்கு மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

கடந்த மூன்று நாட்களாகக் கணவன் இரவு எப் பொழுது வந்து படுத்தான், எப்பொழுது எழுந்து சென் றான் என்ற எதையுமே வசுமதி அறிந்திருக்கவில்லை.

கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

மாலை ஐந்து மணி ஆகியிருந்தது.

நேராகச் சென்று கைகால் முகம் கழுவிக் கொண்டு வந்து பூஜையறையில் விளக்கேற்றி வைத்தாள்.

தோட்டத்திற்குள் சென்றுவிட்டு மாமனாரும் கண வனும் வீடு வந்து சேர்ந்திருக்க, டிபனும் காபியும் எடுத் துப் போய்க் கொடுத்தாள்.

திருமணச் செலவுக் கணக்குகளைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டது காதில் விழுந்தது.

ஏதோ வேலையாக வெளியே சென்றிருந்த அத்தை, ''நான் வரத் தாமதமானாலும் ஆகும். நீயே டிபன்

சென்றது நினைவிற்கு வர, சமையலறைக்கு வந்தாள்.

என்ன டிபன் செய்வதென்று தெரியாமல் சிறிது நேரம் விழித்தவள், பிறகு இட்லியை ஊற்றி வைத்துவிட்டு சட்னியை அரைத்து வைத்தாள்.

போதுமென்று நினைத்தவளுக்கு, உடனே தனது அத்தை எப்பொழுதும் இரண்டு டிபன் செய்வார்களே என்று தோன்றியதில் உப்புமாவையும் செய்து ஹாட் பாக்ஸில் போட்டு டேபிளின் மீது கொண்டு வந்து வைத்தாள்.

ருசி எப்படியிருக்குமோ என்று பயமாகத் தான் இருந்த தென்றாலும், நிச்சயமாக மிகவும் மோசமாக இருக்காது என்ற நம்பிக்கையும் இருந்தது.

இரவு உணவிற்கு இன்னும் நேரம் நிறைய இருந்த தால், விசேஷத்தால் கலைந்து போயிருந்த பொருட் களை யெல்லாம் எடுத்து அடுக்கி வீட்டை ஒதுக்கி வைப்பதில் முனைந்தாள்.

மேலும் ஒரு மணி நேரம் கூடச் சென்றிருக்க, கூடத் திற்கு வந்தாள்.

மாமனார் டி.வி. பார்த்துக் கொண்டிருக்க, கணவன் ஏதோ வேலையாக இருப்பது தெரிந்தது.

''டிபன் சாப்பிடலாம்,'' என்று மெல்லிய குரலில் இரு வரையும் அழைத்தாள்.

ஒருவேளை காதில் விழுந்திருக்காவிட்டால் என்று மீண்டும் ஒரு முறை அழைப்பதற்குள்ளேயே, ''எடுத்து வைம்மா, வர்றோம்,'' என்ற மாமனாரின் வார்த்தைகளில் ''சரி மாமா,'' என்று வேகமாக வந்தாள்.



சில நிமிடங்களில் வந்து அமர்ந்த மாமனாருக்கும், கணவனுக்கும் கவனத்துடன் பரிமாறினாள்.

மாமனார் எப்பொழுதும் போல சாப்பிடுவது தெரிந் தது, ஆனால் இரண்டு இட்லிகளிலேயே போதுமென்று மறுத்து விட்டிருந்த கணவனுக்கு, ''உப்புமாவும் செஞ் சிருக்கேன்,'' என்று பரிமாறினாள்.

உப்புமாவில் ஒரு வாயை எடுத்துச் சாப்பிட்டிருந்தவன், அடுத்த வாய் சாப்பிட்டிருக்கவில்லை.

கணவனின் முகத்தில் தெரிந்த கடுமை அவனிடம் என்னவென்று கேட்பதற்குக் கூட விடாமல் செய்திருந்தது.

அடுத்த சில நிமிடங்களில் இருவரும் உணவு முடிந்து எழுந்து சென்றிருக்க, அவர்கள் சாப்பிட்ட ப்ளேட்டை எடுத்து டேபிளைச் சுத்தம் செய்து முடித்தாள்.

''என்னமா, இனி நாம சாப்புடலாமா?'' என்ற குரலில் தான் திரும்பிப் பார்த்தாள் வசுமதி.

''வாங்க அத்தெ, நீங்க எப்ப வந்தீங்க?'' என்று கேட் டவள், ''அதெல்லாம் சாப்புடலாம் அத்தெ,'' என்றாள்.

''இப்பதாம்மா. ஒரு அஞ்சு நிமிஷமாச்சு,'' என்றவர், ''எடுத்து வை. வர்றேன்,'' என்று சென்று புதுத் துணியை மாற்றிக் கொண்டு திரும்பி வந்தார்.

''ஒரே நிமிஷம் அத்தெ. நான் போய் மஞ்சுவ வரச் சொல்றேன்,'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ''இதோ நானே வந்துட்டேன் அண்ணி,'' என்று வந்து அமர்ந்திருந்தாள் மஞ்சரி.

''அவரு அத்...''

''யாரு ரிஷியா?''

''ம், அவரு தான்.''

''அவன் எங்கயோ ஃப்ரண்ட் வீட்டுக்குப் போறேன் னாம்மா. வர்றது சந்தேகம் தான். வா, நாம சாப்பிடலாம். நாலஞ்சு நாளா நல்ல தூக்கமே இல்ல. வயித்துக்குக் கொஞ்சம் போட்டுட்டு நேரத்துல போய்ப் படுக்கலாம்,'' என்று தனது அத்தை வந்து சாப்பிட அமர்ந்திருக்கத் தானும் அமர்ந்து கொண்டாள் வசுமதி.

''என்னமா?''

''எப்படியிருக்குன்னு தெரியல என் சமைய...''

''எப்படியிருந்தாலும் தப்பில்ல. அதோட தொடர்ந்து ரெண்டு நாள் செஞ்சுட்டே இருந்தாப் பழகிடப் போகுது.''

அதற்குப் பிறகு மூவரும் சாப்பிடத் தொடங்கியிருந் தனர்.

உப்புமாவை வாயில் வைத்தவளுக்கு அதற்குப் பிறகு தான் ஏன் கணவன் அப்படிப் பாதியில் எழுந்து சென் றான் என்பது புரிந்தது.

உப்பு சுத்தமாகவே இருக்கவில்லை.

கணவனாவது ஒரு வாயை விழுங்கினான், நம்மால் அது கூட முடியாது போலிருக்கிறதே என்று நினைத்துக் கொண்டே விழுங்கவும் முடியாமல் துப்பவும் முடியாமல் விழித்தாள் வசுமதி.

எப்படியோ விழுங்கி விட்டு வாய் திறந்து பேசினாள்.

''ஸாரி அத்தெ, உப்புமால உப்பே இல்ல.''

''ஏன் அண்ணி உப்புமால இருக்கற உப்பே போதும்னு நினைச்சுட்டிங்களா? ஐமீன் அந்த வார்த்தைல?'' என்று மஞ்சரி கேட்க, ''பரவாயில்லமா. நான் தயிர் ஊத்தி



அப்படியே உப்பும் போட்டுக்கறேன்'' என்று விட்டிருந் தார் பத்மாவதி.

''ஆனா...''

''என்ன அத்தெ?''

''அவங்க ரெண்டு பேரும் என்ன பண்ணினாங்க?''

''மாமா நீங்க செஞ்ச மாதிரி தான் தயிரும், உப்பும் சேத்து சாப்டுட்டார். அவருதான் பாதில எழுந்துட்டார்.''

தயக்கத்துடன் சொன்ன மருமகளைப் பார்த்துச் சிரித்த பத்மாவதி, ''சரிவிடு. உம்புருஷனுக்கு தான் மூக்குக்கு மேல கோபம் வர்றதாச்சே. ஒரு நாளைக்கு உப்புக் குறைஞ்சா ஒன்னும் தப்பாயிடாது!'' என்றார்.

ஆனால் அடுத்த வினாடியே, ''இருந்தாலும் பாதில எழுந்து போய்ட்டான்னல்ல சொல்ற. ஒன்னு பண்ணு. பால் எடுத்துட்டுப் போகும் போது அப்படியே ரெண்டு பெரிய வாழப்பழமும் எடுத்துட்டுப் போய்க் குடு,'' என்றார்.

''சரி அத்தெ.''

''ம்கூம். நீங்களும் அண்ணா மாதிரி தப்பிச்சுடலாம்னா பாக்கறீங்க. விட மாட்டேன்,'' என்று சிரித்த மஞ்சரி, ''தயிர் விட்டு உப்புப் போட்டுக்கோங்க அண்ணி. ஸ்பீடா உள்ள போய்டும்,'' என்றாள்.

உப்புமாவைப் போல வாயில் வைக்கச் சகிக்காத அள விற்கு இருக்காவிட்டாலும், இட்லியும் சட்னியும் அப்படி ஒன்றும் பிரமாதமாக இருக்கவில்லையென்பது தெரிந்தது.

சிறிது நேரத்தில் சாப்பிட்டு முடித்து அனைத்தையும் ஒதுக்கி வைத்து முடித்தவள், தனது அத்தை சொன்னது

போலப் பாலோடு இரண்டு பழங்களையும் கணவனுக்காக எடுத்து வந்தாள் வசுமதி.

அவனுடைய ஆபீஸ் டேபிளில் அமர்ந்து கம்ப்யூட்டரில் எதையோ பார்த்துக் கொண்டிருந்த கணவனுக்கு முன்பாக வந்து நின்றவள், ''பால் எடுத்துக்கோங்க,'' என்றாள்.

சில வினாடிகளில் நிமிர்ந்து பார்த்த ஹரிவரதன், ''வெச்சுடு,'' என்றான்.

''பழமும் எடுத்துக்...''

''வெச்சுட்டுப் போன்னு சொல்றேனில்ல?''

எரிந்து விழுந்த கணவனைச் செய்வதறியாது பயத்துடன் சில வினாடிகள் பார்த்துக் கொண்டு நின்றவள், பிறகு வந்து படுத்துக் கொண்டாள்.

ஒரு மணி நேரம் சென்றிருக்க, எழுந்து பார்த்தாள்.

கணவன் இருக்கையில் இல்லாதிருந்தது தெரிய, சரிதான் குளிக்கச் சென்றிருப்பானென்று மீண்டும் படுக்கப் போனவள் அதற்குப் பிறகுதான் பழங்கள் இரண்டும் சாப்பிடப்படாமல் அப்படியே இருப்பதைக் கண்டாள்.

சில நிமிடங்களில் குளித்து விட்டு வெளியே வந்த கணவனிடம் மீண்டும் பழம் எடுத்துக்கோங்க என்றாள்.

ஆனால் அதற்கு அவனிடமிருந்து எந்தப் பதிலும் வராது போக, தானே எழுந்து வந்து எடுத்துக் கொடுத்தாள்.

''வெச்சுட்டுப் போ. எனக்குச் சாப்பிடத் தெரியாதா?''

''தயவு செஞ்சு சாப்பிடுங்க ஹரி. மதியமும் நீங்க சரியா சாப்புடலயே...''



''அவ்வளவு அக்கறையிருக்கறவ ஒழுங்கா செஞ்சிருக்கணும்.''

''நானெல்லாம் நல்லா தான் செஞ்சேன். ஆனாலும்...''

எங்கிருந்து அவ்வளவு கோபம் வந்ததோ, ''கொஞ்சம் என் உயிர வாங்காமப் போறியா?'' என்று கத்தியே விட்டிருந்தான் ஹரிவரதன்.

கணவனின் கோபத்தில் கண்கள் கலங்கி விட்டிருக்க, பேசாமல் வந்து படுத்துக் கொண்டு விட்டிருந்தாள் வசுமதி.

கணவனின் கோபம் தன்னை இந்த அளவிற்குப் பாதித்து விடுமென்று அவள் துளியும் எதிர்பார்த்திருக்கவில்லை.

உண்மைதான். கணவனுக்குத் தன்னைப் பிடிக்கவில்லையென்ற முடிவுக்கே வந்து விட்டிருந்தாள்.

ஏன் கணவன் தன்னிடம் முகம் கொடுத்துப் பேசியே எத்தனையோ நாட்களாகி விட்டனவே.

மனம் பாரமாகி விட்டிருக்க, அழுகை தான் வந்தது.

சில நிமிடங்களில் படுக்கைக்கு வந்த ஹரிவரதன், முதலில் சென்று பழங்கள் இரண்டையும் உண்டுவிட்டு மீண்டும் பல் துலக்கிவிட்டு வந்தான்.

திரும்பிப் படுத்திருந்த மனைவியின் உடல் அழுகையில் குலுங்குவது தெரிந்தது.

அருகில் சென்று, ''வசு!'' என்று அழைத்தான்.

மேலும் சிலபல முறையும் கூட அழைத்துப் பார்த்தவன், மனைவியிடமிருந்து எந்தப் பதிலும் இல்லாததில் பேசாமல் சென்று படுத்து விட்டிருந்தான்.

சில வினாடிகள் தான். மனம் கேட்காமல் திரும்பி மீண்டுமொரு முறையும் கூட, ''வசு...'' என்று மனைவியின் முதுகில் கை வைத்து அழைத்தான்.

அப்பொழுதும் திரும்பிப் பார்க்காததில் வலுக்கட்டாயமாக மனைவியைத் தன்னை நோக்கித் திருப்பினான்.

கன்றிச் சிவந்து போயிருந்த மனைவியின் முகத்தைப் பார்த்தவனுக்கு, என்னவோ போல ஆகி விட்டிருந்தது.

''வசு, எனக்கொரு ஹெல்ப் பண்றியா?'' என்று வேண்டுமென்றே பாவமாகக் கேட்டான்.

......

''பேசமாட்டியா? சரிதான். ஆனாலும் நீ எனக்கு ஹெல்ப் பண்ணித்தான் ஆகணும்.

''என்னன்னு கேக்க மாட்டியா? சரிதான். நானே சொல்றேன்,'' என்றவன், ''என்னோட தப்புக்குத் தண்டனையா நீ வேணும்னா எனக்கு அதே மாதிரி இன்னொரு தடவ உப்புமா செஞ்சு குடுத்துடு. சரிதானா?'' என்றான்.

கணவன் தன்னைப் பேச வைக்க முயற்சிப்பது தெரிந்தாலும், கண்களை மூடிப் பேசாமல் படுத்துக் கொண்டாள் வசுமதி.

''சரி வா. வேணும்னா இப்பவே அந்த உப்புமாவக் குடு. சாப்பிடறேன்,'' என்று கணவன் தனது கையைப் பிடித்து இழுக்க, இப்பொழுது முடியாமல் சிரித்தே விட்டிருந்தாள்.

''அப்பாடா, மேடம் ஒரு வழியா சிரிச்சுட்டாங்க!'' என்ற கணவனிடம், ஆனாலும் பேச மாட்டேனாக்கும் என்றாள்.

கணவனிடம் புன்னகையில், ''என்ன?'' என்று கேட்டாள்.



தனக்குப் பதில் சொல்லாமல் மேலும் சிரித்த கணவனின் பாவனையில், ''என்னன்னு சொல்லிட்டு சிரிங்க,'' என்று மீண்டும் கேட்டாள்.

''பேச மாட்டேன்னு சொல்லிட்டுப் பேசிட்டே இருக்க!''

.......

''வசு...''

''உங்களுக்கு எம்மேல கொஞ்சங்கூட ஆசையே இல்ல, இல்லயா ஹரி?''

.......

''தெரியும். ஏதோ போனாப் போகு...''

''ரொம்பவும் மனசப் போட்டு எதுக்குக் குழப்பிக்கற?''

''ஆமா, இல்லையா... அது மட்டும் சொல்லுங்க. சொல்...''

அதற்கு மேல் மனைவியைப் பேச ஹரிவரதன் விட்டிருக்கவில்லை.

அப்படியே அவளை அருகில் இழுத்துக் கொள்ள, அதற்கு மேல் எதையும் பேசவோ யோசிக்கவோ முடியாமல் வசுமதி தானும் தனது கணவனை இறுக அணைத்து அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

# 15



அன்று காலையில் எழும்

ஞாபகம் தான் வந்தது வசும

ஆனாலும் மற்றவர்களுக்காகத் தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டு வழக்கம் போலத் தனது வேலைகளைக் கவனிக்கலானாள்.

''வசு!''

''சொல்லுங்க அத்தெ''

''இன்னையிலிருந்து வெங்காயத் தோட்டத்துல களையெடுக்கணும்மா. அதனால காலைல போனா சாயங்காலம் தான் வருவேன்.''

''சரி அத்தெ.''

''காலைல டிபன் செஞ்சாச்சு, மதியத்துக்குக் குழம்பு வெச்சாச்சு, பொரியல், ரசம் பண்ணிச் சாப்பாடு மட்டும் வெச்சுடு.''

''சரி அத்தெ. நானும் வேணும்னா உங்க கூடத் தோட்டத்துக்கு வரட்டுமா அத்தெ?''

''அதுசரி,'' என்று சிரித்தவர், ''அப்புறம் சாயங்காலம் திரும்பி வரும்போது நீ கருவாடாகித் தான் வரணும்,'' என்றார்.

........

''மது இருந்தா வீட்டு வேலைகளையெல்லாம் அவ செய்வா. நீ வீட்ல சமையல் செய்ய மட்டும் பழகிக்கோமா. அது போதும்.''

''சரி அத்தெ.''

''அது சரி. இன்னைக்கு நீ ஏன் ஒரு மாதிரியிருக்க?''

''அதெல்லாம் ஒன்னுமில்ல அத்தெ.''

''சரி. இந்தா காபி, எடுத்துக்கோ, நான் போய் கிளம்பற வேலையைப் பாக்கறேன்,'' என்று தனது அத்தை எழுந்து



சென்றிருக்க, காபியைக் குடிக்கத் தொடங்கினாள் வசுமதி.

காபி குடித்துக் கொண்டிருக்கும் போதே தனது மொபைலுக்கு அழைப்பு வர, ஓடிச் சென்று அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தாள்.

சந்தோஷமாகச் சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தவள், ''சரிமா. வைக்கறேன்,'' என்று மீண்டும் சமையலறைக்கு வந்து வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

தான் சந்தோஷமாகப் பேசியதைக் கணவன் கவனித்து விட்டான் என்பதை வசுமதி அறிந்திருக்கவில்லை.

சிறிது நேரம் தான் சென்றிருக்கும். மீண்டும் தனது மொபைல் ஒலிக்க ஓடிச் சென்று அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தாள்.

''வாவ் டாடி, எப்படியிருக்கீங்க?''

.........

''ம். ஃபைன்.''

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தது விட்டு அதற்குப் பிறகே போனை வைத்திருந்தாள் வசுமதி.

அப்பொழுதும் கணவன் கவனித்து விட்டதை வசுமதி அறியவில்லை.

அனைவரும் மதிய உணவிற்கு வந்து அமர்ந்திருக்க, பரிமாறினாள்.

சை என்ற குரலில் வேகமாகத் திரும்பிப் பார்த்தாள்.

''என்ன இது, வாயில வைக்க சகிக்கல.''

கோபத்துடன் சொன்ன கணவனைப் புரியாமல் பார்த்தாள்.

''உன்னையென்ன தோட்டத்துல போயா வெயில்ல வேல செய்யச் சொல்றாங்க. ஜஸ்ட் வீட்ல சமயல் செய்யற சிம்பிள் வேல தான. அது கூடவா செய்ய முடியாது?''

.........

''தெரிஞ்சோ தெரியாமலோ நீ வந்து வாழ்க்கைப் பட்டது விவசாயக் குடும்பத்துல. இனி நீ அதயும் செய்ய வேண்டிய நாள் சீக்கிரம் வரும்!'' என்ற கணவன் சாப்பிடாமலே எழுந்து சென்றிருக்க, செய்வதறியாது அப்படியே நின்று விட்டிருந்தாள்.

சில வினாடிகள் தான். உடனே நடப்புக்கு வந்து மாமனாருக்கும், கொழுந்தனாருக்கும் உணவு பரிமாறினாள்.

இனிமேல் முன்னரே அத்தையிடம் கேட்டுக் கொண்டு சமைத்து விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டே, தானும் சாப்பிடாமல் அனைத்தையும் ஒதுக்கி வைத்தாள்.

மாலை வரை நேரம் போகாமல் உலவிக் கொண்டிருந்தவள், சென்று கிணற்றடி மேடையில் அமர்ந்து விட்டிருந்தாள்.

மதுமதி மட்டும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று தோன்றியது.

மதுமதி இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பாளென்று நினைத்தவளுக்குப் பாவம் புது இடத்தில் பழகி விட்டாளோ என்னவோ என்று நினைக்கத் தோன்றியது.

''வசுமதி!''

யாரோ... இல்லையே, அது கணவனுடைய குரலாயிற்றே என்று எழுந்து அவசரமாக உள்ளே ஓடி வந்தாள் வசுமதி.

''என்னங்க, நான் இங்க இருக்கேன்.''



''வாடி. உம்மனசுல நீ என்னதான் நினைச்சுட்டிருக்க?''

''என்னங்க, புரியல...''

''ம், இது என்ன?''

''சாவி.''

''அதுதான் எந்தச் சாவி?''

''தோட்டத்து வீட்டுச் சாவி. ஓ ஸாரி...''

''உன்ன இத எடுத்துட்டு வரச்சொல்லி நான் போன் பண்ணி எவ்வளவு நேரமாச்சு?''

''ஸாரிங்க...''

''என்னடி ஸாரி?''

''கல்யாணம் பண்ணிக்கிட்டுக் குடும்பம் நடத்தறதுன்னா என்னன்னு நினைச்ச? ஜாலியா சிரிச்சுக்கிட்டு, யாராவது செஞ்சு வெச்சாத் தின்னுட்டு, நினைச்ச நேரத்துக்கு ஊர் சுத்திட்டு இருக்கறதுன்னு நினைச்சுட்டியா?''

..........

''யோசிக்காம பெரிய தப்புப் பண்ணிட்டேனோன்னு இப்ப பயமா இருக்கு. எப்படி இனி நாட்களத் தள்ளப் போறேனோ? ஆனா அதப்பத்தி இனி யோசிச்சுப் பலனில்ல. மீதியிருக்கற ஒரே வழி இந்தக் குடும்பத்துக்கு ஏத்த மாதிரி நீ மாத்றதுதான்.''

பேசுவதையெல்லாம் பேசிவிட்டுக் கணவன் சாவியுடன் சென்று விட்டிருக்க, அப்படியே சிலை போல நின்று விட்டிருந்தாள் வசுமதி.

என்ன வார்த்தை சொல்லிவிட்டான்.

சொன்ன வேலையைச் செய்ய மறந்தது தவறு. இல்லை, பெரிய தவறு தான். அதற்காக இந்த அளவிற்குப் பேச வேண்டுமா என்ன?

அதிலும் யோசிக்காமல் தவறு செய்து விட்டானோ என்று இப்பொழுது பயமாக இருக்கிறதாமே! இனி எப்படி மீதி நாட்களைத் தள்ளுவதென்றும் கூட.

கண்கள் அதன் பாட்டிற்குக் கலங்கத் தொடங்கியிருக்க, முயன்று அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

வேண்டாம், மனமே! வேண்டாம்.

என்னதான் கோபத்தில் சற்று மிகைப்படுத்தியே பேசி விட்டிருந்தான் என்றாலும் கணவன் சொன்னது அனைத்துமே நியாயமானவற்றைத் தான்.

நாம் தான் இந்தக் குடும்பத்திற்குத் தகுந்தாற் போல நம்மை முழுவதுமாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

அதற்காக எந்த அளவிற்குச் சிரமப்பட நேர்ந்தாலும் சரிதான்.

தேவையான பொருட்களைத் தோட்டத்து வீட்டிற்குள்ளிருந்து எடுத்துக் கொண்டதும், மீண்டும் வீட்டைப் பூட்டிச் சாவியை பாக்கெட்டில் போட்டுக் கொண்டான் ஹரிவரதன்.

தான் இன்றைக்கு அவசியமில்லாமல் கோபப் படுகிறோமோ என்று நினைத்தவன் உடனே அப்படியெல்லாம் இல்லையென்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

அப்படியென்ன மனைவியைத் தோட்டத்திற்குள் இறங்கி வேகாத வெயிலில் பாடுபடவா சொன்னோம்.



வீட்டையும், வீட்டு வேலைகளையும் மட்டும் தானே பார்த்துக் கொள்ளச் சொல்கிறோம். அதிலும் கூடப் பெரும்பான்மை வேலைகளைத் தனது தாய் செய்து விடுவதும் அவன் அறியாததல்ல.

இப்பொழுதும் கூட மதுமதிக்குத் திருமணமென்று ஆகாமல் வீட்டிலிருந்திருந்தால் எந்தப் பிரச்சனையுமே இல்லை, அனைத்து வீட்டு வேலைகளையும் தண்ணீர் படாத பாடாக அவளே பார்த்துக் கொண்டு இருந்திருப்பாள்.

ஆனால் இப்பொழுது தான் அவள் திருமணமாகிப் புகுந்த வீடு சென்றாயிற்றே. இனி தனது மனைவியைத் தவிர வேறு யார் வந்து செய்வார்கள்.

எல்லாம் சரிதான். அவளும் ஒன்றும் என்னால் செய்ய முடியாதென்று சொல்லிவிடவில்லையே. பழக்கமில்லாத வேலைகள் என்பதால் செய்ய சற்றுச் சிரமப்படுகிறாள். அவ்வளவே.

அதற்கு நாம்தான் சற்றுப் பொறுமையாக, அவளுக்குப் புரியும் விதமாக எடுத்துச் சொல்லியிருக்க வேண்டுமென்று நியாயம் பேசிய மனச்சாட்சியை ஒரு தட்டுத் தட்டி அடக்கினான்.

என்ன பெரிய நியாயம்!

நம் கணவனைச் சுத்தமாக மதிக்காத பிறந்த வீட்டுச் சொந்தங்களுடன் அளவாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதைக் கூட அவளால் புரிந்து நடந்து கொள்ள முடியவில்லையே.

அதிலும் இன்று காலையிலிருந்து எந்த அளவிற்கு விழுந்து விழுந்து பேசிக் கொண்டிருக்கிறாள்.

ஏன் அதே தந்தையிடம் ஏன் எனது நாத்தனாரின் திரு மணத்திற்கு வரவில்லையென்று கேட்க வேண்டியது தானே.

திருமணத்தன்று கேட்பவர்களுக்கெல்லாம் பதில் சொல்ல முடியாமல் எப்படியெல்லாம் சிரமப்பட நேர்ந்தது.

அதிலும் தனது தாயும் தந்தையும் பட்ட சிரமம் கொஞ்சநஞ்சமா?

ஏன் இந்த நிமிடம் வரையும் கூடத் தனது முகத்திற் காகப் பார்த்துக் கொண்டு தானே எதையும் கேட்காமல் பெருந்தன்மையுடன் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

அப்படி எதையும் கேட்காமல் இருப்பது மட்டுமா, ஒரு சிறு முகக் கோணல் கூட இல்லாமல் தனது மனைவியை எந்த அளவிற்குப் பார்த்துக் கொள்கிறார்கள்.

ஒருவேளை அனைவருமே அப்படிப் பெருந்தன்மை யாக நடந்து கொள்வதால் தான் மனைவிக்கும் அவ ளுடைய பிறந்த வீட்டு மனிதர்களின் தவறு புரியவில் லையோ என்னவோ!

அதிலும் தன்னை எந்த அளவிற்குக் கேவலமாக நினைத்து விட்டார்கள்.

தான் ஏதோ இவர்களுடைய வீட்டுப் பெண்ணை மயக்கித் தன்னைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று சொல்ல வைத்து விட்டதைப் போலல் லவா நடந்து கொள்கிறார்கள்! முக்கியமாக மனைவியின் தந்தை.

இருந்திருந்து தன்னைப் போய் எப்படி மற்றவர்கள் அப்படி நினைக்கலாம்.



இவர்களுக்கு வேண்டுமானால் பணம் பெரிதாக இருக் கலாம். அதற்காக அனைவருக்குமே அப்படித் தானென்று ஆகி விடுமாமா?

சரி. அப்படித்தான் அவர்களுடைய கணக்குப்படியே வைத்துக் கொண்டாலும் கூட இனி வருகிற நாட்களில் தான் அவர்களை விடவும் அதிகமாகச் சம்பாதித்து விட் டால் பிறகு தான் சொல்கிறபடியெல்லாம் ஆடுவார் களாமா?

நிச்சயம் சம்பாதிக்கத்தானே போகிறோம், அதையும் தான் பார்த்து விடுவோமே என்று ஏளனமாகச் சிரித்துக் கொண்டான் ஹரிவரதன்.

அதே நேரம் தனது மொபைல் ஒலிக்க அட்டெண்ட் செய்து காதில் வைத்தான்.

''சொல்லுங்க மேடம்.''

......

''இங்க எல்லாரும் நல்லார்க்கோம். அங்க நீ, மாப்ள, உன் புகுந்த வீட்டுச் சொந்தங்கள் எல்லாரும் நலமா?''

..........

''நான் தோட்டத்துக்குள்ள இருக்கேம்மா. அப்படித்தான் எங்கிட்டயே சொல்றது. இல்ல கண்டிப்பா உன் அண்ணி கிட்டயே தான் சொல்லியாகணுமா?''

..........

''ஓ, அப்படியா?''

.........

''இல்லில்ல. எனக்கெல்லாம் தெரியும். நீ ஏற்கெனவே கூப்புட்டு விஷ் பண்ணியிருப்பேன்னு நினைச்சு தான்

அப்படிக் கேட்டேன். ஒன்னு பண்ணுமா. நான் வீட்டுக் குப் போக இன்னும் எவ்வளவு நேரமாகும்ன்னு தெரியல. நீ வேணும்னா வசுவோட மொபைலுக்கே கூப்புட்டுப் பேசிக்கோயேன்.''

''சரிதான், பாக்கலாம்,'' என்று புன்னகையுடன் அழைப்பை கட் செய்தான் ஹரிவரதன்.

அன்று தனது மனைவியின் பிறந்த நாள் என்பதே அப்பொழுது அவனுடைய தங்கை மதுமதி சொல்லித் தான் அவனுக்குத் தெரிந்தது.

ஓ அதனால் தான் என்றும் இல்லாத வழக்கமாக இன் றைக்கு மனைவிக்கு அவளுடைய பிறந்த வீட்டிலிருந்து அத்தனை அழைப்புகளா?

ஏன் தனது மனைவி தன்னிடமும் தான் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் ஆகாதாமா என்று எரிச்சலுடன் நினைக்கத் தோன்றியது ஹரிவரதனுக்கு.

வேலைகள் அனைத்தையும் முடித்துக் கொண்டு அவன் வீடு திரும்பிய பொழுது மணி இரவு எட்டுக்கு மேல் ஆகியிருந்தது.

வீட்டிற்குள் சென்ற சில நிமிடங்களிலேயே தன்னை மனைவி வந்து சாப்பிட அழைக்க, ''குளிச்சுட்டு வந்துட றேன்,'' என்று தங்களுடைய அறையை நோக்கி நடந்தான்.

பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லலாமா என்று தோன்றிய எண்ணத்தை உடனே கை விட்டிருந்தான்.

தெரியாதது போலவே காட்டிக் கொள்வோம். ஏன் அப் படித்தான் அவளே தன்னிடம் சொல்லியிருந்தால் ஆகா தாமா என்று மீண்டும் எரிச்சலுடன் நினைத்துக் கொண் டான்.



குளித்து முடித்து விட்டு வந்து இரவு உணவை முடித்துக் கொண்டு மீண்டும் தங்களுடைய அறைக்குச் சென்றிருந்தவன், வழக்கம் போல கம்ப்யூட்டரில் அவன் இனி வரும் நாட்களில் செய்யப் போகும் ஏற்றுமதி தொடர் பான குறிப்புகளை எடுக்கத் தொடங்கி விட்டிருந்தான்.

அதிலேயே மூழ்கிப் போயிருந்தவன் மீண்டும் நடப் புக்கு வந்த போது மணி பத்தாகியிருந்தது.

மனைவி உள்ளே வருவது தெரிந்தது.

''பால் எடுத்துக்கோங்க.''

''வெச்சுட்டுப் போ.''

''அப்புறம்...''

''என்ன சொல்லு?''

''உங்களுக்கு ஏதோ போன் வந்ததாம். அதப்பத்தி சொல்ல... இல்ல எதுக்குன்னு தெரியல... மாமா உங்கள வரச் சொன்னார்.''

எதற்கு இப்படி மென்று விழுங்குகிறாள் என்று நினைத்துக் கொண்டே, ''சரி, நான் போய்க்கறேன்,'' என்று மீண்டும் தனது வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தான்.

''அப்பா! கூப்டிங்களா?''

''ஆமாம்பா. எக்ஸ்போர்ட் சம்பந்தமா ஏதோ பேச ணும்னு நேத்தே உன்னக் கேட்டு யாரோ.. பேர் கூட...''

''மாதவனா?''

''ம், ஆமாம்பா. அவரேதான். ஸாரிப்பா. நான் வேற சொல்ல லேட் பண்ணிட்டேன். ரொம்ப அவசரமான வேலையா?''

‘‘இல்லப்பா. அதெல்லாம் இல்ல. சரி. நான் காலைல அவங்களுக்குக் கூப்புட்டுக்கறேன்.’’

‘‘அப்புறம் ஹரி...’’

‘‘என்னப்பா, சொல்லுங்க?’’

‘‘பணம் ஒரு ஐம்பதாயிரம் இருந்தாப்...’’

‘‘ஆமாம்பா. எடுத்தே வெச்சுட்டேன். காலைல குடுத் துடட்டுமா.’’

‘‘சரிதான். ஒன்னும் அவசரமில்ல. ஏன் வீட்ல மருமக கிட்டயே சொல்லிக் குடுத்துடு. நான் அவங்கள ஏதோ ஒரு நேரம் வீட்லயே வந்து வாங்கிக்கோங்கன்னு சொல் லிடறேன்.’’

‘‘சரிப்பா,’’ என்று விட்டுத் தங்களுடைய அறைக்கு வந்திருந்தான் ஹரிவரதன்.

# 16



‘‘அம்மா!’’

‘‘என்ன ஹரி?’’

‘‘துணியெல்லாம் துவைக்கணும் போலிருக்கு. இனி வேணும்னா புதுசு தான் எடுத்துப் போடணும். ஏன், இன்னைக்கே புதுசத்தான் போட்டாகணும்...’’

‘‘சரிதான்பா. ஒரு வாரமா என்னால வீட்ல எந்த வேலையை யுமே கவனிக்க முடியல. இன்னைக்குத் துவைச்சுட றேன்.’’



‘‘தோட்டத்துக்குப் போகணும், ஆளுங்க நிறையப் பேர் வர்றாங்கன்னு சொன்னீங்க.’’

‘‘ஆமாம்பா. களையெடுக்கறதுக்கு இருபது பேர் வர்றாங்க. அப்படியே உரமும் வெக்கணும்.’’

‘‘அப்ப நீங்க போய்ப் பக்கத்துல நின்னு பாத்துக்கங்க. வசு துவைச்சுடுவா.’’

‘‘ஆமா அத்தெ, நான் துவைச்சுடறேன்.’’

‘‘நீ துவைப்ப தான். இல்லேன்னு சொல்லல. ஆனா சமையல் மாதிரி சொதப்பிடாத. எப்படித் துவைக்கணும்னு அம்மாகிட்ட கேட்டுட்டு அதன்படி செய்,’’ என்றான் ஹரிவரதன்.

‘‘சரிங்க.’’

கணவன் சொன்னது போலவே அத்தையிடம் கேட்டுக் கொண்டு அவர் சொன்னது போலப் பார்த்துப் பார்த்துத் தான் துணிகளைத் துவைத்திருந்தாள் வசுமதி.

துவைத்து முடிப்பதற்கே அரைநாள் பிடித்திருந்தது.

எப்படித்தான் தனது அத்தை வீட்டு வேலைகள் முதல் தோட்டத்து வேலைகள் வரை அனைத்தையுமே அவ்வளவு அனாயசமாகச் செய்கிறார்களோ என்று ஆச் சரியமாகக் கூட இருந்தது.

அப்படி அனைத்தையும் பார்த்துக் கொண்டும் கூட எந்த அளவிற்குச் சிரித்த முகத்துடன் நடந்து கொள் கிறார்கள் என்றும்.

‘‘வசு!’’

‘‘அத்தெ, சொல்லுங்க.’’

''இப்பத் தோட்டத்துக்கு மாமா போயிட்டாரு. அத னால நான் இன்னைக்கு சமையல் வேலைகளையெல் லாம் முடிச்சு வெச்சுட்டே போய் உங்க மாமாவ அனுப் பிடறேன், பாவம் அவருக்கும் வெளி வேலைகள் நிறைய இருக்குன்னு சொல்லிட்டிருந்தார்.''

''சரி அத்தெ.''

''உன் வீட்டுக்காரரும் ஏதோ பிஸினஸ் விஷயமா இன் னைக்கு வெளிய ஒரு வேலையிருக்குன்னு சொல்லிட் டிருந்தார். அதனால மஞ்சரி ஸ்கூல் முடிச்சு வர்ற வரைக் கும் நீ வீட்ல தனியா தான் இருக்கணும்.''

''சரி அத்தெ. இருந்துக்கறேன்.''

''அம்மா!''

''வா ரிஷி, இப்பதான் எழுந்தியா?''

''ஆமாம்மா, காஃபி கிடைக்குமா?''

''இதோ ரெண்டு நிமிஷம்,'' என்ற தாயிடம், ''சரி சரி. மெதுவாவே போடுங்க,'' என்றவன், ''குட்மார்னிங் அண்ணி!'' என்றான்.

அதற்குத் தானும் புன்னகையுடன் பதில் சொன்ன வசுமதி, ''ரொம்ப பிஸியா இருப்பீங்க போலிருக்கு?'' என்று கேட்டாள்.

''அதையேன் அண்ணி கேக்கறீங்க? ஐயாவோட ரேஞ்ஜ் என்ன, அப்பிடி என்னப் போய் தென்னந்தோப்புக்கு உரம் வைக்கச் சொல்லிட்டாங்க அண்ணி.''

பாவமாகப் புலம்பிய மகனிடம், ''இந்தாப்பா காபி, எடுத்துக்கோ,'' என்று கொண்டு வந்து கொடுத்த



பத்மாவதி, ''இல்லேன்னா மட்டும் என்னடா பண்ணி யிருக்கப் போற, எங்காவது ஊர் சுத்திட்டு இருந்திருப்ப,'' என்றார்.

''அம்மா, வேண்டாம்.''

''என்னடா வேண்டாம்? உங்கண்ணன் பட்ற கஷ்டம் தெரியுமாடா உனக்கு? மதுவோட கல்யாணத்துக்கு அஞ்சு லட்சம் ரூபா செலவாயிருக்கு. கல்யாணம் தான் திடீர்னு முடிவானதாச்சே. கைல பணத்தத் தயாராவா வெச்சிருந் தோம். ஹரி அவனோட தொழிலுக்குன்னு இத்தன நாளா சேத்து வெச்சிருந்த பணம் எல்லாத்தையும் கூட எடுத்து உள்ள போட்டுட்டான்.

''இல்லன்னா இவ்வளவு சுலபமா கல்யாணம் முடிஞ் சிருக்கும்னா நினைக்கற?''

இவ்வளவு செலவுகளுக்கும் மத்தியில் தனக்காக வேறு கணவன் ஒரு லட்சத்துக்குப் பக்கம் செலவு செய் தானே, அதுவும் பாவம் அவன் தொழிலுக்காகச் சேர்த்து வைத்திருந்த பணம் தானோ என்று மனதிற்குள் ஆதங் கத்துடன் நினைத்துக் கொண்டாள் வசுமதி.

நாத்தனார் மதுமதிக்குத் துணி, நகைகள் பண்ட பாத் திரங்கள் எனச் சீர் முறையாக அனைத்தையும் சக்திக்கும் மீறிச் செய்து அனுப்பி வைத்தது தான் நினைவிற்கு வந்தது.

ஆனால் தான் அப்படிக் கொண்டு வந்திருக்கா விட் டாலும் பரவாயில்லை, கணவனுக்கு அல்லவா இன்னும் அதிகமான சுமையை ஏற்றிவிட்டோம்.

ஒருவேளை பணப் பிரச்சனையால் தான் கணவன் பாவம் எரிந்து விழுகிறானோ? இப்படி வெறும் கையுடன்

வந்த மருமகளைக் கூட அனைவரும் தாங்குகிறார்கள் என்றால், அதுவும் சீர் முறைகளையெல்லாம் மிகவும் கணக்காக எதிர்பார்க்கும் இந்த மாதிரி ஒரு கிராமத்தில்.

''அதுக்கு என்ன என்னமா பண்ணச் சொல்றீங்க?''

''ம், தோட்டத்துல வேல செய்யறதையே பெரிய சாதனையா இனிமேல் பேசாதேன்னு சொல்றேன்.''

''க்கும், உங்களுக்கு எப்பவும் உங்க பெரி... ஹரி யண்ணா தான் உசத்தி.''

''என்னடா முனகற? நீயெல்லாம் ஒருவேளை அவன மாதிரி படிச்சிருந்தியின்னா கிராமத்துப் பக்கம் கூட எட்டிப் பாத்திருக்கமாட்ட. ஆனா அவன் தோட்டத்து வேல எதுவானாலும் வினாடி கூடத் தயங்காம பகலெல்லாம் பாடுபடறான். அதுக்கு மேலயும் கிடைக்கற நேரத்தத்தான் அவனோட படிப்பு சம்பந்தமான வேலைக்குப் பயன்படுத்திக்கறான்.

''படிக்கறதுலயும் அப்படித்தான். உன்ன விட்டா படிக்க வெக்கல, என்னப் படிக்க வெக்கலேன்னு வார்த்தைக்கு வார்த்தை எங்களக் குறைதான் சொல்லுவ. ஆனா ஹரிய மட்டும் என்ன நாங்க செலவு பண்ணியா படிக்க வெச்சோம்? அவனே மெரிட்ல தான் அவன் விரும்பினதயெல்லாம் படிச்சுக்கிட்டான்...''

''சரிமா. இனிமேல எதுவும் சொல்லமாட்டேன். விடுங்க. அண்ணா வர்றார் போலிருக்கு. நான் குளிக்கப் போறேன்,'' என்று காபி டம்ளருடன் சென்றே விட்டிருந்தான் ரிஷிவரதன்.

''இவனுக்கு எப்பவுமே இதே கிறுக்குப் புத்திதாம்மா. பாடுபட்றதுக்கு யோசிச்சா அப்புறம் செலவு பண்றதுக்கும் யோசிச்சு தான் ஆகணும்? ஏந்தான் இப்பிடி இருக்கானோ?'' என்று புலம்பியபடி மீண்டும் தனது அடுப்படி வேலைகளைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தார் பத்மாவதி.



தனது அத்தை சொன்னது போலக் காய்களை கட் செய்து கொண்டிருந்த வசுமதி, கிட்டத்தட்ட அதை முடிக்கும் நிலைக்கு வந்திருந்தாள்.

வேலை மும்முரத்தில் இருந்தவள் திடீரென்று தனது முகத்தில் வந்து விழுந்த அந்தத் துணியில் நிமிர்ந்து பார்த்தாள்.

கோபத்துடன் தனக்கெதிரில் கணவன் நின்று கொண்டிருந்தது தெரிந்தது.

''என்னங்க?''

''என்ன இது?''

''துணில இருக்கற அழுக்கு போகணும்னு தான், துணியத் துவைக்கறதே. ஆனா நீ புதுசுபுதுசா கறையப் பண்ணி வெச்சிருக்க?''

அதே நேரம் மருமகளின் கையிலிருந்த, மகன் வீசியெறிந்திருந்த சட்டையை வந்து கையில் வாங்கிப் பார்த்தார் பத்மாவதி.

''சோப்புக்கறைதான் கண்ணா. வேறொன்னுமில்ல. வெறுந்தண்ணில கசக்கினாலே போயிடும்.''

''அதுக்காக இப்ப நான் என்னத்தப் போட்றது? எல்லாத் துணியுமே இதே மாதிரி தான் இருக்கு. சும்மா காட்றதுக்காகத்தான் ஒன்ன மட்டும் எடுத்துட்டு வந்தேன்.''

மருமகளின் கண்களில் தெரிந்த பயம் பத்மாவதியின் கவனத்திலும் படவே செய்தது.

''இன்னைக்கொரு நாளைக்கு எப்பிடியோ சமாளிச்சுக் கோப்...''

''என்னவோ பண்ணுங்க. சை! வரவர சொந்த வீட் லயே நிம்மதியில்லாமப் போயிடுச்சு. எல்லாம் என் தலவிதி.''

இந்தச் சின்ன விஷயத்துக்குப் போய் எதுக்குப்பா பெரிய வார்த்தையெல்லாம் சொல்ற என்ற பத்மாவதி யின் வார்த்தைகள் காற்றில் தான் காணாமல் போனது. எரிச்சலுடன் ஹரிவரதன் அந்த இடத்தை விட்டுச் சென்று வெகு நேரமாகி விட்டிருந்தது.

மருமகளின் கலங்கிய கண்களைப் பார்த்தவருக்கும் என்னவோ போல ஆகி விட்டிருந்தது.

மகனும் தான் கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போனால் என்னவாம் என்று ஆதங்கத்துடன் நினைக்கத் தோன்றியது.

# 17



அதற்குப் பிறகு வந்த நாட்களனைத்துமே கூட சோதனையாகித் தான் போயின வசுமதிக்கு.

எவ்வளவு சிரமப்பட்டுப் பார்த்துப் பார்த்து அனைத்தை யும் செய்தும் கூட, ஏதோ ஒரு வழியில் கணவன் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டே இருந்ததில் மனம் உடைந்து போய் விட்டிருந்தாள்.



ஆனால் அதெல்லாம் சில நிமிடங்கள் தான். அதற்குப் பிறகு வழக்கம் போலத் தன்னைத் தானே தேற்றிக் கொள்வாள்.

பாவம், அத்தையே சொல்வது போலக் கணவனுக்கும் தான் எத்தனை யெத்தனை பிரச்சனைகள் என்று ஆதங் கப்பட்டுக் கொள்வாள்.

ஆனால் இத்தனை நாட்களில் ஒன்று மட்டும் தெளி வாகப் புரிந்திருந்தது.

எந்த விதத்திலுமே கணவன் ஒரு சிறு குறையைக் கூடச் சகித்துக் கொள்ளமாட்டான் என்பதே அது.

ஏன், வீட்டிலிருப்பவர்கள் அனைவருமே தனது கண வனுக்காக யோசித்து எப்பொழுதும் பார்த்துப் பார்த்து நடந்து கொள்வதும் நினைவிற்கு வந்தது.

தன்னிடமும் கூடக் கணவன் தேவையற்று எப்பொழு துமே கடுமையாக நடந்து கொண்டிருக்கவில்லையே.

இத்தனை நாளும் எப்படியோ, இனிமேல் கணவன் தன்னிடம் ஒரு சிறு குறையைக் கூடக் கண்டுபிடித்து விட முடியாத அளவிற்கு மிகவும் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டுமென்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

அன்று செய்ய வேலையொன்றும் இல்லையென்று வீடு முழுவதையும் கூட்டித் துடைத்திருந்தாள் வசுமதி.

ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்தனி அறையென்று பரந்து விரிந்திருந்த அந்த வீட்டைத் துடைப்பதற்குள் ளேயே உஷ் அப்பாடா என்று ஓய்ந்து போய்ச் சிலமுறை அமர்ந்து விட்டிருந்தாள்.

ஒரு வழியாக முயன்று துடைத்தே முடித்திருந்தவள், சிலுசிலுவென்று காற்று வந்த கிணற்றடித் தென்னை மர நிழலில் சென்று அமர்ந்து விட்டிருந்தாள்.

சில நிமிடங்கள் தான் சென்றிருக்கும்.

திடீரென்று கூடத்திலிருந்து ஏதோ சத்தம் வருவதைப் போலிருக்க, ஓடிச்சென்று பார்த்தாள்.

மஞ்சரி கீழே விழுந்து கிடக்க, ''ஐயோ மஞ்சு! என்னாச்சு?'' என்று அவளருகில் ஓடினாள்.

அதற்குள், ''ஒன்னுமில்ல அண்ணி'' என்று எழுந்தே நின்றிருந்தாள் மஞ்சரி.

''என்னமா எப்பிடி விழுந்த? அடி ஏதாவது பட்டுடுச்சா? எங்க பாக்கலாம்,'' என்று பதற்றத்துடன் கேள்வி மேல் கேள்வி கேட்ட வசுமதியைப் பார்த்துச் சிரித்தாள் மஞ்சரி.

''என்னமா?''

''எனக்கு ஒன்னுமே ஆகல அண்ணி. இங்க கீழே தண்ணி சிந்தியிருக்கும் போலிருக்கு. அதப் பாக்காம வேகமா நடந்துட்டேன்.''

''அச்சச்சோ...''

''என்ன அண்ணி?''

''நாந்தான் துடைக்கும் போது தெரியாம சிந்திட்டேன், என்ன மன்னிச்...''

வசுமதி சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. அவ்வளவு நேரமாக அங்கு நின்று அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த ஹரிவரதன் மனைவியின் கன்னத்தில் பளாரென்று ஒரு அறை விட்டிருந்தான்.



''அண்ணா...'' என்று ஏதோ சொல்ல வந்த தங்கையை, ''நீ உள்ளே போ,'' என்று அதட்டி அனுப்பியிருந்தான்.

''என்னடி வீட்ல இருக்கறவங்க எல்லாரையும் கொல்லணும்னே முடிவு பண்ணிட்டியா?''

அதிர்ச்சியுடன் கன்னத்தைப் பிடித்தபடி நின்று விட்டிருந்த வசுமதி, ''ஐயோ! இல்லைங்க,'' என்று அவசரமாகப் பதற்றத்துடன் சொன்னாள்.

''பின்ன மஞ்சரியாகவும் பரவாயில்ல. இதுவே அம்மாவோ, அப்பாவோ தண்ணில கால் வெச்சு வழுக்கி விழுந்திருந்தாங்கன்னா...''

''கடவுளே! நான் பண்ணினது பெரிய தப்பு தானுங்க, என்ன மன்னிச்சுடுங்க.''

''சை! இனிமேல் இப்படி ஏதாவது செஞ்ச அப்புறம் நான் மனுஷனா இருக்க மாட்டேன்!'' என்று கோபத்துடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்திருந்தான் ஹரிவரதன்.

எவ்வளவு நேரம் அதே இடத்தில் அதிர்ச்சியுடன் நின்றிருந்தாளோ, வெளியே யாரோ சிலர் பேசிக் கொள்ளும் குரலில் தான் நடப்பிற்கு வந்திருந்தாள்.

ஏனோ எதற்குமே மனம் வராது போய்விட, பேசாமல் வந்து படுக்கையில் விழுந்திருந்தாள் வசுமதி. விழுந்தவள் அத்தனை நாட்களும் அடக்கி வைத்திருந்ததற்கெல்லாம் கூடச் சேர்த்துக் கதறித் தீர்த்தாள்.

ஏதோ வேலையாகக் கணவன் தங்களுடைய அறைக்கு வந்து சென்றதைக் கூட அவள் அறியவில்லை.

ஏனோ அன்று ஹரிவரதனுக்கும் மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

தனக்கு ஏன் இப்பொழுதெல்லாம் இந்த அளவிற்குக் கோபம் வருகிறதென்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

மனையின் சொந்தங்கள் எப்படியோ போகட்டும், ஆனால் தன்னையே நம்பி ஆசையுடன் தனது கரம் பிடித்தவளைத் தான் நடத்துவது சரியா?

ஏன் இங்கு கிராமத்திலேயே பிறந்து வளர்ந்த (தங்கை) மதுமதியே கூடத் தாயிடம் வேலையில் குறையென்று அவ்வப்பொழுது திட்டு வாங்கிக் கொண்டே அல்லவா இருந்தாள்.

தனது தங்கைக்கே அப்படியென்னும் போது செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் செல்லமாக வளர்ந்திருக்கும் மனைவியின் வேலையில் குறைகள் இருப்பதில் என்ன ஆச்சரியம்.

முடிந்த அளவு இனிமேல் நாமும் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டான் ஹரிவரதன்.

இரண்டு நாட்கள் சென்றிருந்தன.

ஏதோ ஒரு விதத்தில் குற்றம் சொல்லிக் கொண்டாவது இருந்த கணவன், இப்பொழுது சில நாட்களாகத் தன்னைச் சுத்தமாகவே கண்டு கொள்ளாததில் மனம் உடைந்து போய் விட்டிருந்தாள் வசுமதி.

பேசாதது மட்டுமா, பல நாட்களாகத் தான் ஒருத்தி மனைவியாக அந்த வீட்டில் இருப்பது கூட அவனுடைய கவனத்தில் இருப்பதாகத் தெரியவில்லையே.

ஆண்கள் அனைவரும் உணவை முடித்திருக்க, ''சரி. இனி நாம சாப்புட்லாம்மா. மஞ்சுவக் கூட்டிட்டு வா,'' என்று வசுமதியை அனுப்பினார் பத்மாவதி.



அதேநேரம் வாசலில் ஒரு கார் வந்து நிற்க, ''ஒரு நிமிஷம்மா,'' என்று எழுந்து முன்னறைக்கு வந்தார்.

வசுமதியின் அத்தை சுசீலா காரை விட்டு இறங்க, அனைவருமே வரவேற்றனர்.

''வாங்கம்மா.''

''வரலாம் ஹரி. அப்புறம் ரொம்ப பிஸி போலிருக்கு!'' என்று கேட்டுக் கொண்டே வீட்டிற்குள் வந்தார் சுசீலா.

''அப்படியெல்லாம் இல்ல, நீங்க மட்டும் தான் வந்தீங்களா?''

''ஆமாம்பா. டிரைவர் ஃப்ரீயா இருந்தான். அதான் கார எடுக்கச் சொல்லி வந்தேன்.''

''வாங்கக்கா. உள்ள வாங்க!'' என்று பத்மாவதியும் வந்து வரவேற்க, ஆண்கள் மூவரிடமும் சில வினாடிகள் நின்று பேசிவிட்டு அதற்குப் பிறகே உள்ளே வந்தார்.

''வாங்க அத்தெ,'' என்று தானும் வரவேற்றாள் வசுமதி.

''அடடா! மருமகளோட குரலா, நிஜமா நீ இந்த ஊர்ல தான் இருக்கியாம்மா?''

''என்ன அத்தெ உங்களுக்கு இப்பிடியொரு சந்தேகம்?''

''கல்யாணத்துக்கு முன்னாடி கூட ஏதோ மாசத்துக்கொரு முறை போன்லயாவது பேசிட்டிருந்த...''

''என்ன பண்றதுக்கா, உங்க மருமக எனக்கும் மருமகளா வந்த நல்ல நேரம் மதுவுக்குக் கல்யாண யோகம் வந்துடுச்சு.''

''அது சரிதான். வசு தான் ரொம்ப ராசியான பொண்ணாச்சே. இவ பிறந்ததுக்கப்புறம் தான் அண்ணன் தொழில்ல ஆஹா ஓஹோன்னு மேல போனதே.''

''மாமா வரலையா அத்தெ?''

''அவரு ஊர்ல இல்லமா. வெளியூர் போயிருக்கார். வர ரெண்டு நாளாகும்.''

''அப்பிடியா?''

''சரி. வாங்கக்கா, சாப்புடலாம்.''

''இல்ல. நீங்க சாப்புடுங்க...''

''அட வாங்கக்கா!'' என்று மீண்டுமொரு முறை சொன்ன பத்மாவதி, ''இன்னொரு ப்ளேட் வைமா,'' என்று தனது மருமகளைப் பணித்தார்.

சிறிது நேரத்தில் பெண்கள் நால்வரும் சாப்பிட்டு முடிய, பத்மாவதி பேசிக் கொண்டே அனைத்தையும் ஒதுக்கி வைக்கும் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''சரி வா வசு, ஹாலுக்குப் போகலாம்,'' என்று சுசீலா அத்தை அழைக்க, ''ஏம்மா, போ,'' என்றார் பத்மாவதி.

''ஒருவேள நீங்க வேல செய்யும் போது எப்பிடித் தான் போய் உக்கார முடியும்னு தயங்கறாளோ என்னவோ, அப்படியாம்மா?''

''அப்பிடியெல்லாம் இல்ல அத்தெ, அப்பிடிப் பாத்தா எல்லா வேலையுமே இந்த வீட்ல அத்தெ தான் செய் றாங்க...''

''அப்ப வா,'' என்று வசுமதியைத் தனது கையோடு அழைத்துக் கொண்டு ஹாலுக்கு வந்திருந்தார் சுசீலா.

ஆண்கள் அனைவரும் அமர்ந்திருக்க, மனதிற்குள் தயக்கமாக உணர்ந்தாள் வசுமதி.

ஆனால் அப்படி எந்தவொரு தயக்கமும் இல்லாமல் சுசீலா அத்தை சென்று சோஃபாவில் அமர்ந்ததோடு



தன்னையும் அமரச் சொன்னதில் மேலும் ஒரு மாதிரியாக உணர்ந்தாள்.

''ஏம்மா, உக்காரு.''

மாமனார் பரந்தாமனும் சொல்ல உடனே அமர்ந்து விட்டிருந்தாள் வசுமதி.

''நான் வந்த நல்லநேரம் போலிருக்கு ஹரி, நீங்களும் வீட்ல இருக்கீங்க...''

''அட என்னமா நீங்க, இந்த நேரத்துல நான் எப்பவுமே வீட்ல தான் இருப்பேன்.''

''ஏன் வசு, உம் புருஷன அந்தளவுக்கு மிரட்டி வெச் சிருக்கியா?'' என்று புன்னகையுடன் வசுமதியைப் பார்த் துக் கேட்டார். ''ஆனா ஹரிகிட்ட அதெல்லாம் நடக் காதே!'' என்று அதையும் தானே சொல்லிக் கொண்டார்.

''அப்புறம் நீங்க ரெண்டு பேரும் நம்ம வீட்டுக்கு விருந்துச் சாப்பாட்டுக்கு வரணும். அன்னைக்கே அழைக்க வந்திருப்பேன். அதுக்குள்ள மதுவுக்குக் கல்யாணம் முடி வாயிட்டதால தான் அப்புறம் வர முடியாமப் போயிடுச்சு.''

''வர்றோம்மா. நீங்க என்னைக்குன்னு மட்டும் சொல் லுங்க. காலையிலிருந்து மூனு நேரத்துக்குமே அங்கயே வந்துட்றோம்.''

அப்படிச் சொன்ன ஹரிவரதனைப் புன்னகையுடன் பார்த்தவர், ''அடடா, வெறும் வார்த்த தானேன்னு சொல் றீங்களாக்கும். அப்புறம் வசு வராம விடமாட்டா. அதை யும் பாத்துக்கோங்க,'' என்றார் சுசீலா.

''அவ என்ன விட்றது, நானே அவளையும் சேத்து அழைச்சுட்டு வர்றேன்னு தான சொல்லிட்டிருக்கேன்,''

என்றவன், ''நீங்களும் ஒன்ன யோசிச்சுக்கோங்க. வந்து மேல ஒரு ரெண்டு நாளும் தங்கினாலும் தங்கிடுவோம். சொல்றதுக்கில்ல,'' என்றான்.

''நீங்க? அடடா, அப்புறம் உலகம் தலைகீழாயிடும்!'' என்று சுசீலா சிரிக்க,

''சரிதான். அவங்க அப்பிடியே நினைச்சுட்டிருக்கட்டும் வசு, நாம செயல்ல காட்டுவோம்,'' என்று மனைவியைப் பார்த்துச் சொன்னான் ஹரிவரதன்.

''அதையும் பாக்கத் தானே போறேன்,'' என்று ஹரி வரதனையும் வசுமதியையும் புன்னகையுடன் பார்த்துச் சொன்ன சுசீலா, ''நீங்க எல்லாருமே அவசியம் வரணும்,'' என்று அனைவரையும் அழைத்தார். அதே நேரம் ஹாலுக்கு வந்த பத்மாவதியையும்.

''முடிஞ்ச அளவுக்கு வர்றோம்கா. இப்பவே எதயும் சொல்றதுக்கில்ல. தோட்டத்துல வேல தலைக்கு மேல இருக்கு.''

''அதெல்லாம் எப்பவும் இருக்கறது தான்,'' என்றவர், ''வர்ற ஞாயித்துக்கிழம மதியம் அங்க நம்ம வீட்ல தான் எல்லாருக்கும் சாப்பாடு. அவசியம் வந்துடுங்க,'' என்று எழுந்திருந்தார்.

''ஹரியும், வசுவும் நாலு நாள் தங்கற மாதிரியே வர் றேன்னு சொல்லியிருக்காங்க. அதையும் யாரும் மறந்துட வேண்டாம்,'' என்று புன்னகையுடன் மற்றுமொரு முறை சொன்னவர், ''மஞ்சு கிட்டயும் சொல்லிடுங்க பத்மா,'' என்று அனைவரிடமும் சொல்லிக் கொண்டு கிளம் பியே விட்டிருந்தார்.



# 18

அன்று காலையிலிருந்தே அவ்வளவாக வேலையென்று எதுவும் இல்லாததால் மிகவும் போரடித்துப் போய் அமர்ந்து விட்டிருந்தாள் வசுமதி.

மதிய உணவிற்கு யாரும் வராததால் தான் மட்டும் தனியாகத்தான் உண்டு முடித்தாள்.

பிறகு பேசாமல் சென்று படுத்து விட்டிருந்தவள் சிறிது நேரத்தில் அதுவும் பிடிக்காமல் எழுந்து கொண்டாள்.

கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

மூன்று மணி ஆகியிருந்தது.

சென்று கைகால் முகம் கழுவிக் கொண்டு வந்தவள், தோப்பிற்குள் உலவி விட்டு வரலாமென்று வெளியே வந்தாள்.

வீட்டைப் பூட்டிச் சாவியை எப்பொழுதும் வைக்குமிடத்தில் வைத்துவிட்டு அப்படியே வரப்பையே பிடித்துக் கொண்டு நடந்தாள்.

ஏதேதோ எண்ண ஓட்டங்களுடன் வெகுதூரம் வந்து விட்டிருந்தவள் அதற்குப் பிறகு தான் தோப்பு வீட்டருகிலேயே வந்து விட்டிருந்ததைக் கவனித்தாள்.

முதன் முறை கணவனுடன் அங்கு வந்திருந்தது நினைவுக்கு வர, தொண்டைக்குள் உருண்டையாகத் துக்கம் வந்து அடைத்துக் கொண்டதைப் போலிருந்தது.

கணவன் தன்னுடன் சிரித்துப் பேசி, ஏன் அருகில் வந்து கூடப் பல நாட்களுக்கும் மேல் ஆகிவிட்டனவே என்று வேதனையுடன் நினைக்கத் தோன்றியது.

ஏனோ அந்த வினாடியில் உலகத்தில் தனக்கென யாருமே இல்லாததைப் போல, தன்னை உலகமே வெறுத்து ஒதுக்கி விட்டதைப் போலத் தீவிரமாகத் தோன்றிய உணர்வில் துடித்துப் போய் விட்டிருந்தாள்.

தூரத்திலிருந்து ஏதோ சத்தம் வருவதைப் போலி ருக்க, தனக்கு இதே வேலையாகிப் போயிற்று என்று விரக்தியுடன் இலக்கற்று எங்கோ பார்த்தபடி நின்று விட்டிருந்தாள்.

தோப்பின் அழகு, கடும் வெயிலுக்கு இதமாக நிழல், குளுகுளுக் காற்று என எதையுமே உணரமாட்டாதவ ளாய் அப்படியே நின்று விட்டிருந்தாள்.

திடீரென்று தனக்கு அருகிலேயே யாரோ வந்து நின் றதைப் போலத் தோன்றியதில் உடனே திரும்பிப் பார்த்தாள்.

கணவன்!

இவன் எங்கே இந்த நேரத்தில்! வெளியே சென்றுவிட்டு வர இரவு பத்து மணிக்கு மேல் ஆகுமென்று காலையி லேயே சொல்லி விட்டுத் தானே கிளம்பியே இருந்தான்.

அதாவது அத்தையிடம்.

தன் மேல் விழுந்த கணவனின் பார்வையில் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள மிகவும் முயன்று அநியாய மாகத் தோற்றாள்.

''உங்க... சாப்பாடு...''



''நான் சாப்டாச்சு.''

பல நாட்களுக்குப் பிறகு கணவனிடமிருந்து வந்த மென்மையான பதிலில் உண்மையிலேயே தனது காதுகளில் சரியாகத் தான் விழுந்ததா என்று சந்தேகம் வந்து விட்டிருந்தது வசுமதிக்கு.

''ஏன் இந்த நேரத்துக்குத் தோப்புக்குள்ள, ஏதாவது வேலையா?''

''சும்மா தான் வந்தேன்.''

''ஓ, அப்ப வா. தோப்பு வீட்டுக்குள்ளே வந்து உக்காரு.''

''நான் சாவியெடுத்துட்டு வரல.''

''நான் எடுத்துட்டு வந்திருக்கேன்,'' என்றவன் சென்று தோப்பு வீட்டின் கதவைத் திறந்திருந்தான்.

அப்படியானால் வீட்டிற்குச் சென்று பார்த்து விட்டுத் தான் வருகிறானாக்கும்.

''வா, உள்ள வந்து உக்காரு.''

''பரவாயில்ல. நான் இப்பிடியே மெதுவா நடந்து வீட்டுக்குப் போறேன்.''

''ஏன், போய் உடனே செஞ்சாக வேண்டிய முக்கிய மான வேல ஏதும் இருக்கா?''

கணவன் கேட்க இல்லை யென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் வசுமதி.

''பின்ன என்ன?'' என்று கேட்டவன், தான் முதலில் வீட்டிற்குள் சென்றிருந்தான்.

இனியும் இப்படியே நின்று கொண்டிருந்தால் நன்றாக இருக்காதே என்று தோன்ற, தயக்கத்துடன் கால்களைத் தோப்பு வீட்டை நோக்கி எடுத்து வைத்தாள்.

கடவுளே! பேசாமல் வீட்டிலேயே இருந்திருக்கலா மென்று மனம் அதன் பாட்டுக்கு அடித்துக் கொண்டது.

மெதுவாக வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்திருந் தவள், கணவன் கூடத்து அறையில் இல்லாததைக் கவனித்தாள்.

ஆனால் மேலும் இரண்டு அடி எடுத்து வைப்பதற் குள் கணவன் வந்து விட்டிருக்க, வசுமதியும் அப்படியே நின்று விட்டிருந்தாள்.

''வா, உக்காரு,'' என்றவன், ''குடிக்கத் தண்ணி கிடைக் குமா?'' என்று கேட்டான்.

''இதோ...'' என்று வேகமாக உள்ளறைக்குச் சென்றிருந்த மனைவியைத் தானும் பின் தொடர்ந்தான் ஹரிவரதன்.

ஆனால் அதைக் கவனிக்காமல் பானையிலிருந்த நீரைச் செம்பில் எடுத்துக் கொண்டு திரும்பிய வசுமதி கணவனின் மேலேயே மோதிக் கொள்ளப் போனாள்.

ஆனால் அதை உணர்ந்து முன்னரே விலகிக் கொண்டிருந்த ஹரிவரதன் மனைவியின் கையிலிருந்த செம்பு நீரை வாங்கிப் பருகிவிட்டு, அதேபோல மேலும் ஒரு செம்பு நீரையும் எடுத்துக் குடித்திருந்தான்.

திரும்பிச் சற்றுத் தள்ளி நின்றிருந்த மனைவியிடம், ''உனக்கு?'' என்று கேட்டான்.

''இல்ல. வேண்டாம்.''

உடனே செம்பை வைத்துவிட்டுக் கணவன் முன்னறைக் குச் சென்றிருக்க, தானும் தயக்கத்துடன் வெளியே வந்தாள்.

''வா, உக்காரு,'' என்று அழைத்த கணவன் ஏற்கெனவே கட்டிலில் சென்று அமர்ந்திருந்தது தெரிந்தது.



''இல்ல. பரவாயில்ல.''

''வந்து உக்காரு.''

கணவனின் அந்தக் குரலில் உடனே சென்று அமர்ந்து விட்டிருந்தாள் வசுமதி.

''ஏன்டா இவனக் கல்யாணம் பண்ணிக்கிட்டோம்னு இருக்கில்ல?''

திடீரென்று கணவன் அப்படிக் கேட்பானென்று வசுமதி கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அந்த வினாடியே கண்கள் கலங்கி விட்டிருக்க, மடியி லிருந்த தனது கை விரல்களைப் பார்த்தபடி அமர்ந்து விட்டிருந்தாள்.

''என்ன, அப்பிடித்தான?''

''ஐயோ! இல்ல...'' என்றவளுக்கு இப்பொழுது அழு கையே வந்து விட்டிருந்தது.

மனைவியின் அழுகை அவனையும் என்னவோ செய்திருந்தது.

அதற்குப் பிறகு சில வினாடிகள் அமைதியாகக் கழிந்தன.

''நான் உன்ன ரொம்பவும் கஷ்டப்படுத்திட்டிருக்கேன் இல்ல?'' என்று கேட்ட கணவனை நிமிர்ந்து பார்த்தவள், இல்லை என்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

''சும்மா சொல்லாத...''

''அப்பிடியெல்லாம் ஒன்னுமில்ல.''

''வசு...'' என்று மனைவியை நெருங்கியிருந்த ஹரி வரதன், உடனே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ''வா,'' என்று மனைவியுடன் வெளியே வந்திருந்தான்.

என்னவென்று புரியாவிட்டாலும் கணவனுடன் நடந்தாள் வசுமதி.

இருவரும் நேராக வீட்டிற்கு வந்திருக்க, மனைவியிடம், ''கிளம்பு. வெளிய போய்ட்டு வரலாம்,'' என்றான்.

''அதுக்கு முன்னாடி எனக்கு ஒரு கப் டீ கிடைக்குமா?''

சரியென்று நகரப் போனவளிடம், ''உனக்கும் சேத்து எடுத்துட்டு வா,'' என்றான்.

மீண்டும் சரி என்பதைப் போலத் தலையை ஆட்டிவிட்டு நகர்ந்தாள் வசுமதி.

டீ குடித்து முடித்ததும், ''சரி. இனி நீ போய்க் கிளம்பு,'' என்றான்.

''எங்க போ...''

''வெளிய எங்காவது போய்ட்டு வரலாம். நல்ல சேலையாப் பாத்துக் கட்டிக்கோ.''

''சரி'' என்று தயக்கத்துடன் சொன்ன மனைவியிடம், ''குளிக்கறதா இருந்தாலும் குளிச்சுட்டே டிரஸ் சேஞ்ச் பண்ணிக்கோ,'' என்றான்.

கணவன் சொன்னது போலச் சென்று குளித்து விட்டே வந்திருந்தாள் வசுமதி.

கணவன் சொல்லியிருந்த நேரத்தை விடவும் அதிகமாகவே ஆகி விட்டிருந்ததில், பயத்துடன் வேகமாகக் கிளம்பத் தொடங்கியிருந்தாள்.

புது காட்டன் சேலை என்பதால் அவசரம் புரியாமல் மக்கர் செய்தது.

பலமுறை முயன்றும் மடிப்பு சரியாக வராமல் போய் விட்டிருந்ததில், மேலே தொடர்ந்து எதையும் செய்யத்



தோன்றாமல் சில வினாடிகள் அப்படியே நின்று விட்டிருந்தாள்.

சரிதானென்று பிறகு மீண்டும் முயன்றாள்.

அதேநேரம், ''என்ன ரெடியா?'' என்று கணவன் உள்ளேயே வந்துவிட்டிருக்க, உதட்டைக் கடித்துப் படபடப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டவள் கணவனுக்கு முதுகைக் காட்டியபடி திரும்பி நின்றுவிட்டிருந்தாள்.

''உன்னத்தான்!'' என்று அருகில் கேட்ட கணவனின் குரலில் உடல் விரைத்துப் போனாள்.

''இன்னுமொரு அஞ்சு நிமிஷம் ப்ளீஸ்...'' என்று மனைவியிடமிருந்து வந்த மெல்லிய கெஞ்சல் குரலில், ''சரி வா,'' என்று வெளியே சென்று விட்டிருந்தான் ஹரிவரதன்.

ஒரு வழியாக மேலும் ஐந்து நிமிடங்களில் கிளம்பி வெளியிலேயே வந்திருந்தாள் வசுமதி.

''என்ன கிளம்பலாமா?''

கணவன் கேட்க, சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

சில வினாடிகளில் இருவரும் வெளியே வந்திருக்க, வீட்டைப் பூட்டிச் சாவியை எப்பொழுதும் வைக்குமிடத்தில் வைத்துவிட்டுத் திரும்பினான் ஹரிவரதன்.

நேராகச் சென்ற கணவன் பைக்கில் ஏறி அமர்ந்து ஸ்டார்ட் செய்திருக்க, தானும் அருகில் சென்றிருந்தாள் வசுமதி.

''உக்காரு.''

தயக்கத்துடன் சில வினாடிகள் பார்த்தவள் உடனே ஏறி அமர்ந்து விட்டிருந்தாள்.

அன்று கோவிலுக்குச் செல்லும் போது ஒருமுறை கணவன் சொன்னது நினைவிற்கு வர, முடிந்த அளவு ஒட்டாமல் அமர்ந்து கொண்டாள்.

ஆனாலும் விழுந்துவிடுவோமோ என்ற பயத்தில் நெஞ்சு தடக்தடக்கென்று அடித்துக் கொள்ள அப்படியே தனக்குப் பின்பக்கமாக இருந்த இரும்புக் கம்பியைப் பிடித்துக் கொண்டாள்.

சிறிது தூரம் தான் சென்றிருப்பார்கள். மனைவியின் நிலை புரிந்து ஹரிவரதனும் கவனத்துடன் மெதுவாகத் தான் ஓட்டிச் சென்றான்.

ஆனாலும் பைக் ஒரு குழியில் இறங்கி மேலே ஏறியதில் பயந்து நடுங்கிக் கணவனை இறுகப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தாள் வசுமதி.

பைக்கை ஓட்டியவாறே சற்றே திரும்பியவன், எவ் வளவு பாத்து மெதுவா கவனமா ஓட்டினாலும் கொஞ்ச தூரத்துக்கு ரோடு மோசம். அதனால நல்லாப் புடிச் சுக்கோ என்று அழுத்திச் சொன்னான்.

அவன் சொல்லியிருக்க வேண்டியதே இல்லை. அந்த அளவிற்குப் பயத்தில் ஏற்கெனவே கணவனை இறுகப் பிடித்தக் கொண்டு தான் அமர்ந்திருந்தாள் வசுமதி.

நெடுஞ்சாலைக்கு வந்துவிட்ட பிறகும் கூட ஏனோ இடைவெளி விட்டுத் தள்ளி அமர அவளால் முடிந் திருக்கவில்லை.

அந்த அளவிற்குக் கணவனின் அருகாமை அவளை என்னென்னவோ செய்தது.

அதேபோலக் கணவனும் தனக்குள் அதைத்தான் விரும் புகிறான் என்பதையும் அவள் அறிந்திருக்கவில்லை.



தொடர்ந்து வந்த ஒரு மணி நேரத்தில் வந்து சேர்ந் திருந்த ஹரிவரதன், பைக்கை ஒரு இடத்தில் நிறுத்தி னான்.

வசுமதி முதலில் இறங்கிக் கொள்ள, மனைவியைத் தொடர்ந்து அவனும் இறங்கிக் கொண்டான்.

''கொஞ்ச தூரம் நடக்கணும். வா,'' என்ற கணவனைத் தானும் பின் தொடர்ந்தாள்.

நினைத்தது போல அரை மணி நேரத்தில் தனது வேலை முடிய, மீண்டும் மனைவியுடன் பைக்கில் புறப்பட் டிருந்தான்.

அதற்குப் பிறகு நேராக அவர்கள் சென்றடைந்திருந்த இடம் ஒரு சினிமா தியேட்டர்.

''என்ன, சினிமா பாக்கலாமா?''

கணவன் கேட்கப் புன்னகையுடன் தலையை ஆட்டி னாள் வசுமதி.

''ஒரு நிமிஷம் வந்து இங்க நில்லு,'' என்றவன், சொன்னது போல மனைவி விருப்பப்பட்ட படத்திற்கான டிக்கெட்டுடன் திரும்பி வந்திருந்தான்.

அடுத்து பத்து நிமிடங்களில் இருவரும் படம் பார்க்கத் தியேட்டருக்குள் சென்று அமர்ந்திருந்தார்கள்.

பாக்ஸில், அதிலும் கடைசி இருக்கையில் தான் அவர்களுக்கு இடமும் கிடைத்திருந்தது.

கணவனோடு தோளோடு தோள் உரசி அமர நேர்ந்தது அவளை என்னவோ செய்திருந்தது.

சிறிது நேரத்தில் படம் ஆரம்பமாகியிருக்க, யாருடைய கவனத்தையும் ஈர்க்காதவாறு மனைவியின் வலது

கையை எடுத்துத் தனது மடியில் வைத்துக் கொண்டு விட்டிருந்தான் ஹரிவரதன்.

கணவனின் தொடுகையில் உடல் சிலிர்த்துப் போனாள் வசுமதி.

முதலில் கையை இழுத்துக் கொள்ள நினைத்தவள், பிறகு மேலும் வாகாகக் கணவனுக்குக் கையைக் கொடுத்துவிட்டு மேலும் அவனை நெருங்கி அமர்ந்து கொண்டாள்.

ஒருவித மயக்கத்தில் இருவருடைய உள்ளங்களுமே படபடவென்று அடித்துக் கொண்டன. அதிலும் வசுமதிக்குக் கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

போகப் போகக் கணவனின் கை விரல்கள் தனது விரல்களோடு பிணைந்து கொள்ள கொஞ்சம் கொஞ்சமாக வசுமதியின் மனம் தன் வசம் இழக்கத் தொடங்கி விட்டிருந்தது.

இடைவேளை வர, மனைவி ஆசைப்பட்டது போல ஐஸ்க்ரீம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான்.

''உனக்குப் புடிச்ச பிராண்ட் இல்லமா.''

''பரவாயில்ல, உங்களுக்கு?''

''ஏன் நீ பாதி தர மாட்டியா?''

கணவனின் அந்தப் பார்வையில் குப்பென முகம் சூடாகி விட்டதோடு, குங்கும நிறமும் கொண்டு விட்டிருந்தது.

சொன்னது போலத் தான் பாதி சாப்பிட்டிருந்ததை வாங்கிக் கணவனும் கொஞ்சம் ருசித்து விட்டுத் தந்ததில், என்ன முயன்றும் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள வசுமதியால் முடிந்திருக்கவில்லை.



அதற்குப் பிறகு படம் பார்த்த மாதிரி தான்.

''என்ன படம் எப்பிடியிருக்கு?'' என்று கணவன் காதருகே வந்து கேட்டதில், சிரிப்பு தான் வந்தது வசுமதிக்கு.

அப்படியானால் இவ்வளவு நேரமும் தான் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்ததாகவா நினைத்துக் கொண்டிருக்கிறான்.

ஆனால் கணவனின் புன்னகையில் அவன் வேண்டுமென்றே சீண்டுகிறான் என்பது புரிந்தது.

போகப் போக அப்படியே கணவனின் கையை இறுகப் பிடித்து அவன் மேலேயே இதமாகச் சாய்ந்து கொண்டு விட்டிருந்தாள் வசுமதி.

பாக்ஸில் கூட்டம் மிகவும் குறைவாக இருந்ததோடு, அவர்களுடைய வரிசையில் யாருமே இல்லாதிருந்தது வேறு அவர்களுக்கு மிகவும் வசதியாகப் போயிற்று.

அவர்களுக்கு நேர் கீழே இரண்டாவது வரிசையில் மட்டுமே இருவர் அமர்ந்திருக்க, அவர்களோ வெகு மும்முரமாக சினிமாவிற்குள் மூழ்கிப் போய் விட்டிருந்தது தெரிந்தது.

ஒரு வழியாகப் படம் முடிய, மனமே இல்லாமல் இருவரும் எழுந்தார்கள். முக்கியமாக வசுமதி.

இப்படியே கணவனுடைய தோளில் சாய்ந்து கொண்டே இருக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று அவளுடைய மனம் ஏங்கியது.

அடுத்ததாக ஹரிவரதன் மனைவியை அழைத்துச் சென்ற இடம் - ஒரு சுகாதாரமான பெரிய ஹோட்டல்.

ஏதோ ஒரு இன்ப மயக்கத்தில் இருவருக்குமே பேசத் தோன்றவில்லை. அப்படியே ஒருவருடைய முகத்தை மற்றொருவர் பார்த்துக் கொண்டு அமர்ந்திருப்பதே பெரிய சுகமாகத் தெரிந்தது.

அங்கும் ஏ.சி. அறையைத் தேர்ந்தெடுத்திருந்த தாலோ என்னவோ, அந்தப் பெரிய ஹாலின் ஒரு பக்கத் தில் அவர்கள் மட்டுமே இருந்தார்கள்.

இருவருக்கும் பிடித்த உணவு வந்ததில் உண்டு முடித்தார்கள். ஹோட்டலில் ஒரு பக்கத்திலேயே இருந்த ஸ்வீட் கடையில் தங்கைக்குப் பிடித்த இனிப்பையும், காரத்தையும் வாங்கிக்கொண்டு வந்தான் ஹரிவரதன்.

''கிளம்பலாமா?''

''ம்.''

''என்னடா?''

ஒன்னுமில்ல...

''சரிதான். பாக்கலாம்,'' என்று சிரித்துக் கொண்டே கணவன் பைக்கை ஸ்டார்ட் செய்திருக்க, ஏறி அமர்ந்து கொண்டாள் வசுமதி.

கணவனின் அந்தப் புன்னகையில் சுத்தமாகத் தன் வசம் இழந்து விட்டிருந்தாள் வசுமதி.

எப்படி வீடு வந்து சேர்ந்தார்கள் என்பதை இருவருமே அறியார். முக்கியமாக வசுமதி.

வீட்டிற்கு வந்து இறங்கிய அந்த வினாடியே ஏதோ ஒரு இனம் புரியாத பயம் வந்து நெஞ்சுக் கூட்டை அதிரச் செய்ததில், மனதளவில் துடித்துப் போனாள்.



ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான். கண வனின் அந்தப் பார்வை அவளை மீண்டும் தன் வசம் இழக்கச் செய்யத் தொடங்கி விட்டிருந்தது.

வீட்டிற்குள் வந்த மகனையும், மருமகளையும் பார்த்த பத்மாவதிக்கும் நிம்மதியோடு சிரிப்பும் கூடவே வந் திருந்தது.

ஆனால் அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு, ''சாப்பிடலாம், வாங்க,'' என்று இருவரையும் பொதுவாக அழைத்தார்.

''சாப்டாச்சு அத்தெ,'' என்று முதலில் வாயைத் திறந் திருந்தாள் வசுமதி.

''பால் மட்டும் குடுத்தனுப்புங்கமா, போதும்,'' என்று கணவனும் தங்களுடைய அறையை நோக்கிச் சென்றிருந் ததைக் கண்டாள்.

''ம். எப்பிடியோ ஒரு வழியாக் கீழ இறங்கி வந்துட் டான் போல!'' என்ற அத்தையைப் புரியாமல் பார்த்தாள் வசுமதி.

உடனே, ''பாவம்மா. அவனுக்கும் எத்தனையோ டென் ஷன்!'' என்றவர், ''நீயும் அநியாயத்துக்கு நல்ல பொண்ணா இருக்கியே, அது இன்னொரு ப்ளஸ் பாயிண்ட்!'' என்று சிரித்து விட்டுப் போனார்.

தனது அத்தை ஏதேதோ சொல்ல அதில் எதுவுமே புரிந்திருக்கவில்லை வசுமதிக்கு.

அப்பொழுதிருந்த மனநிலையில் எதைப் பற்றியுமே யோசிக்கவும் முடிந்திருக்கவில்லை.

தனது அத்தை சொன்னது போலக் கணவனுக்குப் பாலை எடுத்துக் கொண்டவள், தான் வழக்கம் போலக் கொஞ்சம் குடித்துப் பெயர் செய்து விட்டு வந்திருந்தாள்.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள, கால்கள் இரண்டும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டுவிட, சிரமப்பட்டு எட்டு எடுத்து வைத்து நடந்தாள்.

அறைக்குள் வந்தவளுக்குக் கணவன் குளியலறை யில் இருப்பது தெரிந்தது.

முயன்று அந்த சிறிய இடைவெளியில் தன்னைச் சமன்படுத்திக் கொண்டாள்.

வெளியே வந்த கணவன் நேராகச் சென்று அந்த அறையின் கதவை உள்புறமாகத் தாழிட்டு விட்டுவர, அப்படியே சிலை போல நின்று விட்டிருந்தாள் வசுமதி.

அடுத்து மனைவியின் அருகில் வந்திருந்த ஹரிவரதன் அவளுடைய கையிலிருந்த பால் டம்ளரை வாங்கிக் கொண்டான்.

''உனக்கு?''

''நான் குடிச்சாச்சு.''

தியேட்டரில் இருவரும் சேர்ந்து ஒரே ஐஸ்கிரீமைச் சுவைத்தது தான் வசுமதிக்கு அப்பொழுது நினைவிற்கு வந்தது.

ஹரிவரதனுக்கும்.

அதேபோலத் தனது கையிலிருந்த பாலைக் கொஞ்சம் குடித்தவன், மீதியை மனைவிக்குக் கொடுத்தான்.

முகம் இரத்த நிறம் கொண்டுவிட, லேசாக நடுங்கிய கரங்களால் கணவன் கொடுத்த பாலைக் குடிக்கத் தொடங்கினாள் வசுமதி.

அவள் கொஞ்சம் குடித்திருக்க, 'ம்கூம்'. என்று மீதியைத் தான் வாங்கிக் கொண்டான்.



சில வினாடிகளில் சென்று டம்ளரை வைத்துவிட்டு மீண்டும் மனைவியின் அருகில் வந்திருந்தான் ஹரி வரதன்.

''வசு...''

வெட்கத்தில் குனிந்து கொண்டு விட்டிருந்த மனைவி யின் முகத்தைத் தனது கைகளில் மிருதுவாக ஏந்திக் கொண்டவன், அவளுடைய கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

சில வினாடிகள் தான்,

வசுமதியின் கண்கள் ஒருவிதக் கிறக்கத்தில் அப்படியே மூடிக் கொள்ள மனைவியின் முகம் நோக்கிக் குனிந்தான் ஹரிவரதன்.

# 19



அந்த ஞாயிற்றுக் கிழமை ஏற்கெனவே முடிவு செய்திருந்தது போல வசுமதியின் அத்தை சுசீலாவின் வீட்டிற்கு ஹரிவரதனும், வசுமதியும் மதிய விருந்துக்குச் சென்றிருந்தனர்.

இருவரும் வீட்டிற்குள் சென்றபோது ஹாலில் யாரும் தென்படவில்லை.

ஹரிவரதன் அப்படியே ஹால் சோஃபாவில் அமர்ந்து விட, உள்ளே சென்றாள் வசுமதி.

சுசீலா சமையலறையில் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருக்க, ''அத்தை!'' என்று அழைத்துக் கொண்டே அருகில் சென்றாள்.

''வா வசு,'' என்று திரும்பியவர், ''யார் யார் வந்தீங்க?'' என்று கேட்டார்.

''நானும், அவரும்...''

''ஏன் மத்தவங்கெல்லாம்?''

''அத்தையும், மாமாவும் ஏதோ முக்கியமான ஜோலின்னு காலைல நேரத்துலயே எங்கயோ கிளம்பிப் போனாங்க. நாங்க வர்ற வரைக்கும் கூட அவங்க வீடு திரும்பல. மஞ்சு படிச்சுட்டிருக்கா. அவரு தம்பி தோப்புக்குள்ள வேலையா இருந்தார்.''

''எப்பிடியோ யாரும் வரல, அதுதான் விஷயம்.''

''மாமா எங்க அத்தெ?''

''காலைல மில்லுக்குப் போனவர்மா. இப்ப வந்துடு வார்.''

''ஓ, எனக்கு ஏதாவது வேலையிருக்கா அத்தெ?''

''இருமா. ஹரிகிட்டப் பேசிட்டு வந்துட்றேன்,'' என்று தனது அத்தை ஹாலுக்குவர, தானும் அவருடன் வந்தாள் வசுமதி.

''வாங்க ஹரி.''

''வரலாம்மா. எங்க ஸாரக் காணோம்?''

''மில்லுக்குப் போயிருக்கார்ப்பா. இப்ப வந்துடுவார்,'' என்றவர், ''காலைல நேரத்துலயே வந்திருக்கலாமே!'' என்று கேட்டார்.

''நான் அப்பிடித்தான் சொன்னேன், அதாவது வசுவ மட்டும் காலைல நேரத்துலயே கொண்டு வந்துவிட்டுட்டு நான் திரும்பவும் மதியம் வரலாம்னு நினைச்சேன்...''



''ஓ, உன் வீட்டுக்காரர் இல்லாம மேடம் வர முடியாதுன்னு சொல்லிட்டயாக்கும்?'' என்று புன்னகையுடன் திரும்பி வசுமதியைப் பார்த்தவர், ''சரிதான். அதுக்குத் தண்டனையா ஒரு ரெண்டு நாள் இங்க விட்டுட்டுப் போங்க,'' என்று ஹரிவரதனைப் பார்த்தார்.

''உடனே விட்டுட்டு இருக்கறது கஷ்டம்னா நீங்களும் இருங்க,'' என்று மீண்டும் சொன்னார்.

''கஷ்டமா? நிம்மதியா இருப்பேனே.''

''வேண்டாம் ஹரி, அப்புறம் ரெண்டு நாளைக்குச் சோறு கிடைக்காமப் போயிடப் போகுது!'' என்று சுசீலா சொல்ல, ''யோசிக்க வேண்டிய விஷயம் தான்,'' என்று உடனே சொன்னான் ஹரிவரதன்.

''ஹலோ நானென்ன அந்த மாதிரிப் பொண்ணா?'' என்று வசுமதி பொய்க் கோபத்துடன் கணவனைப் பார்க்க, ''இல்லில்ல. அதவிடக் கொஞ்சம் குறைவுதான்,'' என்று பாவமாகப் பெண்கள் இருவரையும் பார்த்துச் சொன்னான் ஹரிவரதன்.

அவனுடைய பாவனையில் சுசீலா நன்றாகவே சிரித்து விட, முயன்று சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் வசுமதி.

''அப்புறம் ஹரி...''

''சொல்லுங்கமா.''

''வசுவோட அப்பா, அண்ணன் பண்றது சரியில்லை தான். அது எனக்கே புரியுது...''

மேலும் என்ன என்பதைப் போல சுசீலாவின் முகத்தையே பார்த்தான் ஹரிவரதன்.

''நான் கேக்கறதுல ஏதாவது தப்பிருந்தா மன்னிச் சுடுங்க...''

''பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்கமா.''

''இல்ல. வர்ற வாரம் நான் ஊருக்குப் போறேன். ஒரே நாள் தான். வசுவ அனுப்ப முடியுமா...''

வசுமதி ஆவலுடன் கணவனின் முகத்தைப் பார்க்க, ''அடுத்த வாரம் தானே, பாக்கலாம்,'' என்று உடனே அந்தப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டிருந்தான் ஹரிவரதன்.

அந்த வினாடியே தானும் நடப்பிற்கு வந்து தனது முகபாவனையைச் சீராக்கிக் கொண்டு விட்டிருந்தாள் வசுமதி.

''சும்மா ஒரு பேச்சுக்குக் கேட்டேன். அவ்வளவுதான். நீங்க ஒண்ணும்...''

''இதுல என்னமா இருக்கு?'' என்று உடனே சொன்ன ஹரிவரதன், ''ஸார் டைமிருக்கும் போது மில்லுக்கு வர முடியுமான்னு கேட்டார். இத விட்டா அதுக்கு ஒரு சான்ஸ் கிடைக்கறது கஷ்டம். நான் போய்ட்டு வந்துட்றேன்,'' என்று எழுந்திருந்தான்.

''ஒரு நிமிஷம் ஹரி. சாப்பிட ஸ்வீட், காரம் தர்றேன்,'' என்று சுசீலா வேகமாக அந்த இடத்தை விட்டு நகர, வேண்டாமென்று தடுத்து விட்டிருந்தான்.

''அப்புறம் லஞ்ச் சாப்புட முடியாதுமா. உடனே வந்துட் றோம்,'' என்று இருவரிடமும் பொதுவாகச் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டிருந்தான் ஹரிவரதன்.

கணவன் கிளம்பியதும், தனது அத்தையுடன் சமைய லறைக்கு வந்து அவருக்குச் சிறுசிறு உதவிகளை செய்து கொடுத்தாள் வசுமதி.



ஏற்கெனவே பெரும்பான்மை சமையல் வேலைகள் முடிந்திருந்தன.

''உங்களுக்குத் தான் சிரமம். இல்லையா அத்தெ?''

''எனக்கென்னமா சிரமம்? எப்பப் பாத்தாலும் எங்க ரெண்டு பேருக்கும் எண்ணெய் வேண்டாம்னு சிம்பிளா சமைச்சு சமைச்சு சமையல்னாலே ஒரு இன்ட்ரஸ்ட் இல்லாமப் போயிடுச்சு. இப்பிடி யாராவது வீட்டுக்கு வரும்போது தான் எனக்கும் சமைக்க இன்ட்ரஸ்ட்டிங்கா இருக்கும்.''

''நீங்க இப்பவும் டெய்லியும் மில்லுக்குப் போய்ட்டு தான் இருக்கீங்களா அத்தெ?''

''முதல் அளவுக்கு இல்லமா. குறைச்சுக்கிட்டேன். அதோட மாமாவும் இப்ப வெளியூர் போறது நிறையக் குறைச்சுக்கிட்டதால நான் கண்டிப்பாப் போய்த்தான் ஆகணுங்கற அவசியமும் இல்ல.

''அதோட உன் வீட்டுக்காரர் எல்லாத்தையும் ஸிஸ்டமேட்டிக்காப் பண்ணிக் குடுத்துட்டதோட, அத அப்பிடியே ஃபாலோ-அப் பண்ணிட்டும் இருக்கறதால எல்லாமே ஸ்மூத்தாப் போயிட்டிருக்கு.''

''ஓ, நீங்க உக்காருங்க அத்தெ. நான் செய்யறேன்.''

''பரவாயில்லமா. அப்புறம் உன் புகுந்த வீட்ல உன்ன நல்லா வெச்சுட்டிருக்காங்களா? நான் கேக்கற கேள்வியே தப்புதான்...''

''எல்லாருமே ரொம்ப நல்ல விதமா தான் பேசிப் பழகறாங்க...''

''ஆனா உன் புருஷன் மட்டும் அப்பிடி இல்ல, இல்லையா?''

அப்படிக் கேட்ட தனது அத்தையைப் புரியாமல் நிமிர்ந்து பார்த்தாள் வசுமதி.

''அச்சச்சோ! நான் ஒன்னும் ஹரிய தப்பு சொல்லலமா. உங்கப்பா நடந்துக்கற விதம் அவருக்குத்தான் நம்பக் கூட முடியாத அளவுக்கு இருக்கும்னு...''

''அது சரிதான் அத்தெ. டாடி என் மேரேஜ் நிச்சயத்து லிருந்தே இங்க அவர் வீட்ல யார் கூடவுமே முகங் கொடுத்துப் பேசலையாம். அதக்கூடப் பேச்சு வாக்குல ஒரே ஒரு முறை அத்தை, அவரோட அம்மா சொன் னாங்க. அவ்வளவுதான்.''

''எல்லாமே எனக்கும் தெரியும்மா. எது எப்பிடியோ உன் நாத்தனார் கல்யாணத்துக்கு உன் அப்பா வராதது ரொம்பப் பெரிய தப்பு...''

அதிலும் திருமணத்தன்று அனைவரும் கேட்கக் கேட்க பதில் சொல்ல முடியாமல் தனது புகுந்த வீட்டுச் சொந்தங்கள் திணறியது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது வசுமதிக்கு.

அந்தக் கோபத்தை மனதிற்குள் வைத்துக் கொண்டு அதற்குப் பிறகு வந்த நாட்களில் கணவன் மிகவும் கடுமை யாக நடந்து கொண்டதும். ஆனால் அதையெல்லாம் வசுமதி வெளியே சொல்லவில்லை.

''உங்கப்பா வரலேன்னாக் கூடத் தப்பில்ல. ஆனா உங்கம்மாவையும் போகக் கூடாதுன்னுட்டாராம். உங்கப் பாவ ஒரு விதத்துல எதுத்துக்கிட்டுத் தான் உங்கம்மா கல்யாணத்துக்கு வந்ததே.''

தனது அத்தை சொன்னதைக் கேட்டவளுக்கு அப்படி அரை மணி நேரம் மட்டும் வந்துவிட்டுப் போனதற்குப் பதிலாக அம்மாவும் வராமலே இருந்திருக்கலாமென்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.



''என்னமா?''

''இல்ல. அப்பிடி வந்தவங்க அட்லீஸ்ட் காலை லிருந்து சாயங்காலம் வரைக்குமாவது எப்பிடியோ இருந்துட்டுப் போயிருக்கலாம். கடைசிக்கு யாரோட கண்ணையும் உறுத்தாமலாவது இருந்திருக்கும்.''

''அது சரிதான்,'' என்று உடனே ஒத்துக் கொண்டார் சுசீலா.

''வீம்பு இருக்க வேண்டியது தான். அதுக்காக இப் பிடியா? உன் புகுந்த வீட்டுச் சொந்தங்களெல்லாம் ரொம்ப நல்ல மாதிரியாகவும் பரவாயில்ல. இல்லன்னா உன் நிலைமையக் கொஞ்சம் நினைச்சுப் பாரு.''

''முக்கியமா அத உன் பெத்தவங்க நினைச்சுப் பாக்கணும்!'' என்று மீண்டும் சொன்னவரைப் பார்த்தாள் வசுமதி.

''சரி. இந்தாமா. நான் பாட்டுக்கு பேசிட்டே இருக்கேன். நீயாவது சாப்பிட ஏதாவது எடுத்துக்கோ...''

''இல்ல அத்தெ. லஞ்ச்சையே ஒரு புடி புடிச்சுக் கறேன்.''

''நீ? சரிதான் பாக்கலாம். அப்புறம் உன் புகுந்த வீட்ல என்ன, மாமாவ எல்லாம் நினைச்சுக்குவாங்களாம்மா? ஏதாவது சொல்வாங்களா?''

''ரொம்ப நல்ல விதம்னு சொல்லிட்டே இருப்பாங்க அத்தெ. அதோட...''

''சொல்லுமா.''

''எங்க கல்யாணத்துக்கு முன்னாடி அவர் அப்பாகிட்ட வேலைக்கு வந்தபோது உங்ககிட்ட பட்ட நன்றிக் கடனத் தீத்துக்கறதுக்கான ஒரு வாய்ப்பாத் தான் அத எடுத்துக் கறதா சொன்னார். ஏன் அப்பிடிச் சொன்னார்னு...''

''ஓ, அப்படியா சொன்னார்?'' என்று கேட்டவர், ''அது ஒன்னுமில்லமா. உன் மாமனாருக்கு ஒரு முறை உடம்புக்கு முடியாமப் போனப்ப உன் மாமா ஒரு ரெண்டு லட்சம் குடுத்து உதவினார். அவங்க வந்து கேக்கவெல்லாம் செய்யல. மாமாவே புரிஞ்சுக்கிட்டுப் போய் ஹாஸ்பிட்டல் பில்லக் கட்டிட்டு வந்தார்.''

''ஓ...''

''ஆனா உன் புகுந்த வீட்ல குறிப்பா உன் வீட்டுக்காரர் அந்தப் பணத்த ஒரு வாரத்துலயே பெரிய நன்றியோட கொண்டு வந்து திருப்பிக் குடுத்துட்டுப் போய்ட்டார். அதுவும் அப்ப ஹரி ஏதோ ஒரு வேலையா வெளியூர் போன சமயம். இல்லன்னா பணத்துக்கு அந்தத் தம்பியே ஏற்பாடும் செஞ்சிருக்கும்...''

''அதனால தான் அப்பிடி சொன்னாரா...''

''அதுக்கு ஒரு ஆறு மாசம் முன்னாடி வரைக்கும் ஹரியும் வந்து நம்ம மில்லத் தான் பாத்துக்கிட்டிருந்தார். சும்மா பேச்சு வாக்குல ஏதேதோ சொல்றாரேன்னு தான் சரி, அதயும் நீங்களே பண்ணிக் குடுங்கன்னு அவர நானும், மாமாவும் கேட்டுக்கிட்டதும். ஆனா அத விடக் கூடப் பிரமாதமா ஏன் நாங்க கொஞ்சங்கூட எதிரே பாக்காத அளவுக்கு ரொம்ப நல்லாப் பண்ணிக் குடுத்தார்.



''ஏன், அவர் சொன்ன மாதிரியே தான் இப்பவும் கூட நிர்வாகம் நடந்துட்டிருக்கு. நல்ல லாபத்துல ஸ்மூத்தாவும் போயிட்டிருக்கு.''

''அடுத்த வாரம் ஊருக்குப் போறீங்களா அத்தெ?''

''ஆமாம்மா. போற ஐடியா இருக்கு, நானும் உங்க வீட்டுக்காரர் கிட்ட ஆழம் பாக்கத்தான் அந்தக் கேள்வியக் கேட்டதும்... ஆனா...

''அவர் உன்ன விட்றது சந்தேகம்னு தான் தோனுது.''

''தெரியும் அத்தெ. ஏன், விடவே மாட்டார்!'' என்றவள் சில வினாடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண்டு, 'சரிதான். போகப் போக எல்லாம் சரியாயிடும்!' என்று சிரித்து வைத்தாள்.

''அது சரிதாம்மா, நீ எக்காரணத்தக் கொண்டும் அவரோட மனசு கோணற மாதிரி நடந்துக்காத.''

''சரி அத்தெ.''

''உன் புகுந்த வீட்ல ஒருத்தரக் கண்ட மாதிரியே எல்லாருமே நல்லவங்க. எதுக்கு இவ்வளவு சொல்றேன்னா உங்க அப்பா நடத்தறது...''

ஏதோ சொல்ல வந்து விட்டுப் பிறகு பாதியில் பேச்சை நிறுத்தி விட்டிருந்த தனது அத்தையைப் பார்த்தாள் வசுமதி.

''சரிமா. நீ விவரமான பொண்ணுங்கறதால உனக்கு இதுக்கு மேல சொல்ல வேண்டிய அவசியமில்ல. இந்தா இதையெல்லாம் கொண்டு போய் டேபிள்மேல வெச்சுட்டு வா.''

சிறிது நேரத்தில் ஆண்கள் இருவரும் வந்து விட்டிருக்க, நால்வரும் ஒன்றாக அமர்ந்து மதிய உணவை எடுத்துக் கொண்டார்கள்.

தான் பரிமாறிவிட்டுப் பிறகு அமர்ந்து கொள்வதாகச் சுசீலா எவ்வளவு சொல்லியும், அதற்குச் சிறியவர்கள் இருவரும் மறுத்து விட்டிருந்தனர்.

உணவு முடிந்து அதற்குமேலும் ஒரு மணிநேரம் கூட இருந்து விட்டு ஹரிவரதனும், வசுமதியும் கிளம்ப, ஒரு நிமிஷம் என்று உள்ளே சென்றார் சுசீலா.

சென்றவர் சில வினாடிகளில் ஒரு தாம்பாளத் தட்டு நிறையத் துணிகள், பணம் என எதையெதையோ எடுத்து வந்தார்.

சிறியவர்கள் இருவரும் புரியாமல் பார்க்க, ''என்னங்க, ஒரு நிமிஷம் வர முடியுமா?' என்று தனது கணவனை அழைத்தார்.

உடனே எழுந்து வந்த கணவனுடன் சேர்ந்து நின்றவர்,''வாங்க. வந்து எங்க சின்ன அன்பளிப்ப ஏத்துக் கோங்க,'' என்று புன்னகையுடன் சிறியவர்களை அழைத்தார்.

''எதுக்கு இதெல்லாம் அத்தெ?'' என்று வசுமதி கேட்க, அதற்குள், ''மன்னிக்கணும்!'' என்று விட்டிருந்தான் ஹரிவரதன்.

புதுமணத் தம்பதியை அந்த அன்பளிப்பை வாங்கிக் கொள்ள வைப்பதற்குள் பெரியவர்கள் இருவரும் ஒரு வழியாகித் தான் போயினர்.

''தனிப்பட்ட முறையில நீங்க ரெண்டு பேருமே எங்களுக்கு ரொம்ப வேண்டியவங்க. அதனால வசுவுக்காக நான் குடுக்கறதா நீங்க நினைச்சுக்க வேண்டாம் ஹரி,'' என்றவர், அதேபோல வசுமதியிடமும், ''ஹரிய எங்களுக்கு அவரோட சின்ன வயசுலிருந்தே தெரியும்.



அப்பிடிப் பாக்கும் போது நாங்க இப்பக் குடுக்கறதெல்லாம் ரொம்பவும் குறைவுதான்,'' என்று உணர்ந்து சொன்னார்.

துணியோடு அவர்கள் வைத்துக் கொடுத்த பணம் சற்றுப் பெரிய தொகையாக இருந்ததில் வசுமதிக்கு எப்படியோ, ஹரிவரதனுக்கு ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

ஆனால் அவர்களுடைய இனத்தில் அப்படி வைத்துக் கொடுப்பதும் வழக்கமே என்பதால், ஒரேயடியாக வேண்டாமென்று மறுத்துவிடவும் அவனால் முடிந்திருக்கவில்லை.

''என்ன ஹரி, ரொம்பவும் யோசிக்கறீங்க.''

''இந்த மாதிரியெல்லாம் சங்கடப்படுத்தினா அப்புறம் நாங்க எப்பிடி தொடர்ந்து ஃப்ரீயா வர முடியும் சொல்லுங்க?''

அப்படிக் கேட்ட ஹரிவரதனை ஆதங்கத்துடன் பார்த்துக் கேட்டார் சுசீலா.

''இப்பிடிக் கேட்டா நாங்களும் தான் என்ன பதில் சொல்ல முடியும். ஏன் இந்த மாதிரி இன்னும் எத்தனையெத்தனையோ மடங்கு எங்க வீட்டுப் பொண்ணுக்காக நாங்க செஞ்சிருக்க வேண்டியது. சரி. அதுக்கெல்லாம் வழியில்லாத அளவுக்கு என்னென்னவோ நடந்துடுச்சு. தயவுசெஞ்சு இதயாவது சகஜமா ஏத்துக்கோங்க. நாங்களும் உங்க ஒருத்தருக்காக யோசிச்சு தான் ஏற்கெனவே ரொம்பக் குறைவா வெச்சுக் குடுத்திருக்கோம்,'' என்றார்.

நாராயணனும் அதையே சொல்ல, வேறு வழியின்றிச் சிறியவர்கள் இருவரும் பெரியவர்களின் ஆசியுடன்

முக்கியமாகச் சிரித்த முகத்துடன் அவர்களுடைய அன்பளிப்பை ஏற்றுக் கொண்டனர்.

வீடு வந்து சேர்ந்ததும், ''உனக்குத் தேவையானத வாங்கிக்கோ,'' என்று அவர்கள் வைத்துக் கொடுத்த பணத்தை மனைவியிடம் கொடுத்து விட்டிருந்தான் ஹரிவரதன்.

அப்போதைக்கு எதையும் பேச வேண்டாமென்று வசுமதியும் வாங்கிக் கொண்டாள்.

கணவனின் சுத்தமாக உணர்ச்சி துடைக்கப்பட்ட முகம் அவளை அவ்வாறு செய்ய வைத்திருந்தது.

# 20



''வசு...''

''அத்தெ, சொல்லுங்க.''

''இன்னைக்கு மதுவும் மாப்பிள்ளையும் வர்றாங்கமா.''

''அப்பிடியா அத்தெ!''

''ஆமாம்மா, மதியச் சாப்பாட்டுக்கு வர்ற மாதிரி வர்றேன்னாங்க.''

''பரவாயில்ல, இன்னைக்கு நானும் மதுவக் கூப்புட்டுப் பேசணும்னு நினைச்சுட்டு தான் இருந்தேன்.''

''ஏன்?''

''ஒரு வாரத்துல வருவேன்னு மது சொல்லி அதுக்கும் மேலயே ஆயிடுச்சு. அதான் அத்தெ.''



''அவ இருக்கும் போது உனக்கும் கொஞ்சம் போரடிக்காம நேரம் போச்சு இல்லையாமா?''

''கொஞ்சமா, அப்புறம் மீதி எங்க போறது அத்தெ?'' என்று உணர்ந்து கேட்டாள் வசுமதி.

''ஓஹோ!'' என்று சிரித்தவர்,''எனக்கொரு உதவி பண்ண முடியுமாம்மா?'' என்று கேட்டார்.

''என்ன அத்தெ? சொல்லுங்க.''

''தோப்புக்குள்ள ஊடு பயிரா முருங்க பயிரிட்டிருக்கோம் தெரியும் தான?''

''ஆமா அத்தெ சொல்லுங்க.''

''கிட்டத்தட்ட நம்ம தோப்பு வீட்டுக்குப் பக்கமே போயிடணும்மா, ஹரியும் அங்க தான் போனான்னு நினைக்கறேன். உனக்கு எட்டினாப் பாரு. இல்லன்னா அவங்கிட்ட சொல்லி இளசா ஒரு நாலஞ்சு முருங்கக்காய் சாம்பாருக்கு வேணும். பறிச்சுட்டு வா. அப்படியே கறிவேப்பிலை, மல்லித் தழை எல்லாமே வேணும்.''

''சரி அத்தெ. இப்பவே போய்ப் பறிச்சுட்டு வந்துடறேன்.''

''மெதுவாவே வா. ஒன்னும் அவசரமில்ல. சமையல் வேலைய இன்னும் ஒரு மணி நேரம் கழிச்சுத் தொடங்கினாப் போதும்.''

''சரி அத்தெ,'' என்று விட்டுக் கிளம்பினாள் வசுமதி.

தோட்டத்து வீட்டைச் சென்றடைந்திருந்தவள் முருங்கை மரத்தைத் தேடினாள்.

தோப்பு வீட்டிற்குப் பக்கவாட்டில் சற்றுத் தள்ளியிருந்த மரம் கண்களில் தட்டுப்பட, பறிப்பதற்காகச் சென்றாள்.

தனது அத்தை சொன்னது போலப் பறித்துக் கொண் டவள், அடுத்ததாகக் கறிவேப்பிலையையும், மல்லித் தழையையும் தேடிப்பிடித்துப் பறித்துக் கொண்டாள்.

கணவனைக் காணவில்லையே என்று யோசித்துக் கொண்டே திரும்பியவள், அவனே தனக்கு முன்பாக வந்து நின்றிருக்க ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''இவ்வளவு நேரமும் எங்க இருந்தீங்க?''

''இங்கயே தான்.''

''சும்மா சொல்லாதீங்க. நான் வந்ததுமே இந்த இடம் முழுக்கத் தேடினேன்.''

''அதயும் கவனிச்சேன்,'' என்றவன் மனைவியின் கையிலிருந்த முருங்கைக்காய்களை வாங்கிக் கீழே போட்டான்.

''ஏன் ஹரி?''

''முத்தலாப் பறிச்சிருக்க!'' என்றவன் சென்று நல்ல காய்களைப் பறித்து வந்து கொடுத்தான்.

''நல்லவேளைங்க. இல்லன்னா இன்னொரு முறை வந்திருக்கணும். முக்கியமா அத்தெ சிரிச்சிருப்பாங்க!'' என்றாள்.

''நீ பறிச்சதும் ஒன்னும் ரொம்ப மோசமில்ல. ஆனாலும் அம்மா யூஸ் பண்ண மாட்டாங்க,'' என்றான்.

''ஆமா உங்க கைல என்ன?''

''என் கைல என்ன?'' என்று கேட்டவன்,பேச்சை மாற்ற முயல, அதற்குள் கணவனின் கையைப் பிடித்துப் பார்த்தாள் வசுமதி.



''என்னங்க இது?''

''எது?''

''இவ்வளவு பெரிய புண், இரத்தமும் நிறைய வந்திருக்கு...''

''அது ஒன்னுமில்லமா...''

''கூலா ஒன்னுமில்லன்னு சொல்றீங்க. ஆனா காயம் இவ்வளவு பெரிசா ஆகியிருக்கு.''

''ஆமாம், என்னவோ கடிச்சிடுச்சு.''

''என்னவோன்னா?''

''தெரியல. பாம்பாக் கூட இருக்கலாம்.''

''ஹரி...''

''ஏய், எதுக்கு இப்பிடிப் பதட்டப்படற?''

''பின்ன, என்னன்னு சொல்லுங்க...''

''அதான் சொன்னேனே...''

''விளையாடாதீங்க.''

''நானெதுக்கு அதுலயும் இந்த மாதிரி விஷயத்துலெல்லாம் விளையாடப் போறேன்,'' என்றவன் கையில் வலி தாங்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டான். அதாவது அப்படிக் காட்டிக் கொண்டான்.

கணவனின் நிலையைப் பார்த்த வசுமதிக்குக் கண்கள் கலங்கி விட்டிருந்தன. ''வாங்க, இப்பவே டாக்டர்கிட்டப் போகலாம். சீக்கிரம்... சீக்கிரம்...'' என்று துரிதப்படுத்தினாள்.

''அவசியமில்ல.''

''ஐயோ ஹரி, தயவுசெஞ்சு சொன்னாக்...'

''சரிதான். விடு.''

''ஏன் கொஞ்சம் பாத்து கோஃபுல்லா வேல செஞ் சிருக்க வேண்டியது தான?''

''நல்லாப் பாத்ததால தான் இந்த வினையே.''

அப்படிச் சொன்ன கணவனைப் புரியாமல் பார்த்தாள் வசுமதி.

''என்ன பாக்கற? உன்னப் பாத்து ரசிச்சுக்கிட்டே தேங்கா மட்டைய இழுத்தேன். அப்பிடியே கைல ஏறிடுச்சு.''

''கடவுளே, கொஞ்சமாவது புத்தியிருக்காடா...''

மேலும் எரிச்சல் கலந்த கோபத்துடன் மனைவி எதையோ சொல்ல வர, ''ஒரு நிமிஷம்,'' என்று அவ ளுடைய கையிலிருந்தவற்றையெல்லாம் வாங்கிக் கீழே வைத்து விட்டு மனைவியைக் கையோடு அழைத்துக் கொண்டு போனான்.

நேராகத் தோப்பு வீட்டிற்குள் சென்றதும், கதவைத் தாழிட்டான்.

''என்ன...''

அதற்கு மேல் மனைவியைப் பேச அவன் விட்டிருக்க வில்லை. ''வசு...'' என்று காற்றுக் கூடப் புக முடியாத அளவிற்கு இறுக அணைத்துக் கொண்டான்.

வெகு நேரம் கழித்து அதுவும் மனமே இல்லாமல் மனைவியை விடுவித்திருந்தவன், 'சரி கிளம்பு,' என்றான்.

''என்ன இன்னைக்கு ஐயா ஜாலி மூட்ல இருப்பீங்க போலிருக்கு!''



மேலும் ஒரு மாதிரியான பார்வையுடன் கணவன் தன்னை நெருங்க, ''அச்சச்சோ! நானில்லப்பா!'' என்று புன்னகையுடன் ஓடியே விட்டிருந்தாள் வசுமதி.

''அத்தெ, இந்தாங்க,'' என்று தோப்பிற்குள்ளிருந்து கொண்டு சென்றதையெல்லாம் சமையலறை ஸ்லேப்பில் வைத்தாள்.

''என்னமா சிரிக்கற?''

தனது அத்தையே கவனித்துக் கேட்டதற்குப் பிறகு தான், நடப்பிற்கு வந்திருந்தாள்.

''ஒன்னுமில்ல அத்தெ,'' என்று அவசரமாகச் சொன் னாள்.

''சரிதான், ஹரி தோப்புக்குள்ள இருக்கானா?''

''ஆமா அத்தெ,'' என்றவள் மிகவும் முயன்றே தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டாள்.

மருமகளின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த பத்மாவதிக்கும் சிரிப்பு வந்து விட்டிருந்தது.

''என்னமா, சொல்லு.''

''அத்தெ ஆயின்மெண்ட் ஏதாவது இருக்குமா?''

''எதுக்கு?''

''தேங்கா மட்ட கிழிச்சு அவருக்குக் கைல புண்ணா யிடுச்சு.''

''ஏன் உன்னப் பாத்துக்கிட்டே வேல செஞ்சானாக் கும்?''

தனது அத்தையின் கேலியில், அதிலும் அவர் நடந் ததை அப்படியே கணித்துக் கேட்டதில் இப்பொழுது

என்ன முயன்றும், வசுமதியால் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஆனால், அதேநேரம் தனது கணவனே வந்து விட்டிருந் ததைக் கண்டாள் வசுமதி.

''ஹரி!''

''என்னமா?''

''கைல காயம் பெரிசா ஆயிடுச்சாப்பா?''

''இல்லமா. சின்னக்காயம் தான்!'' என்று சமையலறைக்கு வந்தவன், ''அதுக்குள்ள பரப்பிட்டயாக்கும்?'' என்று புன்னகையுடன் மனைவியைப் பார்த்தான்.

''அப்புறம் எம்மருமகளப் பத்தி என்னன்னு நினைச்ச?''

''அதுசரி,'' என்றவன், 'குடிக்க சூடா ஏதாவது கிடைக்கு மாம்மா?' என்று சமையலறை ஸ்லேப்பில் சாய்ந்தபடி கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டவாறு நின்று விட்டிருந்தான் ஹரிவரதன்.

''இதோ டீ போட்றேன். தண்ணி வைமா,'' என்று மருமகளிடம் சொன்னவர், ''எங்கப்பா கையக் காட்டு,'' என்று மகனருகில் வந்தார்.

''அடடா! காயம் பெரிசாதான் பட்டிருக்கு,'' என்றவர், ''ஏம்பா பாத்து வேல செய்யறதில்ல?'' என்றார்.

''அது சரிதான். இனிமேல் பாக்காம தான் வேல செய்ய ணும்,'' என்ற கணவனின் வார்த்தைகளில் என்ன முயன் றும் வசுமதியால் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

ஹரிவரதனாலும்.



மகனையும், மருமகளையும் பார்த்த பத்மாவதிக்கும் சிரிப்பு தான் வந்தது.

அவர் ஏதோ சொல்ல வாயைத் திறப்பதற்குள்ளேயே, ''என்னமா இன்னைக்கு உங்க மகளும் மாப்பிள்ளையும் வர்றத நினைச்சு சந்தோஷமா இருக்கீங்க போலிருக்கு!'' என்று கேட்டான்.

''அது சரிதான். ஆனா இன்னைக்கே திரும்பணும்னு சொல்றாங்க ஹரி.''

''சரிதான், விடுங்க. மதுவக் கிளப்பிவிட்டா அவ மாப்பிள்ளகிட்ட இருக்கறதுக்கு சம்மதத்த வாங்கிடப் போறா.''

''வேண்டாம் கண்ணா. அப்புறம் மது பிடிவாதமா நிப்பா. அது நல்லா இருக்காது.''

''ஏம்மா இப்பிடி பயப்பட்றீங்க?''

''ஆமாம்பா. அவ புகுந்த வீட்ல இனி நிலம எந்த மாதிரியோ. அதுலயும் மதுவோட மாமியார் கொஞ்சம் எல்லாத்துலயுமே சரியா இருக்கணும்னு எதிர்பாக்கற வங்க போலிருக்கு.''

''சரிதான். பாக்கலாம். டீ ரெடியா இல்ல...''

''ஆயிடுச்சு கண்ணா,'' என்றவர் சில வினாடிகளில் மூன்று டம்ளர்களில் டீயை ஊற்றினார்.

கணவனுக்கு ஒரு டம்ளரை எடுத்துக் கொடுத்த வசுமதி, தானும் ஒன்றை எடுத்துக் கொண்டாள்.

''டீ ரொம்ப நல்லார்க்குமா!'' என்ற தனது அத் தையைப் புன்னகையுடன் பார்த்தாள்.

''எப்பிடி டீ போட்டுப் பழகிட்ட?'' தனது கணவன் கேட்க, ''ஏன் அவளுக்கென்ன, இப்ப சமையலே நல்லா செய்யறா!'' என்றார் பத்மாவதி.

''சும்மா சொல்லாதீங்கமா.''

''உண்மையா தான் கண்ணா...''

''அப்பிடின்னா இன்னைக்கு வரப்போற மாப்பிள்ளைக்கு வசுவே சமையல் செய்யட்டும். விட்ருங்க. அதுக்கப்புறம் வேணும்னா நீங்க சொல்றத நானும் ஒத்துக்கறேன்.

''அதெல்லாம்...'' என்றவர், ''ஆனா இன்னைக்கு வழக்கமா செய்யற சமையல் இல்லையே. கொஞ்சம் ஸ்பெஷலா செய்யப் போறோம்,'' என்றார்.

''சரி. நான் குளிக்கப் போறேன்,'' என்று டீயைக் குடித்துவிட்டு ஹரிவரதன் சென்று விட்டிருக்க, அதற்குப் பிறகு பெண்கள் இருவரும் மும்முரமாகச் சமையல் வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தனர்.

## 21

ஒரு மணி நேரத்தில் வந்த வீட்டு மாப்பிள்ளையை அனைவரும் சந்தோஷமாக வரவேற்றனர். மதுமதியையும்.

அனைவரும் நலம் விசாரித்துப் பேசுவதில் மும்முரமாக இருக்க, ''வா வசு,'' என்று வசுமதியுடன் உள்ளே வந்திருந்தாள் மதுமதி.



''இங்க நாம உக்காந்து பேசி எவ்வளவு நாளாச்சு?'' என்று கிணற்றடித் திண்ணையில் சென்று அமர்ந்து பேசத் தொடங்கி விட்டிருந்தனர்.

''என்ன வசு?''

''இல்ல, அத்தெ மட்டும் தனியா சமையல் செஞ்சுட்டிருக்காங்க...''

''அதெல்லாம் அவங்களே செஞ்சுக்குவாங்க,'' என்று மதுமதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ''மது, இங்க வாம்மா,'' என்று அழைக்க வந்து விட்டிருந்தார் பத்மாவதி.

''அட என்னமா...'' என்று மதுமதி எழுந்திருக்க, தானும் அவளுடன் சமையலறைக்கு வந்திருந்தாள் வசுமதி.

''என்னமா, சொல்லுங்க,''

''இங்கயே உக்காந்து பேசுங்கமா,'' என்றவர், ''இந்தாம்மா வசு, மாப்பிள்ளைக்குக் கொண்டு போய் ஸ்வீட், காரம் குடுத்துட்டு வா,'' என்றார்.

''அப்பிடியே ஹரிக்கும் வேணும்னாக் குடுமா,'' என்றவர், ''நீயும் எடுத்துக்கோ மது,'' என்றார்.

''எனக்கு வேண்டாம்மா. கல்யாண நாளுக்கு முன்னாடி இருந்து இந்த ஸ்வீட்டையும், மிக்ஸரையும் பாத்துப் பாத்துத் திகட்டிப் போச்சு,'' என்றாள் மதுமதி.

''அப்புறம் உங்க வீட்ல எல்லாரும் எப்பிடியிருக்காங்க? உன்ன எப்பிடி வெச்சுக்கறாங்க?''

''அதெல்லாம் என் மாமியார் மட்டும் தான் பிரச்சன. ஆனா அவங்களையும் மேடம் கவுத்துட்டேனில்...''

''மெதுவாப் பேசுமா,'' என்று மகளை அதட்டியவர், ''வசு, நீயும் உக்காந்து ஸ்வீட் காரம் எடுத்துக்கோமா,'' என்றார்.

பதில் சொன்
''என்னமா நீங்க கேட்டதுக்கு தான
னேன்,'' என்று அலுத்துக் கொண்ட மகளிடம், ''சரி. குடிக்
கறதுக்கு என்ன வேணும்னு மாப்ளகிட்ட கேட்டுட்டு
வா,'' என்றார்.

''அவருக்கு டீயே போடுங்கமா.''

''நீ கேட்டுட்டு வா மது,'' என்று அவர் சொல்லிக் கொண்
டிருக்கும் போதே, ''சரிசரி,'' என்று எழுந்து சென்றிருந்
தாள் மதுமதி.

ஹாலுக்கு வந்த தங்கையிடம், ''மாப்பிள்ளைக்கு நம்ம தோப்பையெல்லாம் கொஞ்சம் சுத்திக் காட்றது?'' என்று கேட்டான் ஹரிவரதன்.

''ஏண்ணா நீங்க சுத்திக்காட்ட மாட்டீங்களாக்கும்?''

''அவருக்கு நீ தான் வரணுமாம்!''

''சும்மா சொல்லாதீங்க,'' என்று மதுமதி, ''குடிக்கறதுக்கு என்ன வேணும் உங்களுக்கு?'' என்று கணவனிடம் கேட்டாள்.

''நீ போடாத காஃபி, டீ எதுவானாலும்...'' என்ற கணவனைப் பொய்க் கோபத்துடன் பார்த்த மதுமதி, ''நானே போட்டு எடுத்துட்டு வர்றேன். இருங்க,'' என்று அங்கிருந்து நகர்ந்தாள்.

சிறிது நேரத்தில் மதுமதியும், அவளுடைய கணவனும் சற்று வெளியே சென்று வருகிறோமென்று கிளம்பி விட்டிருக்க, தனது அத்தையுடன் சேர்ந்து சமைத்த அனைத்தையும் டேபிளின் மீது பரிமாறுவதற்குத் தயாராக எடுத்து வைத்தாள் வசுமதி.

''வசு!''



''அத்தெ.''

''ஹரியக் கொஞ்சம் கூப்புடுமா.''

''இதோ கூப்புட்றேன் அத்தெ,'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ''என்னமா?'' என்று வந்திருந்தான் ஹரிவரதன்.

''கொஞ்சம் சாமான் வேணும்பா. வாங்கிட்டு வர முடியுமா?''

''என்ன வேணும்? சொல்லுங்க,''

''மதுவ எப்படி வெறும் கையோட அனுப்பறது? வெண்ணெய் நிறைய சேந்திருக்கு. ஸ்வீட் செஞ்சு குடுத்தனுப்பிடறோம்,'' என்றவர் அதற்குத் தேவையான பொருட்களை மகனிடம் சொல்லியனுப்பினார்.

அதே நேரம் வீட்டிற்குள் ரிஷிவரதன் வர, ''வாப்பா வா!'' என்று எரிச்சலுடன் சிறிய மகனை வரவேற்றார் பத்மாவதி.

''அவங்கிட்ட குடுத்தனுப்பு ஹரி,'' என்று பெரிய மகனைப் பார்த்துச் சொன்னவர், ''என்னடா கட வரைக்கும் போய்ட்டு வரணும். முடியுமா?'' என்று கேட்டார்.

''பின்ன?'' என்றவன், ''குடுங்கண்ணா, நான் போய்ட்டு வர்றேன்,'' என்று உடனே கேட்டான்.

ஆயிரம் ரூபாய்ப் பணத்தை எடுத்துத் தம்பியிடம் கொடுத்த ஹரிவரதன், ''என்ன வேணும்னு அம்மாகிட்டயே நல்லாக் கேட்டுட்டுப்போய்டு,'' என்றவன், ''நானும் ஒரு அரை மணி நேரத்துல வந்துட்றேம்மா,'' என்று கிளம்பி விட்டிருந்தான்.

ஏற்கெனவே சொன்னது போல மதுமதி அன்று மாலையே கணவனுடன் கிளம்பி விட்டிருக்க, மீண்டும் போரடிக்கத் தொடங்கி விட்டிருந்தது வசுமதிக்கு.

நாளை சுசீலா அத்தை தனது பிறந்த வீட்டிற்குச் செல்லப் போவதாகச் சொன்னது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது.

தானும் கணவனிடம் கேட்டுப் பார்க்கலாமா என்று நினைத்தவள் உடனே வேண்டாமென்ற முடிவுக்கு வந்து விட்டிருந்தாள்.

இப்பொழுது சில நாட்களாகத்தான் நல்லவிதமாகப் பேச ஆரம்பித்திருக்கிறான். அதை நாமே கெடுத்துக் கொள்ளக் கூடாதென்று முயன்று தனக்குத்தானே சமா தானம் சொல்லிக் கொண்டாள்.

எப்பொழுதும் இல்லாத விதமாக அன்று ஏனோ மனம் சமாதானமடைய மறுத்தது. அதே சமயம் கணவனிடம் ஒரு வார்த்தை கேட்டுப் பார்க்கலாம் என்றாலும் அதற்கும் பயமாக இருந்தது.

வீட்டிற்கு வந்த தங்கையையும், தங்கை கணவரையும் வரவேற்றனர் சோமநாதன், கோகிலாவும்.

ஏனோ முன்னைப் போலக் கலகலவென்று பேச யாராலுமே முடிந்திருக்கவில்லை.

முக்கியமாக சோமநாதனுக்கு.

கணவனுக்குப் பயந்து கோகிலாவும் இப்பொழுதெல் லாம் முடிந்த அளவு பேசாமல் இருந்து கொள்ளப்பழகி விட்டிருந்தார்.

பாவம், மகள் சற்றும் பழக்கமில்லாத புதுச் சொந்தங் களுடன் எப்படியெல்லாம் சிரமப்படுகிறாளோ என்று அவருடைய மனம் மட்டும் எப்பொழுதும் போலக் கிடந்து அடித்துக் கொண்டது.



சோமநாதனுக்கும் மனைவியின் நிலை தான் என் றாலும், அவர் அதைத் துளியும் வெளிக்காட்டிக் கொள் ளாததோடு வேண்டுமென்றே கோபமாகவும் காட்டிக் கொண்டார்.

ஆமாம், வெளியில் அப்படிக் காட்டிக் கொண்டார். அவ்வளவே,

அதற்கே அவர் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.

''என்னண்ணா, எப்பிடியிருக்க?''

தங்கை கேட்க, ''எனக்கென்ன, ரொம்ப நல்லாரக் கேன்!'' என்றார் சோமநாதன்.

''பாவம், வசுவுக்கு இங்க வாறதுக்கு ரொம்பவும் இஷ்டம். ஆனா...''

''இனி என்ன பண்ண முடியும், அவ தலைல அப்பிடி எழுதியிருக்கு...''

''ம். சொல்லுண்ணா.''

''என்னத்த சொல்லணுங்கற?''

''வசு அவளாவே தேடிக்கிட்ட மாப்பிள்ளைய விடவும் கூடப் பிரமாதமா ஒரு மாப்பிள்ளைய உன்னால தேர்ந்தெடுக்க முடிஞ்சிருக்கும்னு நினைக்கறியா?''

''அதுலென்ன சந்தேகம்?''

விட்டேற்றியாகப் பதில் சொன்ன தனது அண்ணனை எதுவும் பேசாமல் பார்த்தாள் சுசீலா.

அதே நேரம், ''எடுத்துக்கோங்கக்கா,'' என்று டிஃபன் ப்ளேட்களைக் கொண்டு வந்து வைத்தார் கோகிலா.

''ஒரு ப்ளேட் மட்டும் போதும் கோகிலா. மீதிய எடுத் துட்டுப் போய்டு. அவர் வெளிய கிளம்பிட்டார். இனி

சாப்பாட்டுக்குத் தான் வருவார்,'' என்று தனது நாத்தனார் சொல்ல,

''அடடா, தெரிஞ்சிருந்தா நான் கொஞ்சம் சீக்கிரம் எடுத்துட்டு வந்திருப்பேனே...'' என்றார் கோகிலா.

''அதுசரி, ரொம்ப முக்கியமான வேலையாம். இதுக்கே உன்னால லேட்டாயிடுச்சுன்னு எம்மேல கோபப்பட்டுட்டுப் போறார்,'' என்றவர், ''குடிக்க மட்டும் ஸ்ட்ராங்கா ஒரு கப் காபி குடு,'' என்றார்.

''சும்மா வீம்புக்கன்னே பேசாதண்ணா. உன் மனச்சாட்சியத் தொட்டுச் சொல்லு...''

''எப்பிடிச் சொன்னாலும் என் பதில் ஒன்னு தான்...''

''ஏண்ணா இப்பிடியிருக்க, எவ்வளவு திறமையான பையன்...''

''அது சரிதான். இல்லன்னா இந்த வேலைய செஞ்சிருப்பானா? சரியான நம்பிக்க துரோகி...''

''போதுண்ணா. இத்தன நாளும் உன்ன நான் ரொம்பப் பெரிசா நினைச்சுட்டிருந்தேன். ஆனா நீ என்னடான்னா இப்பிடி சீப்பா திங்க்...''

''பேசு பேசு. என் நிலமைல நீ இருந்திருந்தா உனக்கு என்னோட நிலம புரிஞ்சிருக்...''

''என்ன பெரிய உன் நிலமை! நீ நடந்துக்கற விதத்துக்கு அவங்க மட்டும் நினைச்சிருந்தா உம் பொண்ண எப்பிடி வேணும்னாலும் கொடுமைப்படுத்தலாம்...

''ஆனா அவங்க அப்படிப்பட்டவங்க கிடையாது. ஆசையோட நம்ம வீட்டுக்கு வந்த பொண்ணுன்னு எல்லாரும் எப்பிடித் தலமேல தூக்கி வெச்சிருக்காங்க



தெரியுமா? நீ என்னதான் சிட்டில வாழ்ந்தாலும், பெரிய பிஸினஸ் மேனா இருந்தாலும், உன் பொண்ணு விருப்பப்பட்ட வாழ்க்கையைக் கூட உன்னால குடுக்க முடியலயே.

''ஆனா கிராமத்து மனுஷங்களாவே இருந்தாலும் அவங்க குழந்தைகளோட விருப்பு வெறுப்புகளுக்கு முக்கியத்துவம் குடுக்கறாங்க. பணத்த ஒரு பொருட்டா மதிக்கறதில்ல. உள்ள இருக்கற மனசத்தான் எப்பவும் பெருசா நினைக்கறாங்க.

''அப்படிப்பட்டவங்களுக்கு உன் தப்புக் கணக்கு இன்னும் எந்த அளவுக்கு கேவலமாத் தெரியும்னு நீயே கொஞ்சம் யோசிச்சுக்கோ, உன்னால முடிஞ்சா.

''சரி. அப்பிடியே உன்னோட கோணத்துல இருந்தே இப்பப் பாக்கலாம். நீ கோடீஸ்வரன் தான். இல்லேன்னும் சொல்லல. நீ பலப்பல வருஷம் உழைச்ச ரொம்பக் கஷ்டப்பட்டு தான் இந்த நிலைக்கு வந்திருக்க. ஆனா அந்தத்தம்பி நினைச்சா இன்னும் ஒரு சில வருஷங்களுக்குள்ளயே ஏன் அதுக்கும் முன்னாடியே கூட உன்னளவுக்கு, இல்லில்ல, உன்னவிடப் பெரிய ஆளாவே வந்துட முடியும், ஐ மீன் பணத்துல.

''அப்பிடி வந்ததுக்கப்புறம் நீ எந்த முகத்த வெச்சுக் கிட்டுப் போய் அவங்களப் பாத்துப் பேசுவ? பணம் வந்ததும் வந்துட்டார்னு அப்ப அவங்க உன்னப் பாத்துக் கைகொட்டிச் சிரிக்கமாட்டாங்கன்றதுல என்ன நிச்சயம்?

''ஆனா அப்பவும் அவங்க அந்த மாதிரியெல்லாம் செய்ய மாட்டாங்க. ஏன்னா அவங்க தான் எந்தக் காலத்துலயுமே பணத்துப் பெரிசா மதிச்சவங்க கிடையாதே...''

கோகிலா காபி கொண்டு வந்து கொடுக்க, அண்ணன், தங்கை இருவரும் எடுத்துக் கொண்டனர்.

''எங்க வாசவி, வசந்த் ரெண்டு பேரையும் காணல.''

''ஸ்கூலுக்குப் போயிருக்காங்கக்கா.''

''இன்னைக்குமா?''

''ஆமாக்கா. அவங்களுக்குத் தான் இந்த வருஷம் பப்ளிக்காச்சே!'' என்று கோகிலா சொல்ல, ''அது சரிதான்,'' என்றார் சுசீலா.

''இதுக்கு மேல எனக்கும் என்ன சொல்றதுன்னே தெரியலண்ணா. ஏன் இவ்வளவு யோசிக்கற? நீ இன்னொன்னயும் யோசிச்சுப் பாரேன்.

''உன்னோட தொழில் நுணுக்கங்களெல்லாம் அந்தத் தம்பிக்கும் முழுசாத் தெரியும். ஏன் அவரு இங்கயே வந்து உனக்குப் போட்டியா இதே தொழில்ல இறங்கினா நீ என்ன பண்ணுவ? அப்பிடிப் பணத்துக்கு ஆசப்பட்றவங்களா இருந்தா உன்ன இருக்கற இடமே தெரியாம செஞ்சுட - அது ரொம்பக் கஷ்டமான விஷயம் தான்னாலும் - அந்தத் தம்பி நினைச்சார்னா முடியும். சொல்லுண்ணா...

''ரெண்டு பேரோட மனசு இணைஞ்சு போகும் போது இருக்கறவங்க, இல்லாதவங்க அப்பிடீங்கறதெல்லாம் ரெண்டாம்பட்சமாயிடுது. ஏன் அது ஒரு பொருட்டே இல்ல.

''அந்தத் தம்பிய நீ அனுப்பி வெச்சா நான் வசுவயும் கூட இருந்து பிஸினஸப் பாத்துக்க சொல்றேன்னு நீ ஒரு வார்த்த சொன்னப்பவே அது எம்மனசுலயும் படத்தான் செஞ்சது.

''ஆனாலும் அந்தத் தம்பியப் பத்தி எனக்கும் ரொம்ப நல்லாத் தெரியுமே. நல்ல பையன்னு தைரியமா அனுப்பினேன்.



''அதுக்காக நான் வசுவத் தப்பு சொல்றேன்னு நினைச்சுக்காத. வசுவும் நல்ல பொண்ணு தான்.''

ஏதோ அண்ணன் அதிசயமாகக் காது கொடுத்துக் கேட்கிறாரே என்று நியாயமென்று தன் மனதிற்குப் பட்டதையெல்லாம் சொல்லிக் கொண்டே போனார் சுசீலா.

# 22

நீண்ட நாட்களுக்குப் பிறகு அன்று அதிசயமாக அனைவருமே வீட்டிலிருப்பதைக் கண்டார் பத்மாவதி.

மதுவும், மாப்பிள்ளையும் மட்டும் வந்திருந்தால் இன்னும் களை கட்டியிருக்குமே என்று நினைக்கத் தோன்றியது.

தனது அத்தை சொன்னது போலப் பூக்களைத் தொடுத்துக் கொண்டிருந்தாள் வசுமதி.

மாமனாரும், கொழுந்தனாரும் டி.வி. பார்த்துக் கொண்டிருக்க, தனது கணவன் தங்களுடைய அறையில் ஏதோ முக்கியமான பிஸினஸ் வேலையாக இருப்பது தெரிந்தது.

அனைவரும் காலை டிஃபனை முடித்து வெகு நேரம் ஆகியிருக்க, டீ கலக்கிக் கொடுக்கலாமென்று எழுந்திருந்தாள்.

அதே நேரம் தனது மொபைல் ஒலிக்க ஓடிச் சென்று எடுத்துப் பார்த்தாள்.

தந்தை!

''சொல்லுங்கப்பா,'' என்று அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தாள்.

எதிர்ப்புறத்தில் தந்தை சொன்னதை வசுமதியால் நம்பவே முடிந்திருக்கவில்லை. உண்மையிலேயே தனது காதுகளில் சரியாகத் தான் விழுந்ததா என்று சந்தேகம் வந்து விட்டிருந்தது.

ஆனால் இன்னும் பத்து நிமிடங்களுக்குள் நானும், அம்மாவும் அங்கு உங்களுடைய வீட்டில் இருப்போம் என்று தந்தை மீண்டும் ஒரு முறையும் சொன்னதில் இல்லை தனது காதுகளில் சரியாகத் தான் விழுந்திருக்கிறது என்பது தெளிவானது.

''சரிப்பா. வாங்க,'' என்று போனை வைத்திருந்தவளுக்கு ஏதோ ஒரு இனம் புரியாத பயத்தில் கை கால்களனைத்தும் விட்டுப் போயிருந்தன.

''என்னமா, யார் போன்ல?'' தனது அத்தை கேட்க, விஷயத்தைச் சொன்னாள்.

தயக்கத்துடன் தான்.

ஆனால், ''அப்படியா, ரொம்ப சந்தோஷம்,'' என்று தனது அத்தையிடமிருந்து வந்த பதிலில் சற்றுப் பயம் தெளிந்து ஆசுவாசமாக உணர்ந்தாள்.

''அதேநேரம் குடிக்க டீ கிடைக்குமா?'' என்று தனது கணவனும் தங்களை நோக்கி வருவதைக் கண்டாள்.

''ஹரி!''

''என்னமா?''

உன் மாமனாரும், மாமியாரும் இப்ப வரப் போறாங்களாம்பா. இப்பதான் போன் வந்தது என்றாள்.

சுத்தமாக உணர்ச்சி துடைக்கப்பட்ட கணவனின் முகபாவனை மீண்டும் வசுமதியின் நெஞ்சுக் கூட்டிற்குள் குளிரைப் பரப்பியது.



எதற்காக இப்படித் திடீரென்று வருகிறார்களோ என்னவோ என்று நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொண்டது.

நல்ல விஷயம் தானே, தன்னால் ஏன் சந்தோஷப்பட முடியவில்லை என்று ஆச்சரியமாகவும்.

''என்னப்பா?'' என்று மகனைப் பார்த்த பத்மாவதி, அவனிடமிருந்து பதிலெதுவும் வராததில், ''உனக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லைன்னு எனக்கும் தெரியும். இருந்தாலும் சொல்றேன். நம்ம வீடு தேடி வர்றவங்க கிட்ட சிரிச்சுப் பேச வேண்டியது நம்ம கடமப்பா...'' என்று தயக்கத்துடன் சொன்னார்.

ஆனால் மகனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட முக பாவனையில் அவர் பாதியிலேயே பேச்சை நிறுத்தி விட்டிருக்க, ''டீ போட்றேன் அத்தெ,'' என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டு நகர்ந்தாள் வசுமதி.

சொன்னது போலப் பத்து நிமிடங்களில் வந்த சோமநாதனையும், கோகிலாவையும் வசுமதியின் மாமனாரும் மாமியாரும் எழுந்து சென்று சந்தோஷமாக வரவேற்றனர்.

வீட்டிற்குள் வந்தவர்களை அமரச் சொல்லி உபசரித்து, நலம் விசாரித்துப் பேசினர்.

அதே நேரம் உள்ளறையிலிருந்து ஹாலுக்கு வந்த ஹரிவரதன் தனது மாமனாரையும் மாமியாரையும் ''வாங்க!'' என்று ஒற்றை வார்த்தையில் வரவேற்றான்.

சோமநாதன் சோஃபாவில் அமர்ந்திருக்க, தனது தாயுடன் பேசியவாறு நின்றிருந்த மாமியாருடன் மட்டும் மேலும் சில வார்த்தைகள் பேசினான்.

''வாங்க!'' என்று தனது சம்பந்தியம்மாவைத் தன்னுடன் உள்ளறைக்கு அழைத்து வந்தார் பத்மாவதி.

''வசு!''

தனது அத்தை அழைக்க சமையலறையிலிருந்து வெளியே வந்தாள் வசுமதி.

வந்தவள் சிரித்த முகத்துடன் தனது தாயை வரவேற்ற தோடு, தம்பி தங்கையைப் பற்றியும் விசாரித்தாள்.

''அப்பாகிட்டப் பேசிட்டு வந்துடுமா. போ,'' என்ற தனது அத்தையின் வார்த்தைகளில் உடனே ஹாலுக்கு வந்து தாயிடம் போலவே தந்தையிடமும் பேசினாள்.

கணவன் அவன் பாட்டுக்கு டி.வி.யைப் பார்த்துக் கொண்டிருக்க, மீண்டும் மாமனாரும் தந்தையும் பேசத் தொடங்கியிருந்ததைக் கண்டாள்.

கடவுளே! கணவன் ஒப்புக்காவது தந்தையுடன் ஒரு வார்த்தை பேசினானோ என்னவோ என்று மனம் கிடந்து அடித்துக் கொண்டது.

மீண்டும் உள்ளே வந்திருந்த மருமகளிடம் பத்மாவதி, ''டிஃபன் ப்ளேட்ஸ் எடுமா, வர்றேன்,'' என்று சொல்ல, ''இதோ அத்தெ,'' என்று நகர்ந்தாள் வசுமதி.

சிறிது நேரம் சென்றிருந்தது.

கையிலிருந்த டீ டம்ளரைக் கீழே வைத்துவிட்டுத் தயக்கத்துடன் தனது மாப்பிள்ளையைப் பார்த்தார் சோமநாதன்.

ஹரிவரதனின் உணர்ச்சி துடைக்கப்பட்ட முகம் அவருடைய தவறை இன்னும் பன்மடங்கு பெரிதாக்கிக் காட்டியது.

ஒரு வழியாகத் தனது மாப்பிள்ளையிடம் பேச வாயைத் திறந்து விட்டிருந்தார்.

''என்ன மன்னிச்சுடுங்க மாப்ள!''

ஹரிவரதனிடம் கேட்கும் போதே குற்ற மனப்பான்மையில் அவருடைய குரல் கரகரத்து விட்டிருந்தது.



''அவ்வளவு சுலபமா சரின்னு விட்டுடற அளவுக்கு நானும் நடந்துக்கலேன்னு எனக்குத் தெரியும் மாப்ள...''

சோமநாதனின் தயக்கம் அங்கிருந்த அனைவருடைய மனங்களையுமே இளக்கிவிட்டிருந்தது.

மாமனாருக்கு என்ன பதில் சொல்லப் போகிறானோ என்பதைப் போல அனைவரும் ஹரிவரதனின் முகத்தையே பார்த்தனர்.

''எந்த அளவுக்கு யோசிக்காம நான் நடந்துட்டிருக் கேனுங்கறத என்னால இப்பதான் முழுசாப் புரிஞ்சுக்க முடியுது. நீங்க மன்னிக்கணுங்கறதுக்காக மட்டும் நான் இப்ப பேசல. இன்னும் பேசாம இருந்து மேலமேல தப்பு பண்ண வேண்டாமேன்னு தான்...''

''பரவாயில்ல. விடுங்க.''

முதன் முறையாக வாயைத் திறந்திருந்தான் ஹரி வரதன்.

''அப்பிடின்னா...''

''எனக்கு எந்தக் கோபமும் இல்ல மாமா. உண்மைய தான் சொல்றேன். நம்புங்க. அதோட தயவு செஞ்சு நடந்ததையெல்லாம் மறந்துடுங்க!'' என்றான்.

அப்படிச் சொன்ன ஹரிவரதனின் கைகளை, ''மாப்ள!'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் பிடித்துக் கொண்டு விட்டிருந்தார் சோமநாதன்.

''உங்க பெருந்தன்மையான குணத்துக்கு முன்னாடி நான்...''

''தயவுசெஞ்சு நடந்து முடிஞ்சதப் பத்தி இனி பேச வேண்டாமே மாமா!'' என்றவன் தன்னருகில் நின்றிருந்த மனைவியிடம், 'இல்லையாடா?' என்று கேட்டான்.

கண்கள் கலங்கி விட்டிருக்க, ஆமாமென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் வசுமதி.

அங்கிருந்த அனைவரின் முகங்களுமே புன்னகையில் மலர்ந்திருந்ததைப் பார்த்த சோமநாதனுக்கும், கோகிலா விற்கும் சந்தோஷத்தில் நெஞ்சு நிறைந்து போய்விட் டிருந்தது.

மேலும் சிறிது நேரமும் கூடப் பேசிக் கொண்டிருந்து விட்டு, ஒரு அவசர வேலையென்று அவர்கள் இருவரும் கிளம்பி விட்டிருந்தனர்.

''எப்ப ஊருக்கு வர்றீங்க மாப்ள? முறையா எதுவுமே செய்யாம விட்டுட்டோம்!'' என்று மீண்டும் புலம்பும் குரலில் சொல்ல ஆரம்பித்திருந்தவரிடம், ''அதனால என்ன, இனிமேல் விருந்தாட வந்துட்றோம் மாமா. கவலப்படாம போய்ட்டு வாங்க,'' என்று புன்னகையுடன் விடை கொடுத்தான் ஹரிவரதன்.

''ஆமாம்மா. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நானும் அவரும் வர்றோம்,'' என்று சந்தோஷ மாகத் தானும் சொன்னாள் வசுமதி.

அவர்கள் கிளம்பியதும், ''வசு, இனி நாமளும் கிளம்ப லாமா?'' என்று கேட்ட கணவனைப் புரியாமல் பார்த் தாள் வசுமதி.

''என்ன பாக்கற? மாமனார் வீட்டுக்குத் தான். அவங் களுக்கு முன்னாடி நாம போய் நின்னு ஷாக் குடுக்கலாம். என்னடா விருந்தாட வாங்கன்னு கூப்புட்டோம் தான். அதுக் காக இப்பிடியான்னு அத்தையும் மாமாவும் அப்பிடியே திகைச்சுப் போய் நிக்க வேண்டாம்?'' என்றான்.

''ஒன்னும் வேணாம். நாமும் கொஞ்சம் பந்தாப் பண்ண லாம். இன்னுமொரு மாசம் போகட்டும்,'' என்று பட் டென்று வசுமதி பதில் சொல்ல, ''அப்பிடிச் சொல்லு மருமகளே!'' என்று சிரித்தார் பரந்தாமன்.

ஏன், அனைவருமே!

★